2017 ஜூன் 16-18
விலை: 30/-

ஹிஜ்ரி 1438 ■ ஷஃபான் பிறை 21 - 23 ■ பக்கங்கள் 16 ■ மணி 10 ■ ஒளி 024

நவமணி சதி அந்த
NAVAMANI WEEKLY
# நவமணி
தமிழ் பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017

கட்டாரை ஒதுக்கும் மறைகரம்







## தாக்குதல் சம்பவங்கள் குறித்து
# ஜனாதிபதி பிரதமருடன் பேசி விரைவில் உரிய தீர்வு
## முஸ்லிம் தூதுக் குழுவிடம் சந்திரிகா உறுதி



நாட்டில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக முடுக்கிவிடப்பட்டுள்ள தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து சட்டத்தையும் ஒழுங்கையும் அமுல் செய்வதற்கு ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் முஸ்லிம் சிவில்

15 »»»»

# குழப்பத்திற்கு தூபமிடும் டிலந்தவை கைது செய்யவும்
## அமைச்சர் றிஷாத் வலியுறுத்து



பொதுபலசேனா இயக்கத்தின் செயலாளர் ஞானசாரதேரரைக் கைதுசெய்தால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் எனவும் நாட்டிலே பாரிய குழப்பங்கள் உருவாகுமென்றும் அடிக்கடி கூறி வரும் அவ்வியக்கத்தின் தலைவர் டிலந்த விதானகேயை பொலிஸார் உடன் கைதுசெய்து, சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் றிஷாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மற்றும் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில பொலிஸில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு தேடப்பட்டுவரும் ஒருவரை கைதுசெய்ய வேண்டாம் என டிலந்த பிரச்சாரங்களை மேற்கொள்வது சட்டத்தையும், நீதியையும் கேலிக்கூத்தாக அவர் நினைப்பதையே நிரூபிக்கின்றது. யாரையும் கைது செய்ய

15 »»»»

# பாக்.பறக்கிறார் மஹிந்த



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19ஆம் திகதி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்கிறார்.

பாகிஸ்தான் அரசின் அழைப்பிலேயே அவர் இந்த விஜயத்தை மேற்கொள்கிறார். ஜப்பானில் 10 நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷ, கடந்த சனியன்றே நாடு திரும்பினார்.

# உள்ளூராட்சி வர்த்தமானி அடுத்த அமர்வில் நிறைவேற்றம்
## அமைச்சர் அமரவீர

■ அ.அருண் பிரசாந்த்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை அடுத்த பாராளுமன்ற அமர்வில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். மருதானையில் அமைந்துள்ள

15 »»»»

# ஞானசாரதேரருக்கு பிடியாணை



■ அ.அருண் பிரசாந்த்

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதிமன்றத்தினால் நேற்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

புனித அல்- குர்ஆனை அவமதித்தமை மற்றும் வட்டரக்க விஜித தேரரினால் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அத்துமீறி புகுந்து குழப்பத்தை ஏற்படுத்தியமை தொடர்பான வழக்குகள் மீதான விசாரணை நேற்று முற்பகல் எடுத்துக் கொள்ளப்பட்டது

இதன்போது, ஞானசார தேரர் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தினாலேயே இவ்வாறு அவரை கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதேநேரம், தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும்



15 »»




## மல்லவப்பிட்டி பள்ளிதாக்குதல்
# பொதுபலசேனாவின் இருவர் கைது



## நால்வரை தேடி வலைவீச்சு

■ பீ.எப்.எம் றிஷாட்

கடந்த மே மாதம் 21ஆம் திகதி குருநாகல், மல்லவபிட்டிய ஜும்ஆப் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட பெற்றோல் குண்டு தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த இருவரும் பொதுபல சேனா அமைப்பின் செயற்பாட்டாளர்கள் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

15 »»»»

# விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை
## 22 இல் விவாதம்



■ அ.அருண் பிரசாந்த்

வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் குரேயிடம் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பிலான விவாதம் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதனால், ஆளும்- எதிர்த்தரப்பினருடனான பேச்சுக்களில் முதல்வர் தற்போது தீவிரம் காட்டி வருகின்றார் என்றும் தெரியவந்துள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று நேற்று முன்தினம் இரவு ஆளுநர் றெஜினோல்ட் குரேயிடம் கையளிக்கப்பட்டது.

15 »»»»

NOVEMBER UMRAH

PAY IN 12 MONTH INSTALLMENTS!!

First Choice for Pilgrims,
MOULANA TRAVELS & TOURS
IATA
நம்பிக்கையின் நட்சத்திரம்
"சென்றவரை கேளுங்கள் செல்வோம் வாருங்கள்"
No 195, Galle Road, Bambalapitiya
E: info@moulanatours.com W: www.moulanatours.com

Colombo 0720 999 555
Kandy 0720 999 777
Batticaloa 0720 999 666




உங்கள் சிறுவர்
சேமிப்புக் கணக்கின் சேமிப்புத் தொகையை
வளர்த்திடுங்கள்
வெகுமதிகளை பெற்றிடுங்கள்

12 வயதுக்குட்பட்டவர்களால் செய்யப்படும் வைப்புகளுக்கு இச்சலுகை செல்லுபடியாகும்.
இச்சலுகை 2017 ஜூன் 12 முதல் ஆகஸ்ட் 31 வரை அல்லது பரிசுகள் கையிருப்பிலிருக்கும் வரை | நிபந்தனைகளுக்குட்பட்டது

அழையுங்கள் 011 7 756 756
www.amanabank.lk
இது உங்கள் வங்கி
Amãna Bank

# திரைக்குப் பின்னால்

- சஞ்சாரி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சூனியம் செய்த தகடு கண்டுபிடிக்கப்பட்டமை, வைத்திய பரிசோதனைக்குப் பின் பிரதமர் நாடு திரும்பியமை, வட மாகாண சபை அமைச்சர்களுக்கான ஊழல் குற்றச்சாட்டு, அமைச்சர் ஜோன் அமரதுங்க ஊடகவியலாளரை அச்சுறுத்தியமை, ஞானசார தேரர் கைது விவகாரம் என்பன காரணமாக இவ்வாரம் அரசியல் களம் மிகச் சூடானதாக இருந்தது.

## சூனியம் தகட்டில் மோடி ஆடையில் மைத்திரி

பதவிய கெபிதிகொல்லாவ பிரதான வீதிக்கருகே பஹல உஸ்கல்ல மயான பூமியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட வெண்கலத் தகடு ஒன்று நாட்டில் பரபரப்பாக பேசப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது.

கெபிதிகொல்லாவ பஹல உஸ்கல்ல மயான பூமியில் இரு இளைஞர்களால் கண்டுபிடிக்கப்பட்ட தகட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வட மத்திய மாகாண சபை முன்னாள் அமைச்சர் எச்.நந்தசேன மற்றும் மாகாண அமைச்சர் சுசில் குணரத்ன, அவரது மகன் துசித குணரத்ன, அமைச்சர் துமிந்த திசாநாயக்க, அவரது சகோதரர்களான கவின் திசாநாயக்க மற்றும் சட்டத்தரணி அமில திசாநாயக்க, ரவீந்திர திசாநாயக்க ஆகியோர்களது பெயர்கள் மற்றும் அதற்கூடாக கீறப்பட்ட சதுரங்களும் இந்த தகட்டிலிருந்துள்ளன.

பத்து அங்குல நீளமுள்ள இந்த பத்திரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் படம் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அவர் அணிந்திருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆடையை அணிந்திருப்பது போன்றே கீறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முழுநாடும் பேசும் விடயமாக மாறியுள்ள இந்த சூனியம் பற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதனன்று நடைபெற்ற ஐ.ரி.என். தொலைக்காட்சியின் 38 வருட நிகழ்வில் உரையாற்றும் போது குறிப்பிட்டிருந்தார். சூனியம் வைத்தேனும் என்னை அச்சுறுத்த முற்சிக்கின்றனர். சூனியங்களுக்கு ஒருபோதும் நிலைகுலைய மாட்டேன். பௌத்தன் என்ற வகையில் நான் பொறுமையுடன் செயற்படுவேன் எனச் சிரித்துக் கொண்டே குறிப்பிட்ட ஜனாதிபதி, ஹொரவப்பொத்தானையிலே இது வைக்கப்பட்டிருந்தது. வைக்கப்பட்டது யாரால் என்பதை ஊகித்துக் கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

### விமான நிலையத்தில் முஸ்லிம் தாக்குதல் பற்றி பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்த பொன்சேகா

வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சனியன்று நாடு திரும்பினார். வழமைக்கு மாறாக ஐ.தே.க. அமைச்சர்கள், எம்.பிக்கள் நிறையப் பேர் பிரதமரை வரவேற்பதற்கு விமான நிலையத்திற்குச் சென்றிருந்தனர். சத்திரசிகிச்சை ஒன்று செய்யும் நோக்கிலே பிரதமர் அமெரிக்கா சென்றிருந்தார். மூன்றுநாள் வைத்திய பரிசோதனையின் பின் சத்திர சிகிச்சை செய்வது அவசியமற்றது என வைத்தியர்கள் ஆலோசனை தெரிவித்திருந்தனர். வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய அடுத்த தினமே பிரதமர் அலுவல்களில் ஈடுபட்டார். ஜூன் ஐந்தாம் திகதி சர்வதேச சமுத்திர தினத்தை முன்னிட்டு நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா. மகாநாட்டிலும் பிரதமர் உரையாற்றினார்.

விமான நிலையத்திலே முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் இனவாதச் செயற்பாடுகள் பற்றி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர். அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே முதலில் இந்த விவகாரத்தை பிரதமரின் அவதானத்துக்கு கொண்டு வந்தார். அதன் பின் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார் ஆகியோரும் நடக்கும் நடப்புகள் பற்றி எடுத்து விளக்கினர். பிரதமர் உடனே அமைச்சர் சாகல ரத்னாயக்க மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோரை தனியாக அழைத்துப் பேசியுள்ளார். இது குறித்து கொழும்பு சென்றதும் மகாநாடு ஒன்றைக் கூட்டி ஆராய்வதாக பிரதமர் எம்.பிக்களிடம் தெரிவித்தார்.

### அமைச்சரவையில் ஞானசார தேரர் விவகாரம்

கடந்த ஜனவரி 25ஆம் திகதி ஹோமாகம நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பிரகீத் எக்னலிகொட தொடர்பான வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்துக்கு அத்துமீறிப் பிரவேசித்து நீதிமன்ற நடவடிக்கைகளை சீர்குலைத்ததற்காக கைது செய்யப்பட்ட பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு பின் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பாக ஹோமாகம மஜிஸ்ரேட் நீதவான் ரங்க திசாநாயக்க தொடர்ந்திருந்த வழக்கு விசாரணை மேல் நீதிமன்றத்தில் கடந்த மாதம் நடைபெறவிருந்தது. வழக்கில் கடந்த மூன்று தவணைகளுக்கும் ஞானசார தேரர் ஆஜராகவில்லை. இருமுறை சுகவீனமுற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. மூன்றாவது முறை கொலை அச்சுறுத்தல் என அறிவிக்கப்பட்டது. ஞானசார தேரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திரந்த வலயித்த ஞானசார தேரருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்ப

என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

நீதி, ஊடக அமைச்சர் மங்கள சமரவீர பேசுகையில், முஸ்லிம்கள் இந்த விடயத்தில் இந்தளவுக்கு பொறுமையாக இருப்பது பெரிய விடயம் என்று தெரிவித்துள்ளார். அமைச்சர் கபீர் ஹாசிம் உட்பட பல சிங்கள அமைச்சர்களும் தாக்குதல்களைத் தொடர இடமளிக்கக் கூடாதெனத் தெரிவித்துள்ளனர்.

அரசியல் அரங்கில் அடிக்கடி சர்ச்சைகளை ஏற்படுத்திக் கொள்ளும் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க மீண்டும் ஒரு சர்ச்சையில் சிக்கியுள்ளார். பத்திரிகையாளர் ஒருவரை அச்சுறுத்திய விவகாரம் இப்போது ஊடக அமைப்

வலியுறுத்தியுள்ளார். முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, இலங்கை ஜமாஅதே இஸ்லாமிய தௌஹீத், ஜமாஅத், தப்லிக் ஜமாஅத், தேசிய சூறா கவுன்சில் போன்றன இந்த நெருக்கடி சந்தர்ப்பத்தில் ஒரு வலையமைப்புடன் பணியாற்றி வருகின்றன. இதேபோன்று இளைய தலைமுறையினரும் எதிர்காலத்தில் சமூகப் பணிகளிலீடுபடுவதற்கு முன்வர வேண்டும் என்று ஸுஹைர் அழைப்பு விடுத்துள்ளார்.

நிகழ்வில் மருத்துவ பீடாதிபதி ஜெனிபர் பெரேரா, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா

நிலை பற்றி கலந்துரையாடியுள்ளார். முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தாக்குதல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இந்த அரசினை பதவிக்கு கொண்டு வருவதற்கு 99 சதவீதமான முஸ்லிம்கள் ஆதரவு வழங்கினார்கள்.

அந்த நிலையில் தாக்குதல்கள் தொடர இடமளிக்க முடியாது என்று கூறிய சந்திரிக்கா தான் மன்னிப்புக் கேட்பதாக பலமுறை தெரிவித்துள்ளார். நாட்டில் சட்டமும் நீதியும் நிலை நாட்டப்படுவதனையே முஸ்லிம்கள் எதிர்பார்ப்பதாக கலந்து கொண்ட முஸ்லிம் பிரதிநிதிகள் வலியுறுத்தித் தெரிவித்துள்ளனர். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 21 பேரும் கையொப்பமிட்டு ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கேட்டும் இதுவரை சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்று பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தவறு செய்தோர் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது அவசியம் எனத் தெரிவித்த சந்திரிக்கா தனது தந்தையைக் கொன்ற இரு பிக்குகளும் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டார்கள் என்றும் தான் பதவியில் இருக்கும் போது தவறு செய்த எத்தனையோ பிக்குகள் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். சுமார் 3 மணி நேரமாக இடம் பெற்ற கலந்துரையாடலின் பின் இப்தாரும் இடம்பெற்றது.

# சூனியத் தகட்டில் மோடி ஆடையில் மைத்திரி

தாகத் தெரிவித்துள்ளார்.

வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகும் பிரதிசொலிசிடர் ஜெனரல் ரோஹந்த அபேசூரிய சந்தேக நபர் பல்வேறு காரணங்களைக் கூறி ஆஜராகாது இருந்து வருகிறார். அவருக்கு பிடிவிராந்து பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். மேல் நீதிமன்ற நீதிபதிகளான எல்.ரி.பி. தெஹிதெனிய மற்றும் தேவிகா தென்னகோன் ஆகியோர் பிடிவிறாந்து பிறப்பிக்காது ஜூலை மாதம் 18, 19, 20ஆம் திகதிகளில் வழக்கு விசாரிக்கப்படும் என்றும் வழக்கிற்கு ஞானசார தேரருக்கு ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

### ஞானசார தேரர் எங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கிறார்

நீதிமன்றத்தில் ஆஜராகாது தலைமறைவாக இருக்கும் ஞானசார தேரரை பலம் வாய்ந்த அமைச்சர்கள் சிலர் ஒழித்து வைத்திருக்கிறார்கள் என குற்றஞ்சாட்டப்

புக்களின் பலத்த எதிர்ப்புக்குள்ளாகியுள்ளது. இது குறித்து அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரநாயக்கவில் கருத்துத் தெரிவித்திருந்தார். இன்று அரசு மக்களுக்கு உண்மையைச் சொல்வதற்கு ஊடகங்களுக்கிருக்கும் உரிமையை நிறைவேற்ற இடமளிப்பதில்லை. ஊடகவியலாளர்களுக்கு தாய் தந்தையரை ஞாபகப்படுத்தி ஏசி அச்சுறுத்துகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஒருவர் ஊடகவியலாளரின் தாயை நினைவுபடுத்தி ஏசும் அரசே இருக்கிறது. அமைச்சரவையே அப்படியிருக்க இந்த அப்பாவி மக்களுக்குப் பிரச்சினைகளைச் சொல்வதற்கு இடமளிப்பார்களா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அரநாயக்க சாமசர மலை மண்சரிவினால் வீடுகளை இழந்தவர்கள்

வின் ஊடகச் செயலாளர் அஷ்ஷேக் பாருக் பாஸில் ஆகியோருடன் முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர் எம்.எஸ்.எம். அர்ஷத், செயலாளர் பாத்திமா சனிஸாவும் உரையாற்றினர். மருத்துவ பீடத்தில் சிங்கள, தமிழ், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### சர்ச்சையில் வடமாகாண சபை முதல்வர் பதவியைத் தக்க வைத்துக் கொள்வாரா?

மக்கள் கைக்கு வழங்கப்பட்ட வட மாகாண சபை அதன் முதற் பதவிக் காலத்திற்குள்ளே பெரும் சர்ச்சைக்குள் சிக்கியுள்ளது. ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் எதிரொலியாக முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரனின் பதவிக்கு

### அம்பாந்தோட்டையிலிருந்த சகோதரக் கம்பெனி

இப்போது பொலன்னறுவையில் மக்கள் விடுதலை முன்னணி அடுத்த இரு மாதங்களுக்குள் மாவட்ட மட்டத்திலான பிரஜைகள் மாநாடு ஒன்றைக் கூட்டவுள்ளது. இதற்காக மாவட்ட மட்டத்தில் தயார்படுத்தும் கூட்டங்கள் இப்போது நடைபெற்று வருகின்றன. இவ்வாறான ஏற்பாட்டுக்கு பொலன்னறுவை சென்றிருந்த ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்து நெத்தி பொலன்னறுவையில் பல கூட்டங்களை நடத்தினார். ஒரு கூட்டத்தில் பேசிய ஒருவர், முன்பு அம்பாந்தோட்டையிலே இருந்தது இப்போது அது பொலன்னறுவையில்தான் இருக்கின்றது என்றார். கல் உடைப்பதாக இருக்கலாம். மணல்







இலங்கை மின்சார சபையின் பிரிவு 4 இற்கான தலைமையகக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா தெஹிவளையில் வியழனன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட போது எடுத்த படம்.

படுகிறது. சிலர் நீதி, புத்தசாசன அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ வைத்திருக்கிறார் என்றும் மற்றும் சிலர் அமைச்சர் சம்பிக ரணவக வைத்திருக்கின்றார் என்றும் கூறி வருகின்றனர்.

லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூட்டு எதிர்க்கட்சி செய்தியாளர் மகாநாட்டில் அமைச்சர் சம்பிக ரணவகவே மறைத்து வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டி கருத்துத் தெரிவித்தார். இதனை அமைச்சர் சம்பிக மறுத்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் கடந்த செவ்வாயன்று நடைபெற்றபோது வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க சமர்ப்பித்திருந்த அமைச்சரவைப் பத்திரமும் ஆராயப்பட்டது.

முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மை இன மதக் குழுக்களுக்கு எதிராகத் தொடரும் தாக்குதல்கள் காரணமாக வெளிநாடுகளில் நாட்டிற்கு அவப்பெயர் ஏற்பட்டு வருவதாகவும் நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இதனை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தார்.

அமைச்சரவையில் இந்த விடயம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அமைச்சர் சம்பிக ரணவக தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டினை மறுத்துள்ளார். ஞானசார தேரரை எதற்காக நான் வைத்திருக்க வேண்டும். அதனால் எனக்கு என்ன நன்மை கிடைக்கப் போகின்றது

ஒரு வருடத்துக்கு மேலாக முகாம்களில் வாழ்ந்து வருவதனை கண்காணிப்பதற்காக நாமல் ராஜபக்ஷ கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜனக ஹேரத்துடன் அரநாயக்க சென்றிருந்தார்.

இதேநேரம், இந்த விஜயத்தின் போது அங்கு வந்திருந்த அரநாயக்க பிரதேச அரச அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க கேகாலை அரச அதிபரைக் கேட்டுள்ளார். நாமல் ராஜபக்ஷவின் விஜயத்தின் போது அங்கு பிரசன்னமாகியிருந்த கிராம அதிகாரிகள் மற்றும சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### நெருக்கடி நிலைகளில் முஸ்லிம் இயக்கங்கள் ஆற்றும் பணி பாராட்டுக்குரியது என்கிறார் ஸுஹைர்

கொழும்பு மருத்துவபீட முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வு மருத்துவபீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். ஸுஹைர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அவர் தனதுரையில், அனர்த்த நிவாரணம் மற்றும் இனவாதச் செயற்பாடுகளில் முஸ்லிம் இயக்கங்கள் ஆற்றும் பணிகளை சமூகம் நன்றியுடன் நினைவு கூரும் அவசியத்தை

ஆப்பு வைக்குமளவிற்கு இந்த விடயம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஊழல் மோசடி செய்தோருக்கு எதிராக விசாரணை நடத்தப்படும் முறை குறித்து திருப்திப்படாது தமிழரசுக் கட்சித் தலைமைத்துவத்தின் ஆசீர்வாதத்துடன் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதை எழுதும் பொழுது அரசாங்கக் கட்சி 15க்கு 15 என்ற அடிப்படையில் பிரிந்து காணப்படுகிறது. எதிர்வரும் 22ஆம் திகதி வட மாகாண சபையின் தவிசாளர் சீ.கே. சிவஞானத்தினால் வட மாகாண ஆளுனர் ரெஜினோல்கு ரேயிடம் கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் இடம் பெறவுள்ளது. ஆனும் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ள நிலையில் அங்கு இது என்ன நடக்கப் போகின்றது என்பதனை முழுநாடுமே அவதானித்துக் கொண்டிருக்கின்றது. அதேநேரம் வட மாகாண சபையின் 4 அமைச்சர்களது பொறுப்புக்களையும் முதலமைச்சர் ஏற்றுள்ளார்.

### முஸ்லிம் சமூகத்திடம் பலமுறை மன்னிப்புக் கோரிய சந்திரிகா

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த புதனன்று அவரது கொழும்பிலுள்ள அலுவலகத்தில் முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து முஸ்லிம் சமூகம் அண்மைக் காலமாக எதிர்நோக்கும் நெருக்கடி

கரை போடுவதாக இருக்கலாம். மண் வெட்டுவது அரிசி ஆலை, வேலை கொடுப்பதெல்லாம் சகோதரர்களுக்குத் தேவையான விதத்திலே நடக்கின்றன என்று தெரிவித்தார். மன்பு இருந்ததிலும் தற்போது இருப்பதிலும் வேறுபாடே இல்லை என மற்றொருவர் தெரிவித்தார்.

### மாட்டுப்பட்டியில் ஊடகவியலாளர் மாநாடு

பாலுற்பத்தியாளர்கள் தாம் உற்பத்தி செய்யும் பாலுக்கு சரியான விலையைப் பெறமுடியாததினால் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை பற்றி விவசாய சம்மேளனத் தலைவர்களது கவனத்திற்கு கொண்டு வந்தனர். தம் பிரச்சினை பற்றி பாலுற்பத்தியாளர்கள் நாமல் கருணாரத்னவிடம் பேசினர். அப்போது நாமல் நாம் இதனை ஊடகங்களை அழைத்து அறிவூட்டுவோம். அதன் பிறகு நடவடிக்கை எடுப்போம் என்று கூறினர். ஊடகவியலாளர் மாநாட்டை புதுமுறையில் நடத்துவோம் எனத் தெரிவித்தார். மாடுகள் இருக்கும் பட்டிக்குச் சென்று விவசாயிகளை அழைத்து ஊடக மாநாட்டினை நடத்துவதன் மூலம் உண்மையாக பிரச்சினை உள்ளவர்களது கருத்தை ஊடகங்களுக்குச் சொல்வோம் என்று நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

# பிளாஸ்டிக் அரிசி இல்லை பயம் கொள்ள வேண்டாம்

## நுகர்வோர் சபை மக்களிடம் வேண்டுகோள்



பிளாஸ்டிக் அரிசி சம்பந்தமாக பெறப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் படி நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் அவ்வாறான செயற்கை அரிசியை கண்டு பிடிக்கவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தது.

அரிசி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தொழிற்சாலை தொழில்நுட்ப நிறுவனங்களினால் குறித்த பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அதனடிப்படையில் நுகர்வோர் விவகார அதிகாரசபை, நாட்டின் சகல மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரதேச காரியாலயங்களில் விசாரணை அதிகாரிகள் மூலம் பெறப்பட்ட அரிசி மாதிரிகளை தொழிற்சாலை தொழில்நுட்ப நிறுவனத்தினால் விசேட ஆய்வக சோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பெறப்பட்ட அறிக்கைகளுக்கு அமைய பரிசோதனை செய்யப்பட்ட எந்தவொரு அரிசி மாதிரியும் பிளாஸ்டிக் கொண்டது இல்லையென உறுதிப்படுத்தப்பட்டது.

அந்தவகையில், அரிசி தொடர்பில் தேவையற்ற பயத்தினை ஏற்படுத்தி கொள்ள வேண்டாம் என நுகர்வோர் விவகார அதிகாரசபை பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேநேரம், நுகர்வோரால் கடந்த சில தினங்களில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய சதொச உள்ளிட்ட பல கடைகளில் அரிசி மாதிரிகள் பெற்றுகொள்ளப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கோரிக்கைக்கு செவிசாய்க்காவிடின் மீண்டும் வேலைநிறுத்தம்

## தபால் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(அ.அருண் பிரசாந்த்)

அரச தமது கோரிக்கைகளுக்கு இருவாரங்களில் செவிசாய்க்காது போனால் 26 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் மீண்டும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிப்போம் என்று தபால் தொழிற்சங்கங்களின் கூட்டு முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

காலி, நுவரெலிய மற்றும் கண்டியில் அமைந்துள்ள ஆங்கிலேயர் காலத்து தபால் கட்டடங்களை நவீனப்படுத்தி, ஹோட்டலாக மாற்றும் அரசின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் நாடளாவிய ரீதியாக தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், இதில் 19000 ஊழியர்கள் ஈடுபட்டனர் என்றும் ஆரம்பக்கட்டமாக இடம்பெற்ற இந்தப் போராட்டமானது தமக்கு பாரிய வெற்றியளித்துள்ளது என்றும் தபால் தொழிற்சங்கங்களின் கூட்டு முன்னணி தெரிவித்தது.

இந்நிலையில், தம்மால் இதன்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அரச இரண்டே வாரங்களில் உரிய பதிலை வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள மேற்படி முன்னணியானது, அதனை மேற்கொள்ள அரச தவறும் பட்சத்தில் 26 ஆம் திகதி பாரிய வேலை நிறுத்தப்போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் நேற்றைய தினம் எச்சரிக்கை விடுத்தது.

# கொழும்பு டீ.எஸ் கல்லூரியின் வருடாந்த இப்தார்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)


கொழும்பு டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரியின் இஸ்லாமிய மஜ்லிஸ் நடத்தும் வருடாந்த இப்தார் நிகழ்வு இன்று (16) வெள்ளிக்கிழமை பி.ப. 5.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அனுசரணையிலும் கல்லூரியின் அதிபர் ரத்னாயக்க தலைமையிலும் நடைபெறும் இந்த இப்தார் நிகழ்வில், அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி உட்பட மேலும் பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இது இஸ்லாமிய மஜ்லிஸின் 18ஆவது இப்தார் நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

# டிப்பர் மோதி 6 வயது சிறுமி பலி





நுவரெலியா, ஹட்டன் பிரதான வீதியில், நானுஓயா நகரின் பாதசாரி கடவையை கடக்க முற்பட்ட 6 வயது சிறுமி மீது டிப்பர் ரக வண்டி மோதியதில் சிறுமி சம்பவ இடத்திலேயே பலியானார்.

குறித்த கோர விபத்து வியாழனன்று காலை 7.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ரதல்ல கீழ்பிரிவு பகுதியை சேர்ந்த ஆக்காஷா தேவ்மினி என்ற 6 வயது சிறுமியே இவ்வாறு விபத்தில் உயிரிழந்துள்ளதோடு, நானுஓயா நகரத்திலிருந்து பொலிஸ் வழியாக நானுஓயா ஜேம்ஸ் பீரிஸ் சிங்கள வித்தியாலயத்திற்கு செல்வதற்கு பாதசாரி கடவையை கடக்க முயன்ற போதே இவ்விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மேலும், நுவரெலியாவிலிருந்து ஹட்டன் நோக்கி சென்ற டிப்பர் ரக வாகனத்திலேயே சிறுமி விபத்துக்குள்ளானதோடு, பொது மக்களால் குறித்த வண்டிக்கு தீ வைக்கப்பட்டது.

சிறுமியின் உயிரிழப்பால் சம்பவ இடத்தில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதனால் பதற்ற நிலை ஏற்பட்டதோடு, இதனை கட்டுப்படுத்துவதற்கு விசேட அதிரடி படையினர், பொலிஸார், இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர்.

இதேநேரம், இச்சம்பவத்தினால் வியாழன்று ஹட்டன் நுவரெலியா ஊடான பொது போக்குவரத்து பல மணி நேரம் முற்றாக தடைப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு சுட்டிக்காட்டியது.

# இராஜதந்திரி இஸ்ஸத் ஹுஸைன் காலமானார்



இலங்கை வெளிவிவகாரச் சேவையின் முதன் முதலாக இணைந்த முஸ்லிமான புகழுக்குரிய இராஜதந்திரி என்.எம்.எம்.இஸ்ஸத் ஹுஸைன் கடந்த செவ்வாயன்று காலமானார்.

இவரது ஜனாஸா நல்லடக்கம் அதே தினம் இரவு தெஹிவளை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

கொழும்பில் பிரபல வர்த்தக குடும்பத்தில் 1927 ஆம் ஆண்டு பிறந்த இவர் கொழும்பு மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களில் பயின்று ஆங்கிலப் பாடத்தில் சிறப்பு பட்டம் பெற்றார்.

1951 இல் இலங்கை சுங்கத் திணைக்களத்தில் உதவிக் கட்டுப்பாட்டாளராக இணைந்த இவர் 1953 இல் வெளிவிவகார சேவையில் இணைந்தார். வெளிவிவகார சேவையில் இணைந்த முதல் முஸ்லிம் இவராவார். 1953 முதல் 1988 வரை வெளிவிவகார சேவையில் இணைந்த இவர், பிரித்தானியா, பாகிஸ்தான், பிரான்ஸ், எகிப்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இலங்கைத் தூதுவராலயத்தில் பணிபுரிந்தார். 1982 முதல் 1985 வரை பிலிப்பைன்சில் தூதுவராகப் பணி புரிந்த இவர் வெளிநாட்டுச் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின் ரஷ்யாவின் தூதுவராகப் பணிபுரிந்தார்.

இஸ்லாம், இலங்கை முஸ்லிம்கள் இலங்கை அரசியல் பற்றி ஆங்கில பத்திரிகைகளில் நூற்றுக்கணக்கில் கட்டுரைகளை எழுதிய இவர் செய்லான் முஸ்லிம் இணையத்தளத்தை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்புச் செய்தவராவார்.









# கட்டார் – சவூதி முரண்பாடு: புதிய ஆயுத மோதலுக்கு வழிவகுக்குமா?

எம்.எஸ். அமீர் ஹுசைன்

2017 ஜூன் 05 ஆம் திகதி கட்டாருக்கு எதிராக சவூதி அரேபியா விதித்த இராஜதந்திர உறவுத் துண்டிப்பு மற்றும் பொருளாதாரத் தடைகள் காரணமாக மத்திய கிழக்கில் புதிய நெருக்கடி நிலை உருவாகியிருக்கின்றது. இந்த நெருக்கடி நிலை தற்போது 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் மேற்குலகில் காணப்பட்டது போன்று சவூதி ஆதரவு முகாம் என்றும் கட்டார் ஆதரவு முகாம் என்றும் இரண்டு அணிகளாக அரபு நாடுகள் பிரிவதற்கு வழிவகுத்திருக்கின்றது. 1966 ஆம் ஆண்டு முதல் 1990 ஆண்டு வரையான காலப்பகுதியில் இவ்வாறே மேற்கில் முதலாளித்துவ முகாம் என்றும் சோஷலிச முகாம் என்றும் இரண்டு அணிகள் காணப்பட்டன. முதலாளித்துவ முகாம் அமெரிக்காவுக்கு நெருக்கமான நாடுகளாகவும் சோஷலிச முகாம் சோவியத் ரஷ்யாவுக்கு நெருக்கமான நாடுகளாகவும் அடையாளம் காணப்பட்டன.

1966 ஆம் ஆண்டு முதல் 1990 ஆண்டு வரையில் அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகள் சோஷலிசத்திற்கு எதிராக மேற்கொண்ட மறைமுகமான யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சோவியத் ரஷ்யாவில் ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடியுடன் சோஷலிசம் வீழ்ச்சி கண்டது. அதன் பின்னர் உலகில் அமெரிக்காவின் தலைமையில் நாடுகள் ஒன்று திரளும் நிலை ஏற்பட்டதை ஒரே உலக ஒழுங்கு என்றழைக்கப்பட்டது. அத்துடன் உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த இரண்டு வல்லரசுகளில் ஒன்றான சோவியத் ருஷ்யாவின் பலம் சிதைந்ததோடு கம்யூனிசமும் உலகில் இருந்து படிப்படியாக சரிய ஆரம்பித்தது. இந்த சோஷலிச சரிவுக்கு முற்பட்ட நிலையில் இருந்து வந்த முரண்பாட்டின் சூழ்நிலையை நெடுப்பிடிப் போர் என்றழைக்கப்பட்டது. இந்த நெடுப்பிடிப்போரை வெற்றிகொள்ள அமெரிக்கா பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாள வேண்டியேற்பட்டது.

இதேபோன்ற ஒரு நிலைமையே இப்போது மத்திய கிழக்கிலும் உருவாகிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. கட்டாருக்கு நெருக்கமான அரபு நாடுகளை இஸ்லாமிய பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகள் என்றும் சவூதி அரேபியாவுக்கு ஆதரவளிக்கும் அரபு நாடுகளை இஸ்லாமிய பயங்கரவாதத்திற்கு எதிரான நாடுகள் என்றும் வேறுபடுத்தி நோக்கும் நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. அமெரிக்கா 1990 ஆம் ஆண்டு ஈராக்கை ஆக்கிரமித்ததன் பின்னரும் 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்திருந்த இரட்டைக் கோபுரங்கள் மீதான தாக்குதலின் பின்னர் ஆப்கானிஸ்தானையும் ஆக்கிரமித்ததன் பின்னர் அரேபிய தீபகற்பத்தில் ஒருபோதும் அமைதி நிலவக்கூடாது என்பதற்காகவும் அரபு நாடுகளுக்கிடையில் பிளவும் பிணக்குகளும் முரண்பாடுகளும் ஏற்பட வேண்டும் என்பதற்காக உருவாக்கிய ஒரு தீவிரவாத மற்றும் மிலேச்சத்தனமான அமைப்பே சிரியாவிலும் ஈராக்கிலும் இஸ்லாமிய இராச்சியம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற அமைப்பாகும்.

ஏற்கனவே சிரியா மற்றும் ஈராக் போன்ற நாடுகள் இந்த அமைப்பின் காரணமாக மிக மோசமான தாக்குதலுக்கு உள்ளாகி தினமும் ஆயிரக்கணக்கிலான அப்பாவி பொதுமக்களை கொன்று குவிக்கும் கொலைக் களமாக மாற்றப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் இந்த அமைப்பிடம் அதி நவீன ஆயுதங்கள் காணப்படுவதோடு இஸ்லாமிய கோட்பாடு என்ற அடிப்படையில் இந்த அமைப்பால் தினமும் இஸ்லாத்திற்கு எதிரான சதிகாரர்கள் என்றும் இஸ்லாத்தை ஏற்க மறுக்கும் மாற்று மதத்தவர்கள் என்றும் கைது செய்யப்படும் பலரை பகிரங்கமாக கழுத்தை அறுத்து மிலேச்சத்தனமாக படுகொலை செய்யும் காட்சிகளை உலகிற்கு பகிரங்கப்படுத்திக் கொண்டிருக்கின்றது. மாற்று மதத்தவர்கள் என்ற அடிப்படையில் இளம் பெண்களை சங்கிலியால் பிணைத்து இழுத்து வந்து ஏலத்தில் பாலியல் அடிமைகளாக விற்கப்படும் காட்சிகளும் இந்த அமைப்பை மையப்படுத்தியதாக தினமும் வெளியாகிக் கொண்டிருக்கும் காட்சிகளாகும். இந்த அமைப்பின் நடவடிக்கைகளில் இஸ்லாம் காட்டும் மனித நேயப்பண்புகளைக் காண முடியவில்லை.

இந்த காட்சிகள் சர்வதேச ரீதியாக இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் ஏனைய மக்கள் வெறுத்து ஒதுக்கும் நிலையை ஏற்படுத்தி வருகின்றது. இஸ்லாம் காட்டுமிராண்டித்தனமானது, மனித உயிர்களை மதிக்காத மதம், அப்பாவிகளை படுகொலை செய்யும் மதம், இஸ்லாம் பயங்கரவாதம், தீவிரவாதம், ஏனைய மதங்களை மதிக்காத ஒரு சமூகமே இஸ்லாம் என்றெல்லாம் உலகின் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் மிக கேவலமாகவும் இழிவாகவும் பேசும் நிலைக்கு இந்த இஸ்லாமிய நாட்டினவாத கொள்கைக்காக போராடுவதாக கூறும் ஆயுதக் குழு ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த அமைப்பின் பின்னணியைப் பார்க்கும் போது முற்றிலும் இஸ்லாத்திற்கு எதிரான ஓர் அமைப்பாகவே இந்த அமைப்பை பார்க்க வேண்டியிருக்கின்றது. அதன் காரணமாகவே இந்த அமைப்பு ஆப்கானிஸ்தானில் அமெரிக்காபின் லாடினின் தலைமையில் அன்றைய சோவியத் ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட ஆயுதங்களையும் பெருமளவிலான பணத்தையும் வழங்கி தாலிபான்கள் அமைப்பை உருவாக்கியது போன்று மத்திய கிழக்கில் ஐ.எஸ் அமைப்பை உருவாக்கியிருக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றது.

இஸ்லாம் ஒருபோதும் கூறாத, வலியுறுத்தாத விடயங்களையே இந்த அமைப்பு செய்து வருவது தெரிகின்றது. அதனால் உலகில் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் ஏனைய சமூகம் வெறுத்து ஒதுக்குவதற்காகவும் இஸ்லாமிய பயங்கரவாதம் என்ற காரணத்தை முன்வைத்து அமெரிக்கா எப்போது வேண்டும் என்று நினைத்தாலும் அரபு நாடுகளுக்குள் ஊடுருவ ஏற்ற வகையில் மேற்கொண்டுள்ள ஒரு தந்திரோபாயமான நடவடிக்கையாகவே இந்த ஐ.எஸ் ஆயுத குழுவை நோக்க வேண்டியிருக்கின்றது. அமெரிக்காவின் மத்திய கிழக்கை பிரித்து அரசியல், பொருளாதார மற்றும் ஆயுத முரண்பாடுகளை உருவாக்க கையாண்ட மற்றுமொரு தந்திரோபாயமாகவே சவூதி ஆரேபியா ஜூன் 05 ஆம் திகதி கட்டார் மீது எடுத்த நடவடிக்கையை காண முடிகின்றது.

கட்டாரை நெருக்கடிக்குள் தள்ளி தேவைப்பட்டால் கட்டாருக்குள் அல்லது சவூதி ஆரேபியா ஊடாக மீண்டும் ஒருமுறை அரபு நாடொன்றுக்குள் ஊடுருவி பாரிய யுத்தம் ஒன்றுக்கு வழிவகுப்பதே இதன் பின்னணியாகும். ஏற்கனவே ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளராக இருந்த சதாம் ஹுசைனின் மதிநுட்பமும் தூர நோக்கமும் இல்லாத யுத்த வெறி காரணமாக 1990 ஆம் ஆண்டு குவைத்தை ஆக்கிரமித்ததால் அமெரிக்கா குவைத்தை மீட்க உதவி செய்வது என்ற அடிப்படையில் பக்தாதை நவீன கனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்கி அழித்தது. அத்துடன் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலையான இராணுவ முகாம்களையும் அமைத்துக்கொண்டது. அத்துடன் ஈராக்கின் எண்ணெய் வளத்தையும் ஆக்கிரமித்தது. சுமார் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். பின்னர் மீண்டும்2001 ஆம் ஆண்டு ஈராக்கை ஆக்கிரமித்தது. அந்நாட்டை முற்றாக குண்டுகளை வீசி அழித்தது. பின்னர் அங்கு ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டதாக அறிவித்து அமெரிக்கப்படைகளை கட்டம் கட்டமாக வெளியேற்றிக்கொண்டது. ஆனால் விளைவு முன்பைவிட மோசமடைந்திருக்கும் ஒரு நாடாக ஈராக் மாறியிருக்கின்றது.

இப்போது சவூதி ஆரேபியா ஊடாக கட்டார் மீதான நடவடிக்கையும் இவ்வாறான ஒரு எண்ணெய்க்கான ஆக்கிரமிப்பே என்ற சந்தேகத்தை வலுவடையச் செய்திருக்கின்றது. சவூதி அரேபியா அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே செயற்பட்டிருப்பது தெளிவாகின்றது. ஆனாலும் இந்த பிராந்தியத்தில் இருந்து வரும் முக்கியமான ஒரு பிரச்சினைதான் ஷியாக்களின் எழுச்சியாகும். இந்த ஷியாக்களின் எழுச்சியை தடுப்பதற்காக சவூதி அரேபியா கடும் பிரயத்தனங்களை திரைமறைவில் இருந்து மேற்கொண்டு வந்துள்ள நிலையில் கட்டார் மீதான நடவடிக்கையும் அதற்கான முயற்சி என்று கூறப்படுகின்றது.



இருந்தாலும் சவூதி அரேபியாவுக்கும் கட்டாருக்கும் இடையிலான இந்த முரண்பாட்டை 1990 ஆம் ஆண்டு அல்லது 2001 ஆம் ஆண்டு ஏற்பட்டது போன்ற ஒரு கட்டார் ஆக்கிரமிப்பாக மாற்றி விடுவதற்கான வாய்ப்பாக மாறுமாயின் அது மத்திய கிழக்கின் மற்றுமொரு பாரிய அழிவாக அமையப்போகின்றது என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையில் மோதலை ஏற்படுத்தி பின்புலத்தில் இருந்து அமெரிக்கா அதன் நவீன ஆயுதங்களை பரீட்சிப்பதற்கான போர்க்களமாக பயன்படுத்தவும் ஆயுத விற்பனை மூலம் பாரிய பில்லியன் கணக்கான வருமானத்தை அடையவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வதாக அமையவிருக்கின்றது.

ஆனாலும் சவூதி அரேபியா மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக கட்டார் பாதிப்புக்கு ள்ளாகியதாக இதுவரையில் வெளி உலகிற்கு காட்டிக் கொள்ளவில்லை. இராஜதந்திர மட்டத்தில் தைரியமாக நிலைமையை எதிர்கொள்ளும் ஒரு நாடாகவே செயற்பட்டு வருகின்றது. தற்போதைய நிலையில் ஈரானும், துருக்கியும் கட்டாருக்கு பக்க பலமாக இருந்து வருகின்றது. இருந்தாலும் சவூதி அரேபியா, பஹ்ரைன், எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட நாடுகள் கட்டார் மீது மேற்கொண்டுள்ள இராஜதந்திர உறவுத் துண்டிப்பு காரணமாக கடல் மார்க்க மற்றும் வான் வழிப்பயணத் தடைகாரணமாக கட்டாருக்கான உணவுப்பொருள் விநியோகம் 40சத வீதம் அளவில் தடைப்பட்டிருக்கின்றது. இதனால் கட்டாருக்குள் உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்ச நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. பாலுணவுத் தேவையே மிக முக்கியமான அத்தியாவசியப் பொருளாக இருந்து வருவதால் அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து 4000 கறவைப் பசுக்களை இறக்குமதி செய்ய கட்டார் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

கட்டாரில் ஏதே ஒருவகையில் பொருளாதார நெருக்கடியும் உணவுத் தட்டுப்பாடும் தொடருமானால் அங்கு ஒரு உள்நாட்டு கிளர்ச்சி ஏற்பட இடமிருக்கின்றது. கட்டார் மக்கள் அந்நாட்டின் ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்யும் நிலை உருவாகினால் உள்நாட்டு முரண்பாட்டை சமாளிப்பதற்கான ஒரு கஷ்டமான நிலை ஏற்படுவதோடு அந்நாட்டின் ஆட்சியில் ஒரு ஸ்திரமற்ற நிலை ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது. ஏற்கனவே எகிப்து, சிரியா போன்ற நாடுகளில் இவ்வாறான நிலைமை உருவாகியதை நாம் உதாரணமாக குறிப்பிடலாம். கட்டாரைப் பொருத்தவரையில் சவூதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக மூன்றாவது எண்ணெய் வளம் கொண்ட நாடாகவும் எரிவாயு உற்பத்தியில் பிரதான இடத்தை வகிக்கும் ஒரு நாடாகவும் இருந்து வருகின்றது.

ஐக்கிய அரபு இராச்சியம் சவூதி அரேபியாவுடன் இணைந்து கட்டாருக்கு பொருளாதார தடைகளை ஏற்படுத்தினாலும் அந்நாட்டிற்கு கட்டாரில் இருந்தே பாரியளவு எரிவாயு பெற்றுக் கொள்ளப்படுகின்றது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் மின்சார உற்பத்தி எரிவாயு மூலம் மேற்கொள்ளப்படுவதால் அதன் எரி வாயுவின் தேவையில் 50 சத வீதம் கட்டாரில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. அதற்காக கட்டாரில் இருந்து ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு கடலுக்கடியில் 364 கிலோ மீட்டர் தூரமான கால்வாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஐக்கிய அரபு இராச்சியம் கட்டாரில் இருந்து ஒருநாளைக்கு 200 கோடி கியுபிக் அடி அளவு எரிவாயுவை பெற்று வருகின்றது. ஐக்கிய அரபு இராச்சியம் கட்டாருக்கு உணவுப் பொருட்கள் செல்லும் துறைமுகங்களையும் வான்வழிப் பாதைகளையும் மூடினாலும் கட்டார் இதுவரையில் இந்த எரிவாயு விநியோகத்தை துண்டிக்கவில்லை. அவ்வாறு துண்டித்தால் ஐக்கிய அரபு இராச்சியம் ஒருவகையில் இருளில் மூழ்கும் நிலை ஏற்படலாம்.

இலங்கையின் நிலையில் இருந்து பார்க்கும் போது கட்டாரில் 150.000 இலங்கையர் தொழில் புரிவதாக அறிக்கைகள் கூறுகின்றன. தற்செயலாகவாவது அங்கு ஒரு போர் நிலை உருவாகுமானால் இந்த தொழிலாளர்கள் மீண்டும் நாட்டிற்கு திரும்ப வேண்டிய நிலை ஏற்படலாம். இது இலங்கைக்கு பாரிய அந்நிய செலாவணி பாதிப்பை ஏற்படுத்தலாம். குறிப்பாக கட்டார் உட்பட மத்திய கிழக்கு நாடுகளான

(15ஆம் பக்கம் பார்க்க....)

# கடை எரிப்பு எனும் பேரிடி

ஆதில் அலி சப்ரி

சட்டைப் பையில் ஆயிரம் ரூபாவுடன் அன்றாட தேவைக்கான பொருட்களை வாங்க வெளியேறியவர், கையில் பொருட்களுடன் திரும்பிவந்தபோது வாழ்வாதாரமே தீக்கிரையாகியுள்ளதைக் காண்கிறார். இருதயத்தில் நான்கு அடைப்புகளுடன் சத்திர சிகிச்சையொன்றை எதிர்பார்த்திருந்த அந்த மனிதருக்கு அது பேரிடியாக அமைந்தது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து முஸ்லிம்களுக்கு எதிராக 25க்கும் மேற்பட்ட பேரினவாத நடவடிக்கைகள் அரங்கேறியுள்ளன. இன்று எந்த வர்த்தக நிலையம் தீக்கிரையாக்கப்பட்டிருக்கும் என்ற மன அழுத்தத்துடன் முஸ்லிம்கள் நோன்பு நோற்று வருகையில், மஹியங்கனை நிச் ரூ பெலஸ் முற்றாக தீக்கிரையாக்கப்பட்ட செய்தியும் வருகின்றது.

நிச் ரூ பெலஸ் உரிமையாளர் அலியார் தாஜுதீன் காத்தான்குடியைச் சேர்ந்தவர். ஓர் ஆண், நான்கு பெண் பிள்ளைகளென ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் ஓர் இருதய நோயாளி. இருதயத்தில் நான்கு அடைப்புகளுடன் சத்திர சிகிச்சையொன்றிற்காக 8 இலட்சங்கள் அளவில் தேவை என்றிருக்கும் போது 60 இலட்சங்களுக்கு மேலான முதலீடு, வாழ்வாதாரம் முற்றாக தீக்கிரையாக்கப்படுகின்றது.

ஒன்றரை மாதங்களில் இதுபோன்றே மகரகமை, நுகேகொடை, நாவலப்பிட்டிய, மருதானை, கொடபிடிய, பாணந்துறை, வெள்ளப்புல, எம்பிடிய, நாவின்ன என்று இறுதியாக மஹியங்கனையில் முஸ்லிம்களின் பொருளாதாரம் அழிக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் நடந்தேறிய சம்பவங்களில் முஸ்லிம்களின் 1350 மில்லியன்களுக்கு மேற்பட்ட செல்வம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

30 வருட கொடிய யுத்தத்தால் பொருளாதாரம் சீரழிந்து, இன்றுவரை தலைதூக்க முடியாத கடன் சுமையை நாடு எதிர்நோக்கியுள்ளது. நாட்டின் கடன் சுமை எவ்வளவு என்று கணிக்க முடியாத நிலை தொடர்கின்றது. தீ மூட்டி அழிக்கப்படும் முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் வெறுமனே முஸ்லிம்களை மாத்திரமன்றி, நாட்டின் பொருளாதாரத்தையும் இன்னும் பல வருடங்கள் பின்நோக்கி செலுத்தும் என்பதை இனவாதிகள் மறந்துவிடுகின்றனர். அதோ புலிகள் வருகின்றனர் என்றதும் தெற்கில் இருந்தவர்கள் ஓடியொழிந்த ஒரு காலத்தை புலிகளை வெற்றிகொண்டவுடன் மறந்துவிட்டார்களா? யுத்தத்தின் வடுக்கள் ஆறவில்லை. அளுத்கமை வெறியாட்டத்தின் காயங்கள் சீழ்வடிகின்ற நிலையில் மீண்டுமோர் பயங்கரவாத யுத்தத்தின் மூலம் இரத்தத்தை சுவைக்க ஆசைவைக்கின்றனரா?



அரசாங்கம் இனவாதத்தை கட்டுப்படுத்த முனைப்புடன் செயற்படுவதாக தெரியவில்லை. அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களே இனவாதிகளை பாதுகாத்து வருகின்றதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. நாட்டின் சட்டம், ஒழுங்கை உறுதிப்படுத்த வேண்டிய பொலிஸாரும் இனவாதிகளுடன் எலி-பூனை விளையாட்டு விளையாடுகின்றனர்.



முஸ்லிம்களுக்கெதிரான இனவாத நடவடிக்கைகளை தட்டிக்கேட்பவர்களையும் இனவாதிகளாகவே சித்தரித்துவிடுகின்றனர். அவர்களும் இனவாதிகளின் அடுத்த இலக்காக மாறுகின்றனர். பௌத்த இனவாதிகள் இலங்கையில் ஐ.எஸ் போராளிகள் இருப்பதாக காட்ட முயற்சிக்கின்றனர். ஓர் இனவாதத்தை இன்னோர் இனவாதம் அல்லது தீவிரவாதத்தால் இல்லாதொழிக்க முடியாதென்பதை இலங்கை முஸ்லிம்கள் தெரிந்துவைத்துள்ளனர்.

மஹியங்கனையில் தீக்கிரையான காத்தான்குடி அலியார் தாஜுதீனின் நிச் ரூ பெலஸ் போன்றே பல சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளதை நாம் அறிவோம். அலியார் தாஜுதீனைப்போன்றே ஒவ்வொருவருக்கும் வெளியிட முடியாத கஷ்ட, கருப்புப் பக்கங்களும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

மூன்று பள்ளிவாசல்கள் உட்பட சேதமாக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள், வியாபார முயற்சிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படுவதற்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவது அவசியமாகும். கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் எரிக்கப்பட்ட முஸ்லிம் சொத்துக்களுக்கு உடன் இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இதற்கு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆதரவை வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்டுள்ள கடை உரிமையாளர்கள் தமது இழப்பீடுகளையும், உரிமைகளையும் வென்றெடுக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். தமது இழப்புகளை சரிவர கணித்து வெளியிட வேண்டும். இராசாவன பகுப்பாய்வுகளுக்கு முன்பே பொலிஸார் வெளியிடும் மின் ஒழுக்கு அறிக்கைகளையும் கண்டிக்க வேண்டும். இனவாதிகளுக்கெதிராக குரல் கொடுக்கும் முஸ்லிம் அமைப்புகளையும் இனவாதிகளாக முத்திரை குத்திவிடுகின்றனர்.

கடந்த அரசாங்க காலத்திலேயே அளுத்கம கலவரம் இடம்பெற்றது. அக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளும் வர்த்தக நிலையங்களும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டன.

பாதிக்கப்பட்டுள்ள உரிமையாளர்கள் முஸ்லிம் அமைப்புகளுடன் ஒன்றிணைந்து நாம் இழந்தவற்றைப் பெறுவதற்காக போராடும் போது, அது உரிமைப் போராட்டமாக மாறுகின்றது. போராட்டங்களில் நஷ்டஈடு வழங்கப்படுகின்ற நிலைமை வரும்போது இனவாதிகளின் செயற்பாடுகளும் குறையலாம். நஷ்டஈடு வழங்க வேண்டும் என்ற நிலைமை வரும்போது அரசும் முஸ்லிம்கள் விடயத்தில் அதிக கவனம் செலுத்த ஆரம்பிக்கும். இனவாத செயற்பாடுகளால் சொத்து, செல்வங்களை இழந்து, தொழில் முயற்சிகள் அழிக்கப்பட்டிருப்போரின் வாழ்வாதாரம் வழமைக்கு திரும்ப உரிய தரப்பினர் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

## சிறுவனின் 10 ரூபா முயற்சி



மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியில் தரம் 7ல் கல்வி பயிலும் முஹம்மட் பஸ்மி முஹம்மட் இஸ்ஹாப் என்ற சிறுவன் மஹியங்கனையில் தீக்கிரையான கடை உரிமையாளருக்கு 60 இலட்சங்கள் சேகரித்து வழங்க முன்வந்துள்ளார்.

மஹியங்கனை நிச் ரூ பெலஸ் கடை உரிமையாளரின் கதையை கேட்டு நெகிழ்வுற்றே முஹம்மட் பஸ்மி முஹம்மட் இஸ்ஹாப் என்ற சிறுவன் இந்த முயற்சியை ஆரம்பித்துள்ளார்.

பாடசாலையிலும் தனது நண்பர்களிடத்திலும் சில ஆயிரம் ரூபாய்களை சேகரித்துள்ள இந்த சிறுவனின் எதிர்பார்ப்பு, இலங்கையில் உள்ள ஒவ்வொரு முஸ்லிமும் 10 ரூபாயாவது வழங்கவேண்டும் என்பதுதான்.

இந்த முயற்சிக்கு உதவிசெய்ய விரும்புபவர்கள் 0777390909 என்ற இலக்கத்திற்கு டயலொக் ஈசி காஷ் அனுப்ப முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# 8.2 பில்லியன் ரூபா செலவில் களுகங்கை நீர் விநியோகத்திட்டம்

## 80ஆயிரம் மக்களுக்கு சுத்தமான குடிநீர்



களுத்துறை மாவட்டத்திலுள்ள களு கங்கையில் உப்புநீர் கலப்பதை தடுப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தனது அமைச்சிலிருந்து 8.2 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். செவ்வாய்க்கிழமை (14) குடிநீர் பிரச்சினைகள் சம்பந்தமான அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தின்போதே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் களுகங்கையில் உப்புநீர் கலப்பது தடைசெய்யப்பட்டால் களுத்துறை, பேருவளை மற்றும் பயாகல பிரதேசங்களிலுள்ள 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கவுள்ளது. குறித்த பிரதேசங்களில் வழங்கப்படும் குடிநீரில் உவர்நீர் கலப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டதை யடுத்தே, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் ஹக்கீம் மேற்படி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

அமைச்சில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் சரத் சந்திரசிறி விதான, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கே.ஏ. அன்சார், பொது முகாமையாளர் தீப்தி சுமனசேகர, அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் எம். நயீமுல்லாஹ் உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# கடதாசி ஆலை ஊழியர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



(வாழைச்சேனை நிருபர்)

வாழைச்சேனைக் கடதாசி ஆலையில் கடமையாற்றிய ஊழியர்கள் தங்களுக்கான இரண்டு மாத சம்பள நிலுவை வழங்கப்படாமையைக் கண்டித்து ஆலையின் நுழைவாயில் முன்னால் நேற்று கவன ஈர்ப்பில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனைக் கடதாசி ஆலையில் கடமையாற்றிய ஊழியர்கள் சுயவிருப்பு இளைப்பாற்று திட்டத்தின் கடந்த 2016 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பணியிலிருந்து விலகிய நிலையில் அவர்களுக்கான 2014ஆம் ஆண்டில் மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கான சம்பள நிலுவை வழங்கப்படாமல் உறுதிமொழிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட நிலையில் தங்களுக்கான சம்பள நிலுவையை வழங்கக் கோரியே ஊழியர்கள் கவன ஈர்ப்பில் ஈடுபட்டனர்.

2016ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பணியிலிருந்து விலகிய ஊழியர்கள் 154 பேருக்கு 2014ஆம் ஆண்டில் மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கான சம்பள நிலுவை எண்பத்தாறு இலட்சம் ரூபாய் வழங்கப்படவில்லை.

எனவே, குறித்த இடத்துக்கு வருகை தந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கல்குடா தொகுதி அமைப்பாளர் ஆறுமுகம் ஜெகன் ஊழியர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கொழும்பிலுள்ள கடதாசி ஆலையின் தலைமைக் காரியாலய அதிகாரிகளுடன் கலந்துரையாடி இரண்டு வாரங்களுக்குள் சம்பள நிலுவை பெற்றுத் தருவதாக உறுதிமொழி வழங்கியதன் பிற்பாடு ஊழியர் கலைந்து சென்றனர்.

# பியகம பொலிஸ் நிலையத்தினால் இப்தார் நிகழ்வு





(பள்ளவாளை ஹஸைபி)

இனங்களுக்கிடையிலான நல்லுறவை பலப்படுத்தும் நோக்குடன் பியகம பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இன ஒற்றுமையும் எதிர்கால சுபீட்சமும் என்ற தலைப்பிலான செயலமர்வு நேற்று(14) புதன்கிழமை பியகம டிலாரா ஹோட்டலில் நடைபெற்றது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அல் ஹாஜ் எம்.எம்.ஏ கபூர் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இச்செயலமர்வில் பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பௌத்த, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மத குருமார்கள் ,மௌலவிமார்கள் உட்பட சகல இனத்தவர்களையும் சேர்ந்த கல்வி மான்கள், புத்தி ஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள், சமூக நலன் விரும்பிகள், மற்றும் பௌத்த விகாரைகள்,பள்ளிவாசல்கள்,கிறிஸ்தவ ஆலயங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் ஆரம்பம் தொட்டு இனங்களுக்கிடையில் நிலவி வரும் நல்லுறவை தொடர்ந்து பேணுவது தொடர்பாகவும் எதிர் காலத்தில் பிணக்குகள் ஏற்படும் பட்சத்தில் அதனை உடனுக்குடன் தீர்த்து வைக்கும் வழிமுறைகள் தொடர்பாகவும் இங்கு சகல இன பிரதிநிதிகளாலும் விரிவாக கவும் சுமுகமாகவும் கலந்தரையாடப்பட்டன.

இச் செயலமர்வில் கலந்து கொண்ட களனி வலய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஜயசிங்க,களனி வலய பொலிஸ் அத்தியட்சகர் மதாரா ஆரியசேன ஆகியோர் உரையாற்றினர்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அல் ஹாஜ் எம்.எம்.ஏ கபூர் ,பியகம பொலிஸ் பொறுப்பதிகாரி பீ.ஜீ.எஸ்.ஆர் சஞ்சீவ மற்றும் மத குருமார்கள்,சகல இன பிரதிநிதிகள் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர்.



கண்டி மாவட்டத்தின் கல்ஹின்னை அல் - மனார் தேசிய பாடசாலையின் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி பணிகள் தொடர்பான கலந்துரையாடல் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தாருடன் அண்மையில் கல்லூரியின் அதிபர் ஐ.அப்துல் ரஹ்மான் தலைமையில் அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதில் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.
(எம். ஆர். சியாஉர் ரஹ்மான்)


## தேவை

கொழும்பிலுள்ள பெண்கள் விடுதியொன்றுக்கு 40 - 50 வயதுக்குட்பட்ட பொறுப்புகளற்ற தங்கி நிற்கக் கூடிய முஸ்லிம் பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு - 077 3421166


# பொதுசுகாதார பரிசோதகர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்





(செங்கலடி நிருபர்)

இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் தமது பத்து அம்ச கோரிக்கையை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு இரண்டு வாரங்களில் நிவர்த்தி செய்யவேண்டும் என கோரி (15) வியாழக்கிழமை கவனயீர்ப்பு பேரணியில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஆரம்பமான கவனயீர்ப்பு பேரணி பிராந்திய சுகாதார பணிப்பாளர் காரியாலயம் வரை சென்று அங்கு கவனயீர்ப்பு நடைபெற்றது. இதில் பெரும் எண்ணிக்கையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்துகொண்டனர். விஷேட தர பொதுச் சுகாதார பரிசோதகர் நியமனங்களை உரிய காலத்தில் வழங்குதல், மாகாண பயிற்சி நிலையத்துக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போதனாசிரியர்களை நிரந்தர நியமனம் செய்தல்.

மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு 6மாத கால சேவைக் கால பயிற்சி நெறியை வழங்குதல்.

ஓரே சேவை நிலையில் ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்தவர்களை பாரபட்சமின்றி சலுகைகள் இன்றி இடமாற்றம் செய்தல். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அலுவலகப் பராமரிப்புக் கொடுப்பனவை வழங்கல்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அலுவலகப் பை 12 வருடங்களாக வழங்கப்படாமல் உள்ளது ஒவ்வொரு மூன்று வருடத்திற்கும் ஒரு தடவை வழங்குதல். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கொடுப்பனவுகளை தாமதப்படுத்தாது உரிய காலத்தில் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் கடமை நேரத்துக்கு முன்னதாகவும் பின்னதாகவும் கடமையாற்றுகின்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் மேலதிக நேரத்தை 40இல் இருந்து 120 மணித்தியாலமாக அதிகரித்தல்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பதவி உயர்வினை உரிய காலத்தில் தாமதியாது வழங்குதல். மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் ஏனைய உள்ளூராட்சி சபைகளில் இருந்து கட்டட விண்ணப்ப படிவங்களை பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பரிசீலனைக்கு பெற்றுக்கொடுத்தல்.சீருடை அணியாத பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சீருடையை அணிகின்ற ஏனைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு பேரணியில் ஈடுபட்டனர்.

# சோலைகமர் ஆலிம் காலமானார்


காலி சோலை மார்க்க அறிஞர் கமர் ஆலிம் (அருஸ்) கடந்த 12 ஆம் திகதிகாலமானார்.

கிழக்குக்கரை தென்இந்தியா அருவியதும் காதிரிய்யா அரபிக்கல்லூரியில் கல்வி கற்ற அன்னார் ஆரம்பகாலத்தில் பொதுச்சேவைகளில் ஈடுபட்டார். பின்னர் கொழும்பு வாழைத்தோட்ட மஸ்ஜிதுன் நஜ்மி மர்ஹூம் மௌலவி அப்துர் ரஹ்மான் பேஷ் இமாமாகவும் தெஹிவளை குத்பிய்யா மன்சிலில் சுமார் 15 வருடகாலமாகவும் கடமையாற்றியுள்ளார்.

மார்க்க விடயங்களில் மிகவும் தேர்ச்சியடைந்திருந்தார். காலி களுவல்ல நூறுல் காதிரிய்யா அரபிக்கல்லூரியை ஆரம்பிப்பதில் அயராது முயற்சி செய்தார்.

அன்னாரின் ஜனாஸா 13 ஆம் திகதி மாலை காலி தனாப்பிட்டி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பெருந்திரளான மக்கள் நாட்டின் நாலாபக்கத்திலிருந்தும் கலந்து கொண்டனர்.

(தகவல்- ஸியாவுத்தீன் ஆலிம் உஸ்மானி பேருவளை)



பொத்துவில் பிரேதேசத்தில் கலப்பு மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவ கூட்டுறவு சங்கத்திற்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப்சம்சுதீனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மீன்பிடி வலை மற்றும் படகு வழங்கும் நிகழ்வு அண்மையில் பீ.பதுர்கானின் வழிகாட்டலில் சங்கத்தின் தலைவர் ஹமீது தலைமையில் நடைபெற்றது. இதன் போது பயனாளர்கள் பொருட்களை பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம் (கல்முனையூர் அப்றாஸ்)


# விலைமனு அறிவித்தல்

**Lanka Mineral Sands Limited**

(கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)

## பெறுமதிமிக்க கனரக கனிம மணல்களை விற்பனை செய்தல்

**கேள்வி இல: LMS/MKT/TDR/17/12**

இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் சார்பாக, அமைச்சின் கேள்விமனு சபைதலைவர், பின்வரும்கனரககனிமமணல்பொருட்களைவாங்குவதற்கு ஆர்வமுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புக்களிடமிருந்து கேள்விமனுக்களைக் கோருகிறார். வாங்குவதற்கு சாத்தியமுள்ளோர், அனைத்து கொள்ளளவுக்கும் கேள்விமனு வழங்க வேண்டும்.

| | பொருள் | விற்கப்படும் அளவு | மனு பத்திரம் | கேள்வி மனு மூடப்படும், திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|---|---|
| 1 | **HEAVY MINERAL CONCENTRATE** (TAILING OF WET GRAVITY UPGRADING PLANT) | **70,000 MT** (மொத்தமாக விநியோகிக் கப்படுகிறது) | **10,000,000.00** இலங்கை ரூபா அல்லது **66,666.00** அமெ. டொலர் | **13.07.2017** பிற்பகல் 02 மணி |

மனுதாரருக்கான அழைப்பிதழ், விற்பனை நோக்கம், மனுதாரருக்கான அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், பரிந்துரைக்கப்படும் கேள்விமனு படிவம் மற்றும் பொருளின் விபரங்கள், இலக்கம் 341/21, சரணமாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன. அத்தோடு,ஆர்வமுள்ள தரப்புக்கள் இலகுவாக அணுகுவதற்காக www.lankamineralsands.com என்ற இணையத்தளத்திலும் இடப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள தரப்புக்கள் கேள்விமனுவின் விபரங்களை அறிந்து கொள்வதற்கு, இணையத்தளத்தை தரிசிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு சந்தைப்படுத்தல் முகாமையாளரை பின்வரும் இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும், +94 11 2883965 அல்லது சந்தைப்படுத்தல் பிரிவை தொடர்பு கொள்ளுங்கள் +94 11 2883954, தொலைநகல் +94 112882668, மின்னஞ்சல்: ilmenite@slt.lk

**தவிசாளர்**
**அமைச்சின் கேள்விமனு சபை**
**இலங்கை கனிம மணல்கள் நிறுவனம்**
**341/21, சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை**

நவமணி NAVAMANI WEEKLY
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
18TH June 2017 - SUNDAY

# நாட்டை மீண்டும் ஒரு யுத்தத்திற்குள் தள்ள இடமளிக்காதீர்கள்

இலங்கையில் மீண்டும் யுத்தம் ஒன்றுக்குத் தள்ளப்படும் பயங்கர ஆபத்தொன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலையிருப்பதனால் எந்தவொரு மத, இனக் குழுக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்செயல்கள் மற்றும் வெறுப்புச் செயற்பாடுகளுக்கு மக்களைத் தூண்டி விடுவோருக்கு எதிராக கடுமையாகச் சட்டத்தை அமுல்படுத்தும்படி அமைச்சரவை, சட்டத்தை அமுல்படுத்துவோர் மற்றும் சட்ட மா அதிபரை வலியுறுத்தியுள்ளது.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் காணப்பட்ட இணக்கப்பாட்டின்படியே அமைச்சரவை இது தொடர்பாக கூட்டறிக்கை ஒன்றை விடுத்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

தவறிழைப்போரது சமூகநிலை இனம் மற்றும் மதப்பின்னணியையோ அரசியல் சார்பினையோ பார்க்காது சட்டத்தினை அமுல்நடத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

சிங்களப் புத்தாண்டு முதல் கடந்த வெள்ளிக்கிழமை வரை முஸ்லிம்களுக்கெதிராக 40 சம்பவங்கள் நடந்து சட்டமும் நீதியும் நாட்டில் அமுல் செய்யப்படாத நிலையில் தாமதித்தேனும் அரசாங்கம் இவ்வாறான ஓர் உத்தரவினைப் பிறப்பித்ததனைப் பாராட்டுகின்றோம். தொடரும் இச்சம்பவங்களது பாரதூரம் பற்றி முஸ்லிம் அரசியல், சிவில் தலைமைகள் எடுத்துக் கூறியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தவறிய அரசு வெள்ளம் தலைக்கு மேல் போவதற்கு முன் இவ்வாறான ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றது.

இந்த அறிக்கைக்கு சமாந்தரமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிக்கை ஒன்றை விடுத்து நல்லிணக்கத்திற்கு தடங்கள் ஏற்படின் புதிய சட்டத்தைக் கொண்டு வந்தேனும் அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

தாமதித்தேனும் பிரதமர் இந்த விடயத்தில் அமுல்படுத்துவோது பொறுப்பினை நினைவுபடுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில வாரங்களாக இடம்பெற்ற முஸ்லிம் விரோத செயற்பாடுகள் குறித்து பொலிஸார் மென்மைப் போக்கினையே கடைப்பிடித்து வந்தனர். 40 சம்பவங்கள் நடக்கும் வரை பொலிஸார் ஒருவரையே கைதுசெய்தனர். நேற்று முன்தினம் மல்லவப்பிட்டி பள்ளிவாசல் மீது குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்ட இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் ஆரம்பத்திலே தம் கடமையைச் சரியாகச் செய்திருந்தால் இந்த விடயம் இவ்வளவு மோசமாக இருந்திருக்காது.

2015 ஜனவரி மற்றும் ஆகஸ்டில் நடைபெற்ற தேர்தல்களில் இந்த நாட்டு மக்களில் பெரும்பான்மையான குறிப்பாக சிறுபான்மை மக்கள் இந்த அரசுக்கு வாக்களித்தது. இலங்கை மக்கள் இனி ஒரு போதும் மோதல் இருந்த காலத்திற்குச் செல்வதில்லை என்றும் அதற்குப் பதிலாக நல்லிணக்கம், நிரந்தர சமாதானம், பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கான அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது. என்றும் இனவாத, மத வைராக்கியத்துக்கு வன்செயல்களுக்கு நாம் கட்டி எழுப்ப முயற்சிக்கும் அரசில் எந்த இடமும் அளிக்கப்படமாட்டாது என்றும் வாக்குறுதி அளித்ததாலேயாகும்.

இது இந்த அரசு பதவிக்கு வருவதற்கு முன் மக்களுக்களித்த வாக்குறுதியாகும். கடந்த சில காலமாக இந்த வாக்குறுதி மீறப்பட்ட நிலையையே கண்டோம்.

அந்த நிலை மீண்டும் ஏற்படாதிருப்பதினை உறுதிப்படுத்துவதன் மூலம் மட்டுமே இந்த நாட்டில் நல்லிணக்கம் மற்றும் பொருளாதார சுபீட்சம் அடைய முடியும்.



இர்பான் இக்பால்
லண்டனிலிருந்து

# யார் இந்த இலங்கை முஸ்லிம்கள்

## வத்ஹிமி ராஜா எனும் முஸ்லிம் மன்னரை இப்னுபதூதா இலங்கையில் சந்தித்தார்

இலங்கை வரலாற்றில் 13ஆம் நூற்றாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டு காலம் பல்வேறு யுத்தங்கள் மற்றும் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளைக் கண்ட காலமாகும்.

13ம் நூற்றாண்டில் ஆரியசக்கரவர்த்தியின் அரசு இலங்கை வரை தமது ஆளுமையை விரிவடையச் செய்தது. இதன் பயனாக வடக்கில் யாழ்ப்பாண இராச்சியம் உருவாகியது. இதனை ஆரியச்சக்கரவர்த்தி அரசு என பெயர் கொண்டும் அழைப்பர் (கி.பி. 1215 - 1624).

தற்போதைய இந்தியாவின் ஒரிஸ்ஸா மாநிலமே அக்காலத்தில் கலிங்க நாடு என அழைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து வந்த கலிங்க மாகன் எனும் படைத் தளபதியே யாழ்ப்பாண இராச்சியத்தை நிறுவியதோடு இலங்கையின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகளும் இந்தியாவின் ஆரியச்சக்கரவர்த்தியின் அரசின் கீழ் வந்திருந்தது.

பிற்காலத்தில் பாண்டிய மன்னனுக்குக் கப்பம் கட்டி அங்கிருந்து மத மற்றும் கலாச்சார அம்சங்களையும் இறக்குமதி செய்து கொண்ட யாழ்ப்பாண இராச்சியம் சைவ சமயம் மற்றும் அதன் கலாச்சார விழுமியங்களையும் இலங்கைக்குள் பரப்பியது.

பின் வந்த காலங்களில் சிங்கள மன்னர்களுடன் போர் புரிந்து, சமாதான உடன்படிக்கைகள் செய்து கொண்டதன் விளைவில் சைவ கலாச்சாரத்தை நாட்டின் தென் பகுதிக்கும் கொண்டு செல்லக்கூடிய வழிமுறைகள் உருவாகியிருந்தன.

இக்கால கட்டத்தில் சிங்கள மன்னர்கள் மத்தியில் பெருமளவு குழப்பங்களும் சண்டை சச்சரவுகளும் நிலவி வந்தமையால் உள்நாட்டு அரசியல் ஸ்திரமற்ற நிலையிலிருந்தது.

13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சியிலிருந்த முதலாம் புவனேகபாகு யாப்பஹுவையைத் தலைநகராக்கினார்.

தனது ஆட்சியதிகாரத்தை விஸ்தரிக்கும் முயற்சியிலிருந்த கலிங்கமாகனுக்கு இது பெரும் சவாலாக அமைந்திருந்ததுடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் விஸ்தரிப்பு வரையறுக்கப்படுவதற்கும் இது காரணமாக அமைந்திருந்தது.

எனினும், சிங்கள மன்னர்கள் அவ்வப்போது ஆரிய அரசின் இராணுவ உதவியையும் பெற்று வந்தவர்களாகவும் தமக்கிடையிலான அதிகாரப் போட்டியில் அதனைப் பயன்படுத்தியவர்களாகவும் காணப்பட்டார்கள்.

புவனேகபாகுவின் தளபதி சுபா கலிங்கமாகனின் படையெடுப்புகளை முறியடித்து யாப்பஹுவ இராச்சியத்தைக் கட்டியெழுப்புவதில் உறுதுணையாக இருந்ததாக மஹாவம்சம் குறிப்பிடுகிறது.

இதே கால கட்டத்தில் ஏலவே இலங்கையுடன் பல நூற்றாண்டு கால வர்த்தக உறவை வளர்த்துக்கொண்டிருந்த அரேபிய மற்றும் அரேபிய வம்சாவளியான சோனகர்களே கடல் வர்த்தகத்தை முழுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

தனது தந்தையைப் போன்று பௌத்த மதத்துடனான நெருங்கிய உறவினைப் பேணி வந்த போதிலும் புவனேகபாகு நாட்டின் முன்னேற்றத்தில் அதீத அக்கறையும் செலுத்தியதன் விளைவாக நாட்டின் வளமும் பெருகியிருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இக்கால கட்டம் பூரணப்படுத்தப்பட்ட இஸ்லாம் இலங்கையில் அறிமுகமாகி மூன்று நூற்றாண்டுகள் கடந்த கால கட்டமாதலால் அரேபிய வர்த்தகத் தொடர்புகளும் வலுவாகக் காணப்பட்டிருந்தது.

புவனேகபாகு இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டதோடு மாத்திரமில்லாமல் தனது தொடர்புகளை மேலும் விரிவுபடுத்தி எகிப்திய சுல்தானுடன் கைகோர்க்கும் தன் எண்ணத்தையும் கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

இதனையே ஜே.ஏ. வில் பெரேரா எனும் வரலாற்றாசிரியர், தனது Maqrizi Ed. Quatremore II Part II எனும் நூலின் அக்கால இலங்கை இளவரசன் 1283; ஏப்ரல் மாதம் 14ஆம் திகதியளவில் எகிப்திய சுல்தானுடன் கை கோர்ப்பதற்கான தன் எண்ணப்பாட்டை வெளிப்படுத்தி பரிசுப் பொருட்களுடன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இதில் கவனிக்கத்தக்க விடயங்களுள் ஒன்று புவனேகபாகுவின் பெயர், அபு நக்பா லெப்பை என குறிப்பிடப்பட்டிருந்ததாகும்.

இச்சம்பவத்தை உறுதி செய்யும் மஹாவம்சம்; 1283ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் குறித்த கடிதத்துடன் இலங்கையிலிருந்து எகிப்துக்குத் தூதுக்குழு ஒன்றும் அனுப்பப்பட்டதாக தெரிவிக்கிறது.

எனவே, இச்சம்பவத்தின் பின்னணி இங்கு ஐயமறத் தெளிவுறுகிறது. ஆயி




னும், புவனேகபாகுவின் பெயர் அவ்வாறு குறிப்பிடப்பட்டமை நமது கவனத்தைப் பெறுகிறது.

நாட்டின் அனைத்தின மக்களுடனும் நல்லுறவைப் பேணிவந்த புவனேபாகு தனது முஸ்லிம் படைத்தளபதியொருவரின் புதல்வியை மணம் முடித்ததன் விளைவில் பிறந்தவரே பின்னர் இரண்டாம் புவனேகபாகு எனவும் கலேகண்டார எனவும் வத்ஹிமி ராஜா எனவும் பல்வேறு பெயர்களால் அறியப்பட்ட குறுகிய கால ஆட்சியாளராகும்.

இரண்டாம் புவனேகபாகு ஆட்சிபீடமேறுவதில் பல சிக்கல்கள் இருந்தன.

பொலன்நறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த மூன்றாம் பராக்கிரமபாகு ஏலவே புவனேகபாகுவுடன் பகையை வளர்த்துக்கொண்டிருந்த நிலையில் புவனேகபாகுவின் சிங்கள மனைவியின் மகன், மூன்றாம் புவனேகபாகு ஆட்சியைக் கைப்பற்றக் காத்திருந்தான்.

பராக்கிரமபாகுவின் பகைமையுணர்வையும் பயன்படுத்திக் கொண்ட நிலையில் இரண்டாம் புவனேகபாகுவை குருடாக்கும் முயற்சிகள் இடம்பெற்றவரை மஹாவம்சமும் தெளிவாக எடுத்துரைக்கிறது.

எனினும், இங்கிருந்து வரலாற்றில் இரு வேறு சம்பவங்கள் புனையப்பட்டுள்ளன. இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஆங்கிலேய கால மொழிபெயர்ப்பாளரும் அரசியல் முக்கியஸ்தருமான முதலியார் விஜேசிங்க, வத்ஹிமி ராஜா அல்லது இரண்டாம் புவனேகபாகு என அறியப்பட்ட மன்னன் மூன்றாம் புவனேகபாகுவினால் கண்கள் தோண்டிக் குருடாக்கப்பட்டு அரச உரிமை இழக்கச் செய்யப்பட்டதாகவும் மஹாவம்சம் திட்டமிட்டே இதற்கான பதிவுகளை நீக்கி கற்பனைக் கதைகளை இணைத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டுகிறார்.

மஹாவம்சத்தின் திருத்தப்பட்ட பதிவின் படி தன்னைக் குருடாக்க வந்த படைகளைத் தோற்கடித்து ஒன்பது வருடங்கள் இரண்டாம் புவனேகபாகு ஆட்சி புரிந்ததாகவும் குருநாகலயை தலைநகராக்கக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கிறது.

அத்துடன் அவர் சுமார் ஆயிரம் பௌத்த துறவிகளுக்கு அக்கால கட்டத்தில் அனைத்து உதவிகளையும் செய்ததாகவும் தெரிவிப்பதோடு நிறுத்திக் கொள்கிறது. இது தவிர மஹாவம்சத்தில் இரண்டாம் புவனேகபாகு பற்றிய வேறு பதிவுகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் இக்கால கட்டத்தில் இன்னும் இரு வரலாற்றுச் சம்பவங்கள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று, இத்தாலி, வெனிசைச் சேர்ந்த பிரபல கடல் வர்த்தகர் மார்க்கோ போலோவின் இலங்கை வருகை மற்றையது மொரோக்கோ கடலோடியும் நாடுகாண் பயணியுமான இப்னு பதூதாவின் இலங்கை வருகை.

வடக்கு ஆபிரிக்கா, மேற்கு ஆபிரிக்கா, தெற்கு ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா, மையக் கிழக்கு, இந்தியத் துணைக் கண்டம், நடு ஆசியா, தென்கிழக்கு ஆசியா, சீனா என 30 வருடங்கள் கடற்பயணத்தில் ஈடுபட்டிருந்த இப்னு பதூதாவின் முழுப் பெயர் அபு அப்துல்லா முஹம்மத் பின் இப்னு பதூதா என்பதாகும்.

மாலைதீவிலிருந்து இலங்கை வந்தடைந்த இப்னு பதூதா பாவாத மலை (சிறிபாத) மாத்தறையில் அமைந்திருந்த தென்னாவரம் கோயில் பகுதியையும் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதேவேளை இவ்விஜயத்தின் போது அக்கால கட்டத்தில் அவர் வத்ஹிமி ராஜாவை சந்தித்ததாக மரபு வழி நம்பிக்கை நிலவுகிறது.

எனினும் இது சற்று ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். இது குறித்து ஆராய்ந்த சரித்திர ஆசிரியர்கள் இப்னு பதூதாவின் ரிஹ்லா பயணக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அவர் 'அல்-லங்கார் கோனாரை' சந்தித்ததாக தெரிவிக்கின்றனர்.

இங்கு கோனார் எனும் பதம் (கோன்) அரசனைக் குறிப்பதாகும். எனவே இலங்கையின் மன்னரை சந்தித்ததாக அவர் தெரிவித்திருக்கிறார் எனும் முடிவுக்கு வர இயலும்.

ஆதலால் அவர் சந்தித்த அல்கோனார் இரண்டாம் புவனேகபாகுவாகவே இருக்க வேண்டும் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் நிலைப்பாடு.

இரண்டாம் புவனேகபாகு தொடர்பில் மேலும் ஒரு சுவாரஸ்யமான விடயம் யாதெனில் அவர் அதற்கு முன்னைய மன்னர்களைப் போன்றன்று சிறி சங்கபோதி எனும் மன்னர்களால் பாவிக்கப்பட்ட அடைமொழியை உபயோகிக்காதவராகவும் இருந்ததாக குறிப்புகள் தெரிவிக்கின்றன.

எனவே இப்னு பதூதா சந்தித்ததாகக் கருதப்படும் அல்-கோனார் (இலங்கையின் மன்னன்) ஆகிய வத்ஹிமி ராஜா ஒரு முஸ்லிமாக இருந்தார் எனும் வாதம் இதனடிப்படையில் ஆய்வாளர்களினால் வலுப்படுத்தப்படுகிறது.

எனினும் வத்ஹிமி ராஜாவின் ஆட்சி குறுகிய காலமே நிலவியதாக மஹாவம்சத்தின் அடிப்படையிலான பொதுவான வரலாற்றுப் புரிதல் நிலவுகிறது.

இக்கால கட்டத்தில் கவனிக்கத்தக்க இன்னுமொரு விடயம், இலங்கையிலும் யாழ்ப்பாண இராச்சியம் மூலம் கோலோச்சி வந்த பாண்டியர்களின் ஆட்சி கி.பி. 1323 அளவில் மதுரையில் வீழ்ச்சியடைந்தது. தில்லி சுல்தானின் படையெடுப்பினால் தோற்கடிக்கப்பட்ட பாண்டியர்களின் ஆட்சியும் சைவ மத கலாச்சாரமும் அதன் பின் சில காலங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தினூடே இலங்கையில் மாத்திரமே உறுதியாக இருந்தது.

அண்டை நாடான இந்தியாவில் தென்னகம் வரை தில்லி சுல்தானின் ஆட்சி பரவியிருந்த நிலையில் இலங்கையிலும் அலகேஸ்வராக்களின் ஆதிக்கம் பரவியிருந்தது.

இப்போது இந்த அலகேஸ்வராக்கள் என்று கூறப்படுவோர் யார்? அவர்கள் எங்கிருந்து வந்திருப்பார்கள் என்று அலசும்போது, இவர்களைத் தமிழில் 'அழகக்கோன்' எனும் பெயர் கொண்டு வரலாறு குறிப்பிடுவதையும், இவர்களில் பெரும்பாலானோர் தென்னிந்தியாவிலிருந்து, குறிப்பாக மலையாளக் கரையோரங்கள், காஞ்சிபுரம் போன்ற பகுதிகளிலிருந்து சம காலத்தில் வந்தவர்களாகவும் அறியப்படுகிறார்கள்.

இலங்கையில் கோட்டை இராச்சியம் நிறுவப்பட்டதிலும் யாழ்ப்பாண இராச்சியத்துடனான போர்களிலும் இவர்களின் பங்கு குறித்து வரலாறு பேசுகிறது.

ஆரம்பத்தில் காஞ்சிபுரத்தில் உருவான முஸ்லிம் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த அழகக்கோன் வம்சாவழியினர் கம்பளை இராச்சியத்தில் கிடைத்த நற்பேறுகளின் பலத்துடன் பின் நாளில் அரச வம்சத்தில் கலந்து கொண்டதாக இந்திய வரலாற்றுக் குறிப்புகளோடு ஒன்றிப் போகும் பதிவுகள் தெரிவிக்கின்றன.

எனினும், இலங்கைத் தீவில் இன்றும் 'அழகக்கோன்' என்பது ஒரு சிங்களப் பெயராகவே பார்க்கப்பட்டு வருகிறது. இது ஒரு வேளை பின் நாளில் உருவான 'கடவுள் நம்பிக்கை' அடிப்படையிலான மாற்றங்களாகக் கூட உருவெடுத்திருக்கலாம்.

இதை சற்று ஆராயும் போது கோனார்களின் இறுதி மன்னன் என அறியப்படும் வீர அலகேஸ்வரா பற்றி சிறிது அலசும் தேவை வருகிறது.

கி.பி 1387 முதல் 1391 வரை ஆட்சியிலிருந்த வீர அலகேஸ்வரா ( இவர் பெயர் பின் நாளில் வீர அழகக்கோன் அல்லது சுருக்கப்பட்ட வீரக்கோனாக மாறியிருக்கலாம், இந்நாளில் வீரக்கோன் என்பது பிரபலமான ஒரு சிங்களப் பெயராகும் ) தமது குடும்ப உட்பூசல் காரணமாக பதவி இழந்து, பின் வெளிநாட்டுத் தொடர்புகள் மற்றும் உதவியுடன் கி.பி. 1399 அளவில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுகிறான்.

இக்கால கட்டத்திலேயே முன் சென்ற உரைகளில் நாம் பார்த்திருந்த சீனக் கடலோடி சென் ஹேவுக்கும் இலங்கையுடனான உறவுகளை வளர்த்துக்கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டது. இவர ஹாஜி முஹம்மது ஷம்ஷுதீன் எனும் இன்னொரு பெயர் கொண்டும் வரலாற்றில் அறியப்படுகிறார்.

Zheng He இலங்கைத் தீவோடு எவ்வகையிலும் போர் புரிவதற்காக வரவில்லை, மாறாக வர்த்தக நோக்கத்தோடே வந்திருந்தது பின் நாளில் அவர் வரவு பற்றிய குறிப்புகள் அலசப்படும் போது தெளிவாகிறது. இதனடிப்படையில் Zheng He இத்தீவிற்கு கி.பி. 1400 அளவுகளில் மூன்று தடவைக்குக் குறையாமல் வந்திருக்கிறார்.

தொடரும்...

நவமணி NAVAMANI WEEKLY

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk




## ஜோர்தானில் சில நாட்கள்

# பல்லினத்தை வளமாக கருதும் ஜோர்தான்

■ என்.எம். அமீன்

உலகில் மக்கள் விஜயம் செய்யக்கூடிய முப்பது நாடுகளில் ஏழாவது நாடாக ஜோர்தான்





திகழ்கின்றது. சுற்றுலாத்துறையை தனது பிரதான வருமான வழியாக மாற்றிச் செயற்படும் ஜோர்தானின் சனத்தொகை 60 இலட்சமாகும். இவர்களில் 92 சத வீதம் சுன்னி முஸ்லிம்களாகும். இங்கு 6 சதவீதமான கிறிஸ்தவர்கள் வாழ்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் தலைநகரான அம்மான், மற்றும் மதபா, கர்கா மற்றும் சோல்ட் பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள். ஜோர்தானில் சகல இனத்தவர்களுக்கும் சுதந்திரமாகச் செயற்படும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஜோர்தானில் வாழும் சகல இனக்குழுக்களுக்கும் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அனுமதி வழங்கியிருப்பதுடன் தம் மொழிகளிலே கல்வி கற்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இது நாட்டில் ஸ்திரத்தன்மையைக் கட்டி எழுப்புவதற்கு உதவியாகியுள்ளது.

ஜோர்தானில் 70 சதவீதத்துக்கு மேற்பட்டோர் பலஸ்தீனிய வம்சாவளியினர்களாக இருக்கிறார்கள். இது தவிர 14 இலட்சம் பலஸ்தீனியர்கள் அகதிகளாக ஜோர்தானில் வாழ்ந்து வருகிறார்கள்.பலஸ்தீனியர்கள் ஜோர்தானில் அரசியல் பொருளாதார செயற்பாடுகளில் முக்கிய வகிபாகத்தை வகித்து வருகிறார்கள். 1948 ஆம் ஆண்டு மற்றும் 1967 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற இஸ்ரேல் அரபு யுத்தங்களையடுத்தே மக்கள் அகதிகளாக ஜோர்தானுக்கு இடம்பெயர்ந்தனர்.

மேற்கு ஆசியாவின் கோகஸஸ் பிராந்தியத்தில் வாழ்ந்த அரபி அல்லாத சர்கசியன் இனத்தவர்கள் 1878 இல் ஜோர்தானுக்கு இடம்பெயர்ந்தனர். இந்நாட்டிலிருந்து 19 ஆம் நூற்றாண்டில் பலவந்தமாக வெளியேறிய மக்களில் 20000 முதல் 80000 மக்கள் ஜோர்தானில் வாழ்ந்து வருகிறார்கள். சர்கசியன்கள் பாதுகாப்பு படைகளில் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர். இன்று ஜோர்தானில் சிறந்த கல்வியைப் பெற்றுள்ள இந்த சமூகம் ஜோர்தானில் பல்வேறு துறைகளில் முக்கிய பதவிகளை வகித்து வருகிறார்கள். ஜோர்தான் மக்களின் பாதுகாப்பு படையில் அவர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. நம்பிக்கைக்குரியவர்களாக இருப்பதனால் மன்னரின் ceremonial படையில் இவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

ஜோர்தானில் 6 சதவீதமான கிறிஸ்தவர்கள் வாழ்வது பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். ஜோர்தானில் 30 இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவ மதத்தளங்கள் இருக்கின்றன. இயேசுநாதர் திரு முழுக்குப்பெற்ற புனித பூமி இங்கேயே இருக்கின்றது. (Jesus baptism site) என அழைக்கப்படும் இந்த இடத்தைத்தரிசிப்பதனை கிறிஸ்தவர்கள் தம் வாழ்வில் கிடைக்கும் பெரும் பேராகக் கருதுகிறார்கள்கள். எமது விஜயத்தின் இரண்டாம் நாளில் இந்த இடத்துக்கு விஜயம் செய்வதற்கு ஏற்பாடாகியிருந்தது.

இரண்டாம் நாளன்று டெட்சியில் நாம் அதிக நேரம் எடுத்ததனால் அந்த விஜயம் ரத்து செய்யப்பட்டது. இதனால் எமது குழுவிலிருந்த வீரகேசரி ஊடகவியலாளர் ஜோசப் ஜோர்ஜ் ஸ்டிபன் மனவேதனையடைந்தார். கிறிஸ்தவராக இருந்தும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தரிசிக்க வேண்டிய முக்கிய தளத்திற்கு போகாமல் போகின்றனே என்பது அவருக்கு வேதனையாக இருந்தது. நிகழ்ச்சிகள் யாவும் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்ததனால் வழிகாட்டி எம்மை அதன்படியே அழைத்துச் சென்றார்.

இதற்கிடையில் அம்மானுக்கு வந்த போது தூதுவர் ஏ.எல்.எம். லாபிரின் இல்லத்தில் இராப்போசனை விருந்துபசாரம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதுவரை ஜோர்தான் உணவுகளை உண்ட எமக்கு இலங்கையின் சோறு கறிகளை உண்ணும் வாய்ப்பு கிடைத்தது. திருமதி லாபிர் தன் கைபட சமைத்த உணவு வகைகளை உண்ணும் வாய்ப்பும் கிடைத்தது.

இந்த விருந்துபசாரத்தில் ஜோர்தானில் தொழில் புரியும் இலங்கையர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது. அவர் மருதமுனையைப்பிறப்பிடமாகக் கொண்ட சபைர் இப்றாஹிமாவார். இவர் ஜோர்தானில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் நிவாரணப் பிரிவின் சிரேஷ்ட திட்டமிடல் அதிகாரியாகப் பணிபுரிந்து வருகிறார். இப்போது ஜோர்தானில் குவிந்திருக்கும் சிரிய அகதிகளது நலனைக்கவனிக்கும் பொறுப்பிலுள்ள சபைர் இப்றாஹிமாமுடன் சிரிய அகதிகளது நிலைமையைப்பற்றிக்கேட்டறிந்தோம். இச்சந்தர்ப்பத்திலே தூதுவர் லாபிர் ஸ்டிபனை இவருக்கு அறிமுகப்படுத்திவிட்டு திரு முழுக்குப் பெற்ற புனித பூமிக்கு போக முடியாதது பற்றித்தெரிவித்தார். உடனே குறுக்கிட்ட சபைர் இப்றாஹிம் நான் வெள்ளிக்கிழமை விடுமுறையிலிருப்பேன் உங்களை ஹோட்டலுக்கு வந்து அழைத்துச் செல்கிறேன் என்றார்.

பெப்டிசம் சைட்டுக்கு எப்படியாவது போக வேண்டும் என்ற ஸ்டிபனின் ஆசையை நிறைவேற்ற முன்வந்த ஐ.நா அதிகாரி சபைர் வெள்ளியன்று காலையிலே நாம் தங்கியிருந்த ரொடன்டா ஹோட்டலுக்கு தம் மனைவியுடன் வந்து ஸ்டிபனையும் எமது குழுவில் இருந்த ஊடகவியலாளர்களான மஞ்சுல மற்றும் ஹர்ஷனையும் அழைத்துச் சென்றார். நாமோ கடைசி கட்டுரை ரயில் குறிப்பிட்டிருந்த படி இறைத்தூதர் சிறுவனாக இருக்கும் போது சிரியா செல்லும் வழியில் நிழல் வழங்கிய மரத்தைப்பார்ப்பதற்குச் சென்றோம்.

ஸ்டிபனின் பெப்டிசம் சைட்டுக்கான விஜயம் இடம்பெற்ற நாள் பெரிய வெள்ளிக்கிழமை தினமாகும். ஸ்டிபனைப் பொறுத்தவரை அவரது வாழ்வில் கிடைத்த ஓர் அபூர்வ சந்தர்ப்பம் இது என எமது விஜயம் முடிந்து திரும்பும் வரை பல முறை சொல்லிக் கொண்டேயிருந்தார். பரிசுத்த வேதநாமத்தில் யேசு கிறிஸ்து என நாமம் பெற்ற இடம் ஜோர்தான் நதிக்கரை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜோர்தான் நிதிக்கரையானது இஸ்ரேலின் நதிக்கரையிலே அமைந்திருக்கின்றது. அரபு நாடுகளின் மிகப்பெரும் எதிரியாக இஸ்ரேல் இருந்த போதும் நெருங்கிய அயல்நாடான ஜோர்தானுக்கும் இஸ்ரேலுக்கும் தொடர்பு இருக்கின்றது.

ஜோர்தானும் இஸ்ரேலும் வெவ்வேறு நாடு என்பதற்கு ஜோர்தான் நதியே சாட்சியாக உள்ளது. ஆற்றங்கரைக்கு அப்பால் இஸ்ரேல் படையினர் இருக்கின்றனர்.

12 முதல் 15 அடி அகலம் கொண்ட ஜோர்தான் நதியைக் கடந்தால் இஸ்ரேல் மண்ணில் கால் பதிக்கலாம். ஆனால் அதற்கு இரு நாட்டவர்களுக்கும் அனுமதியில்லை. பாதுகாப்பு வேலிகள் எதுவும் போடப்பட்டில்லை. கிறிஸ்தவ சமயத்தில் பல முக்கிய சமயத்தலைவர்கள் விஜயம் செய்த இந்தப்பூமிக்கு உலகெங்கிலுமிருந்து கிறிஸ்தவர்கள் வந்து செல்கின்றார்கள்.

ஆரம்பகால கிறிஸ்தவ ஆலயங்கள் பல ஜோர்தானிலே இருப்பது குறித்து ஜோர்தான் பெருமையாகப்பேசுகிறது. பெதனி கிறிஸ்த ஆலயம் திருமுடிக்கு அருளப்பரின் நினைவாலயம் உட்பட பல முக்கிய கிறிஸ்தவ ஆ லயங்களைத் தன்னகத்தே கொண்ட ஜோர்தான் அதனை பாரமாகக் கருதாது அருளாகக் கருதி பேணிப்பாதுகாத்து வருகின்றது. இதற்கு முன்பும் நான் குறிப்பிட்டது போன்று எண்ணெய் வளமோ கேஸ் வாயு வளமோ இல்லாத ஜோர்தானுக்கு சமய சுற்றுலா மூலம் வருமானத்தைத்தேடித்தரும் ஒன்றாக உலகப் புகழ்பெற்ற கிறிஸ்தவ ஆலயங்கள் அமைந்துள்ளன. எகிப்திலிருந்த மூஸா நபி ஜோர்தானுக்கு விஜயம் செய்த போது பயணித்த நேபா மலைக்கும் நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். மூஸா நபியின் இறுதிக்காலத்தை பிரதிபலிக்கும் வகையில் ஒரு சிறிய கிறிஸ்தவ ஆலயம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. 4 ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்ட இந்த ஆலயம் 5 ஆம் 6 ஆம் நூற்றாண்டுகளில் புனரமைக்கப்பட்ட போதும் ஆரம்ப காலத்தில் இடப்பட்ட 2000 ஆண்டில் மறைந்த பாப்பாண்டவர் ஜோன் போல் இந்த இடத்துக்கு விஜயம் செய்தார். அதற்காக நிர்மாணிக்கப்பட்ட மேடை இன்றும் பேணிப்பாதுகாக்கப்படுகின்றது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதில் ஜோர்தான் முன்மாதிரி மிகு நாடாக இருக்கின்றது. சமயங்களுக்கிடையான பொறுமைக்கு இந்த அரபு நாடு முன்மாதிரி மிக்கத்தாக இருக்கின்றது.

(தொடரும்)



# கட்டாரை ஒடுக்கும் மறைகரம்

ஸகிபவ்ஸ் (நளீமி)

கட்டாரின் மீதான பொருளாதார நெருக்கடிகளின் பின்புலத்தில் ஐக்கிய அரபு இராச்சியமே மறை கரமாக தொழிற்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக கட்டாரை ஓரம் கட்டுவதற்கான ஏராளமான முயற்சிகளை ஐக்கிய அரபு இராச்சியம் மேற்கொண்ட போதிலும் கூட, சவூதி அரேபியாவின் ஒத்துழைப்பும், உடன்பாடும் அபூதாபியின் நகர்வுகளுக்கு சார்பாக அமையவில்லை. ஆனால், தற்போது சவூதி அரேபியாவின் அரச மாளிகையில் ஏற்பட்டிருக்கும் உள்முரண்பாடுகளை அபூதாபி கவனமாக தனக்கு சார்பாக பயன்படுத்துகிறது. அதாவது, மன்னர் ஸல்மானுக்கு பிறகு சவூதி அரேபியாவின் மன்னராக வருவதற்கு இருவர் வரிசையில் நிற்கிறார். இருவரில் பிரதான இளவரசராக முஹம்மத் இப்னு நாயிப் மற்றும் பிரதி இளவரசராக முஹம்மத் இப்னு ஸல்மான் காணப்படுகிறார். மேற்கூறப்பட்ட இருவரிலும் முஹம்மத் இப்னு ஸல்மானே தற்போதைய மன்னர் ஸல்மானுடைய மகனாகும். இந்தப் பின்புலத்தில், தனது மகனை அடுத்த மன்னராக முன்னிறுத்துவதற்கு மன்னர் ஸல்மானின் முயற்சிகள் தீவிரமாகவே நடைபெற்று வருகின்றன. சவூதி அரேபியாவின் மன்னராக ஒருவர் நியமனம் பெறுவதற்கு அமெரிக்காவினுடைய ஆசிர்வாதமும், ஆதரவும் இன்றியமையாத ஒன்றாகும். எனவே, ஐக்கிய அரபு இராச்சியத்தினை மையப்படுத்தி மத்திய கிழக்கிற்கான புதிய கொள்கையை வடிவமைக்கப் போகும் ட்ரம்ப் நிர்வாகத்தினுடைய பூரண ஆதரவை முஹம்மத் இப்னு ஸல்மானுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக மன்னர் ஸல்மான் திட்டமிடுகிறார். இதற்காக ட்ரம்ப் நிர்வாகத்துடன் நெருங்கிய உறவைப் பேணும் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் எஜண்டாவுக்கு சார்பாக இயங்க வேண்டிய நிலை ரியாதிற்கு ஏற்பட்டுள்ளது.

**ஐக்கிய அரபு இராச்சியத்தின் இராஜதந்திர மற்றும் பிராந்திய முன்னுரிமைகள்:**

அகன்ற முஸ்லிம் உலகைப் பொறுத்தவரை, ஐக்கிய அரபு இராச்சியத்தின் இராஜதந்திரம் மூன்று புள்ளிகளைச் சுற்றிச் சுழல்கிறது. முதலாவது, துருக்கியின் வகிபாகத்தை மத்திய கிழக்கில் கட்டுப்படுத்தல். இரண்டாவது, இராஜதந்திர பருமன் கூடிய எகிப்தின் அரச தீர்மானங்களில் ஆதிக்கம் செலுத்தல், மூன்றாவது இஸ்லாமிய இயக்கங்களை ஒடுக்குதல், நான்காவது மாற்று அரசியல் கொள்கைகளுடன் இயங்கும் கட்டாரை சர்வதேச ரீதியாக தனிமைப்படுத்தல் என்பனவாகும். இதற்காக இஸ்லாமிய அரசாங்கத்துடனும், உளவுப் பிரிவுகளுடனும் ஐக்கிய இராஜ்ஜியம் நெருக்கமாக செயற்படுகின்றது. மேற்சொன்ன அபூதாபியின் நான்கு இராஜதந்திர நகர்வுகளையும் சவூதி அரேபியா விரும்பியோ, வெறுத்தோ ஆதரவளிப்பதற்கு மன்னர் ஸல்மானின் நிர்வாகம் உடன்பட்டிருக்கிறது. ஏனெனில், முழு மத்திய கிழக்கிலும் எரியும் முரண்பாடுகளின் மீது எண்ணை ஊற்றும் அபூதாபியின் நகர்வுகளை விட, அடுத்த பரம்பரைக்கு தாவப் போகும் மன்னர் பரம்பரையை கவனமாக தனது மகனிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்பது மன்னர் ஸல்மானின் எதிர்பார்ப்பாகும். இவ்வாறு முஹம்மத் இப்னு நாயிபிற்கும், முஹம்மத் இப்னு ஸல்மானுக்கும் இடையிலான அதிகாரத்திற்கான போட்டியை அபூதாபி பயன்படுத்தியதன் விளைவே தற்போதைய கத்தார் மீதான பொருளாதார, சமூக நெருக்கடி எனலாம்.





மேலும், முஹம்மத் இப்னு ஸல்மானுக்கு ஆதரவளிக்குமாறு அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களுக்கு அழுத்தம் கொடுத்தல், அவரின் அரசியல் நிலைப்பாடுகளுக்கு உடன்பாடான முறையிலேயே அமெரிக்காவுடைய நலன்கள் அமைந்துள்ளது எனும் மக்கள் பொதுக் கருத்தை உருவாக்குதல் போன்ற நிரைமறைவு அரசியல் வியாபாரத்தை சவூதி அரேபியாவுக்காக அபூதாபி முடுக்கி விட்டுள்ளது. மட்டுமன்றி, வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சவூதி அரேபியாவுக்கு சார்பாக இஸ்ரேலிய ஊடகவியலாளர்கள் எழுதுவதற்கு ஆரம்பித்திருப்பதும் அபூதாபியின் ஆதரவின் பின்னணியே காரணமாகும். இவ்வாறு, உள்நாட்டு அரசியல் முரண்பாடுகளை பயன்படுத்திக் கொள்வதும், அதில் ஒரு சாராருக்கு சார்பாக சர்வதேச கொள்கை வகுப்பாளர்களின் நிலைப்பாடுகளை பணத்திற்கு வாங்குவதும் அபூதாபியில் கைவந்த கலை எனலாம்.

இதனையே, அமெரிக்காவுக்கான அபூதாபியின் தூதுவர் யூசுப் உதைபா ஐக்கிய இராஜ்ஜியத்தின் அதிகமான எண்ணை வருவாய் அமெரிக்காவிடமே செல்கிறது எனக் கூறுகிறார். அதாவது, பிராந்திய அரசியல் மாற்றங்களின் போது ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு சார்பாக அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள், ஆய்வு நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களது கருத்துக்களை வடிவமைத்துக் கொள்ளும் இலக்குடன் அபூதாபியினுடைய பல மில்லியன் கணக்கான டொலர்கள் அமெரிக்காவிலே முதலீடு செய்யப்பட்டுள்ளதையே யூசுப் உதைபா மறைமுகமாக சுட்டிக்காட்டுகிறார். ஐக்கிய அமெரிக்காவின் உயர் அரசியல் கொள்கை வகுப்பாளர்களை விலைக்கு வாங்கும் அபூதாபியின் அரசியல் வியாபாரம் 1990களின் கடைசிப் பகுதி முதல் இடம்பெற்று வருகின்றன. அமெரிக்காவை விட பிரான்ஸிற்கும், இங்கிலாந்திற்கும் சார்பாகவே வெளிநாட்டு உறவுகளை பாரம்பரியமாக ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் மன்னர் பரம்பரை தொழிற்படுத்தியது. ஆனால், தற்போதைய ஐக்கிய அரபு இராச்சியத்தின் இளவரசர் முஹம்மத் இப்னு ஸாயித் அரச குடும்பத்தின் பொது உடன்பாட்டுக்கு மாற்றமாக அமெரிக்காவின் உளவுப் பிரிவுடனும், அமெரிக்க அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுடனும் செய்து கொண்ட இரகசிய பேச்சுவார்த்தைகளுக்கு ஊடாக அரச குடும்பத்தின் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டார். அன்றிலிருந்து ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் அரசியல் நிலைப்பாடுகளை விலைக்கு வாங்கும் இராஜதந்திரம் தொடர்கிறது.

கடந்த ஆண்டு அரங்கேற்றப்பட்டு தோல்வியடைந்த துருக்கியின் இராணுவப் புரட்சியின் பின்னாலும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் மறைகரம் தொழிற்பட்டுள்ளமை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. மூன்று பில்லியன் டொலர்களை துருக்கியின் ஜனாதிபதியை வீழ்த்துவதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் கொடுத்துதவியதாக அபூதாபியின் ஐக்கிய அமெரிக்காவுக்கான தூதுவர் யூசுப் உதைபாவின் கசிந்த ஈமெயில்கள் கூறுகின்றன. அதேபோன்று, பலஸ்தீனப் போராட்டத்தில் பிளவை ஏற்படுத்துவதற்காகவும், அங்கு இயங்கும் போராட்ட குழுக்களை பலவீனப்படுத்தும் நோக்குடனும் முஹம்மத் தஹ்லானை அபூதாபி பயன்படுத்தி வருகின்றது. அதாவது, மஹ்மூத் அப்பாஸுடைய அரசாங்கத்திற்கு எதிராக பதாஹ் அமைப்பின் உயர்பீட உறுப்பினராக முஹம்மத் தஹ்லானை வைத்து ஏராளமான சதித்திட்டங்களை ஐக்கிய அரபு இராச்சியம் செய்து முடித்துள்ளது. இந்த வகையில் முஹம்மத் தஹ்லானுக்கான முழுமையான பாதுகாப்பையும், பண உதவிகளையும் ஐக்கிய அரபு இராச்சியம் கொடுத்துதவியுள்ளன. தீவிரவாதம் மற்றும் கடும்போக்குவாதத்திற்கு சார்பாக கட்டார் இயங்குகிறது மற்றும் அல்ஜஸீரா தொலைக்காட்சி சேவை அதற்கு துணை செய்கின்றன பொதுக் கருத்தை உருவாக்குவதற்கு இஸ்ரேலிய லொபிகளுடன் இணைந்து அமெரிக்கத் தூதுவர் யூசுப் உதைபா செயற்பட்டுள்ளதனையும் அவரது ஈமெயில் கசிவுகள் புலப்படுத்தியன.

கடந்த 2010 - 2013 வரை வரை அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களை விலைக்கு வாங்குவதற்காக ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 10 பில்லியன் டொலர்களையும், எகிப்தில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதி முஹம்மத் முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்ட ஆண்டில் அது 14 பில்லியன் டொலர்களாகவும் அதிகரித்துச் சென்றதனை தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. அதேபோன்று, அமெரிக்காவில் இயங்கும் மிகப் பெரும் லொபிகளான கெம்ஸ்டேல் நிறுவனம் மற்றும் ஹார்பர் நிறுவனத்தை ஊடகமாகப் பயன்படுத்தியே ஐக்கிய அரபு இராச்சியம் தனக்கு சார்பான அரசியல் நிலைப்பாடுகளை விலைக்கு வாங்குவதற்கு முயல்வதாக ஆய்வாளர் முஹம்மத் சாத் கூறுகிறார். உதாரணத்திற்கு, கட்டாருக்கு எதிராக 2014ஆவது வருடம் தொடுக்கப்பட்ட இராஜதந்திரப் போரின் போது வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் பிரபல எழுத்தாளர்களை மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அணுகி, கட்டாரையும், தீவிரவாதத்தையும் சம்பந்தப்படுத்தி கட்டுரைகள் எழுதுவதற்கு தூண்டியதாகவும் தகவல்கள் கூறுகின்றன. இதனை வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் முன்னணி எழுத்தாளர் ஒருவரே வெளிப்படுத்தியிருந்தமையும் நோக்கத்தக்கது.

மறுபுறம், அத்திலாந்திக் கவுன்ஸில், புருகிங்கஸ் நிறுவனம், ராண்ட் ஆய்வகம், இராஜதந்திர ஆய்வுகளுக்கான நிறுவனம், ஸ்டிம்ஸன் நிறுவனம், அமெரிக்கன் போராக்ரஸ் ஆய்வகம், ஈஸ்ட் வெஸ்ட் ஆய்வகம் மற்றும் அண்மிய கிழக்கு அரசியல் ஆய்வுகளுக்கான வொஷிங்டன் ஆய்வகம் போன்ற அமெரிக்காவின் மிகப் பெரும் கொள்கை வகுப்பு ஆய்வு நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்வதிலும், அதன் கருத்துக்களை தனக்கு சார்பாக அமைத்துக் கொள்வதற்கு அழுத்தம் கொடுப்பதிலும் ஐக்கிய அரபு இராச்சியம் முன்னிலையில் நிற்கிறது. சுவாரஷ்யமான விடயம் என்னவென்றால், அமெரிக்காவின் உயர் கொள்கை வகுப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆய்வாளர்கள், இராஜதந்திரிகளுக்கு தமது தொழிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் கூட, வருவாய்க்கான ஒரு வழியாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் எஜண்டாக்களுக்கு ஆதரவளிப்பதனை அவர்கள் கருதுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான விஜயங்களை மேற்கொண்டு ஆய்வு மாநாடுகளை நடத்துதல் மற்றும் அமெரிக்காவின் இயங்கு உயர் பல்கலைக்கழகங்களது பிரிவுகளை அபூதாபியில் நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் போன்றவற்றை அமெரிக்க ஆய்வாளர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு செய்து கொடுப்பார்கள். மேலும், ஏற்கனவே குறிப்பிடப்பட்ட அத்திலாந்திக் கவுன்ஸில் ஆய்வகத்தில் ஐக்கிய அரபு இராச்சிய அரசுக்கும், அங்குள்ள ஆய்வாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் விளைவாக, சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கும், கட்டாருக்கும் இடையில் ஊழல்கள் நடைபெற்றுள்ளன என்றும், அதுவே 2022ஆவது ஆண்டு கால்பந்தாட்டப் போட்டியை நடத்துவதற்கான அனுமதியை கால் பந்தாட்ட சம்மேளனம் கத்தாருக்கு வழங்குவதற்கு நேரடிக் காரணமென்றும் ஓர் ஆய்வாக சமர்ப்பிப்பதற்கு தீர்மானம் எட்டப்பட்டது. இது குறித்த விரிவான விசாரணைகள் வெளிவந்துள்ளன.

இறுதியாக, அரபுலகம், அதன் வடிவம் மற்றும் அதிகார சமநிலைகள் எப்படி வரையப்பட வேண்டும்? என்ற விடயத்தில் கத்தாரும், ஐக்கிய அரபு இராச்சியமும் நேரடியாக முரண்படுகின்றன. இந்தப் பின்புலத்தில் இஸ்ரேல், சவூதி, எகிப்து மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் என்ற பழைய அரபுலக ஒழுங்கை அபூதாபி மீண்டும் மீளுருவாக்கம் செய்வதற்கு முயல்கின்றது. குறிப்பாக, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் அபூதாபி என்ற கூட்டணியை அமெரிக்காவின் மத்திய கிழக்கிற்கான விசையாக மாற்றியமைப்பதற்கு அது செயற்படுகின்றன. அமெரிக்கா, இஸ்ரேல், ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளடங்கலான கூட்டணிக்கு ரியாதையும் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் அபூதாபி இறங்கியுள்ளது. இதுவரை அது வெற்றி பெற்றதொரு பிரயத்தனமாகவே தென்படுகின்றது. ஏனெனில், மெதுவாக சவூதியின் இராஜதந்திரிகளும், கொள்கை வகுப்பாளர்களும் இஸ்ரேலுடனான உறவை பலப்படுத்தும் முன்னெடுப்புகளை ஆரம்பித்துள்ளனர். வரலாற்றின் முதல் முறையாக சவூதி அரேபியாவின் அரசியல் விற்பன்னர் ஒருவர் இஸ்ரேலினுடைய செனல் 2 தொலைக்காட்சி சேவையில் நேரடியாக தோன்றியுள்ளார். அபூதாபியைப் பொறுத்த வரைக்கும், இது மிகப் பெரும் வெற்றியே ஆகும். இவ்வாறு, மத்திய கிழக்கிற்கான கொள்கைகளை, நிலைப்பாடுகளை விலைக்கு வாங்கும் சர்வதேச பாதாள உலக கோஷ்டியாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் அரசியல் தலைமைகள் மாறியுள்ளமை அரபுலக எதிர்காலத்திற்கு பெரும் அச்சுறுத்தல் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.




# டெங்கினால் நீர்கொழும்பு இளைஞர் பலி

(நீர்கொழும்பு நிருபர்)

நீர்கொழும்பு பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் டெங்கு நோய்க்குப் பலியாகியுள்ளார். குரண பிரதேசத்தைச் சேர்ந்த கவேஸ் தரிஜூ எனும் 14 வயது மாணவர் நீர்கொழும்பு சர்வதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வந்த நிலையில் குறித்த மாணவன் கடந்த புதன் கிழமை உயிரிழந்துள்ளார். இவர் 3 பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் மூத்த பிள்ளையாவார்.

அண்மைக்காலமாக நீர்கொழும்பில் குரண, தழுபொத்த, பெரியமுல்லை பகுதிகளில் டெங்கு நோய் தீவிரமாக பரவிவருகின்றது. இது தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை என அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# உதவி கோரல்



கண்டி படகொள்ளாதெனிய கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 414/1 ஹல்கொல்ல படகொள்ளதெனிய எனும் முகவரியில் வசிக்கும் 47 வயதுடைய எம்.எஸ். எம். ரிஸ்மி என்பவர் இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கான செலவாக சுமார் 35,00000 ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவருக்கு பெண்பிள்ளையொன்றும், ஆண்குழந்தையும் இருப்பதுடன் மொத்தமாக ஏழு பேர் கொண்ட இவரது குடும்பத்துக்காக அன்றாடம் கூலித்தொழில் செய்தே பராமரித்து வருகிறார். எனவே வறுமைக்கோட்டில் வாழும் இவரால் இந்த சத்திர சிகிச்சைக்குத்தேவையான பணத்தொகையைத் திரட்டிக்கொள்ள முடியாததனால் நல்ல உள்ளம் படைத்த உங்களிடம் உதவியை எதிர்பார்க்கின்றார். இவரது குடும்ப நிலையை உணர்ந்து சத்திர சிகிச்சைக்கு உதவ முன்வருவோர் அங்கும்புரை மக்கள் வங்கிக்கிளையின் பின்வரும் கணக்கிலக்கத்திற்கு உங்களது உதவிகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

தொடர்புகளுக்கு-எம்.எஸ்.எம். ரிஸ்மி
மக்கள் வங்கி அங்கும்புரை கிளை
கணக்கிலக்கம்-183200130035298.

# பரிசளிப்பு வைபவமும் இப்தார் நிகழ்வும்


(முியாஸ் ஆதம்)

சின்னப் பாலமுனை, சுப்பர் ஒக்கிட் விளையாட்டுக் கழகம் புனித றமழான் மாதத்தினை சிறப்பிக்கும் வகையில் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையில் நடாத்திய சுவனத் தென்றல் இஸ்லாமியப் போட்டி நிகழ்ச்சியின் வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டும்முகமாக ஏற்பாடு செய்துள்ள பரிசளிப்பு விழாவும், இப்தார் நிகழ்வும் சனிக்கிழமை (17) மாலை 4 மணிக்கு சின்னப்பாலமுனை அல்-ஹிக்மா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சுப்பர் ஒக்கிட் விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், பிரதி அதிபருமான பீ.முஹாஜிரீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி அல்-ஹாபிழ் என்.எம். அப்துல்லா பிரதம அதிதியாகவும், கௌரவ அதிதிகளாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம் காசிம், அட்டாளைச்சேனை பதில் பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மில், அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ஏ.எல்.அலாவுதீன், அஷ்ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாஸிம் சூரி(மதனி), ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.







# அன்னமும் காகமும்



மனித நடமாட்டம் அற்ற ஓர் இடத்தில் சிறிய மலைக்குன்று ஒன்று இருந்தது. அந்தக் குன்றின் மேலே ஏறுவதற்கு சரியான பாதை இல்லை. பாதையில்லாததால் மலைக்குன்றில் மனித நடமாட்டம் இல்லாமல் அக்குன்று அமைதியாய் இருந்தது.

அந்த அமைதி மலைக்குன்றில் உள்ள பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் சந்தோஷத்தை உண்டாக்கின. பெரிய மரங்கள் அவ்வளவாக அக்குன்றில் வளரவில்லை.

எனவே, அக்குன்றில் வாழும் பறவைகள் மலைக்குன்றின் குகைக்குள் சிறிய பொந்துகளில் கூடுகட்டி அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்ந்து வந்தன.

பறவைகளில் அன்னப்பறவை ஒன்று ஒரு குகைக்குள் பொந்து ஒன்றில் தன் குஞ்சுகளோடு இருந்தது. குஞ்சுப் பறவைகளின் கீச் கீச் சத்தத்தில் மகிழ்ந்து, அவைகளுக்கு இரையை ஊட்டி மகிழ்ந்தது. தாய்ப்பறவையான அன்னம் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த நேரத்தில்தான் விடாது மழை பெய்தது. மழையால் அன்னப்பறவையும் அதன் குஞ்சுகளும் குளிரால் நடுங்கியபடியே கூட்டை விட்டு வெளியே வராமல் முடங்கியிருந்தன.

அந்த நேரத்தில் மழையில் நனைந்தபடியே பறந்து வந்த காகமொன்று அன்னப்பறவையின் கூட்டிற்கு அருகே குளிரால் நடுங்கியபடியே நின்றது.

வெடவெடவென நடுங்கியபடியே அன்னமே! அன்னமே! ரொம்ப குளிராக இருக்கிறது. கொஞ்ச நேரம் ஒன்னோட கூட்டுல தங்கிக் கொள்கிறேன். மழை நின்றவுடன் பறந்து விடுவேன் உதவி செய்யேன் என கெஞ்சியது.

காகத்தின் கெஞ்சல் அன்னப்பறவைக்கு காகம் மீது இரக்கம் ஏற்பட்டது ஆதலால், காகமே தாராளமாக தங்கிக்கொள். மழைவிட்டவுடன் செல்லலாம் என அனுமதியளித்தது. காகமும் அன்னப்பறவையின் கூட்டில் குளிரைப் போக்கிக் கொள்ள தங்கியது.

சிறிது நேரத்தில் மழை நின்றது.

அன்னப்பறவைக்கு நன்றி சொல்லிவிட்டு காகத்தின் பறக்க தயாரானது. பறக்க ஆரம்பிக்கும் போது அந்த இடத்தில் காகம் எச்சமிட்டு விட்டே சென்றது.

நாட்கள் பல கடந்து ஆண்டுகள் சில சென்றவுடன் காகத்தின் எச்சத்தில் இருந்து ஆல விதைகள் முளைத்து செடியாகி பின் மரமாய் வளர்ந்தது.

மரத்தில் கிளைகளும் விழுதுகளும் தோன்றி பெரிய ஆலமரமாய் காட்சியளித்தது. ஆலமரத்தின் விழுதுகள் குன்றின் அடிவரை சென்றது.

மலைக்குன்றை ஏற முடியாத வேடன் ஒருவன், ஆலவிழுதினை பிடித்துக் கொண்டு மேலே ஏறிச் சென்றான். அங்கே குன்றின் பொந்தில் இருந்த அன்னப்பறவையையும் அதன் குஞ்சுகளையும் பிடித்து தன்னுடைய கூடையில் போட்டுக் கொண்டு இறங்கினான்.

சந்தோஷமாக இருந்த அன்னப்பறவையும் அதன் குஞ்சுகளும் கவலையுடன் அவனது பையில் இருந்து தப்பிக்க வழி தேடின.

# முளைவிடும் அரும்புகள்

பவித்ரா

நூறு முறை உளியால் அடித்தும் சிறு கீறல் கூட ஏற்படாமல் இருக்கும் பாறை நூற்றி ஒன்றாவது முறை அடிக்கிறபோத உடையும். அது கடைசி அடியால் உடையவில்லை. அதற்கு முந்தைய அடிகளால்தான் உடைந்தது.



## பொது அறிவு

உலகிலேயே மிக நீளமான நதி
நைல் நதி ( 6695 கிலோ மீற்றர் )

உலகிலேயே மிக உயரமான மலைச் சிகரம்
எவரெஸ்ட் ( நேபாளம் 8848 மீற்றர் )

உலகிலேயே மிக பெரிய வளைகுடா
மெக்சிகோ வளைகுடா

உலகிலேயே பரப்பளவில் மிகச் சிறிய நாடு
வத்திக்கான்

உலகிலேயே பரப்பளவில் மிகப் பெரிய நாடு ரஷ்யா

உலகிலேயே மிக உயர்ந்த பீட பூமி
திபெத் பீட பூமி

உலகிலேயே மிக உயரத்தில் அமைந்துள்ள நாடு
சுவிட்சர்லாந்து

உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம்
சஹாரா பாலைவனம் ( ஆபிரிக்கா)



## உலகின் அதிசயம்

உலகின் அதிசயம் என கூறப்படும் இத்தாலியில் உள்ள பைசா கோபுரம் மூன்று கட்டமாக 177 வருடங்கள் கட்டப்பட்டது இந்த கட்டிடத்தை முதலில் கட்டும் போது, இதன் கீழ் உள்ள மண்ணை சோதிக்காமல் ஒரு கட்டிடம் கட்டுவதற்கான அடிப்படை விசயங்களை கூட கடைப்பிடிக்காமல் கட்டிட அடித்தளத்தை மிகவும் மோசமாக கட்டினர். இதனால் இந்த கட்டிடம் சாயத்தொடங்கியது. இரண்டாம் தளம் கட்டும் போது போர் மூண்டதால் இதன் கட்டுமானம் சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் தொடங்கியதும் ஓரளவிற்கு இதன் அடித்தள மண் இதற்கு ஒத்துழைத்தது ! இதனால் மூன்றாவது தளத்தை அமைக்க முடிந்தது .



ஒரு சிறுமி மாம்பழம் வாங்கி வந்தாள். அதை தனது அம்மாவுக்கு கொடுத்து சாப்பிட ஆசைப்பட்டாள். எப்படி பகிர்வது என்று தெரியவில்லை. அம்மா சொன்னார் எனக்கு பாதி கொடுத்தால் அது உன் அன்பைக் காட்டும் பாதிக்கு மேல் கொடுத்தால் அது உன் தியாகத்தை காட்டும். சிறுமி சிறிது நேரம் யோசித்துவிட்டு பழத்தை முழுவதுமாக அம்மாவிடம் கொடுத்துவிட்டுச் சொன்னாள் அம்மா நீங்கள் பகிர்ந்து கொடுங்கள் உங்கள் தியாக குணம் எனக்கு தெரியும்.

## பழமொழியும் விளக்கமும்

1. ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி :
ஆலும் என்பது ஆலமரத்தை குறிக்கும் வேலும் என்பது வேப்பமரத்தைக் குறிக்கும் இவ்விரண்டையும் கொண்டு பல் துலக்கினால் பல்லுக்கு உறுதியாக இருக்கும் அதேபோல் நாலும் என்பது நாலடியாரை குறிக்கும் இரண்டும் என்பது திருக்குறளைக் குறிக்கும் என்பதால் நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதியாக இருக்கும் என்பதே இதன் பொருள்

2. அடியாத மாடு படியாது:
உண்மை பொருள் என்னவென்றால் மாட்டின் கால்களுக்கு லாடம் அடித்தால்தான் அதனால் கடுமையான வேலைகளை செய்ய முடியும் என்பது தான்.

3. எழுதியவன் ஏட்டை கெடுத்தான். படிச்சவன் பாட்டை கெடுத்தான் :
ஏடு என்பது மிகவும் தூய்மையாக இருக்கும். அதில் எழுதியவுடன் எழுத்துகள் பதிந்து ஏடு கெட்டுப் போகும். அதுதான் எழுதியவன்ஏட்டைக் கெடுத்தது.

## நோன்பின் மாண்பு காணுவோம்

நோன்பின் மாண்பை உணர்ந்தே
நோற்றிடுவாய் என்றும் நீயே - ரமழானில்
நோய் நீக்கும் மருந்துண்டே
நேர்த்தியாகப் பேணிடுவாய் இன்றே

பசித்திரு, தனித்திரு, விழித்திரு எனும்
பண்டையர் நவின்ற நல்வார்த்தை - ரமழானிலே
பகிர்ந்தால் பத்தும் பறந்திடுமே
பார்த்து நடந்தால் பாரில் ஜெயமே...

மடை திறந்த வெள்ளம் போலவே
மன்னில் செய்த தவறுயாவுமே - ரமழானிலே
மாசறக் கையேந்தி வேண்டினாலுமே
மஃஷரிலே மாண்புறச் செய்வானவனே...

கடமை, ஈகை, கட்டுப்பாடு தனை
கண்ணியமாகப் பேணிடுவோம் - ரமழானிலே
காருண்ய நபிவழி காண்போமே
காலத்தை வென்றே கழித்திடலாமே...

கல்பிலே தீனொளி கண்டே
கயவர் சூழ்ச்சிகள் மாழவே - ரமழானிலே
கயமை நீங்க பொறுமையுடனே
கர்த்தாவினருள் வேண்டி நிற்போமே

**வித்தியா நிதி**
**பாணந்துறை எம்.பி.எம். நில்ஸான்**

## சித்திரம் பேசுதடி...

**சித்திரம் பேசும்.**


சித்திரம் ஒன்றைக் கூர்ந்து கவனித்தால் அதன் குரல் நம் காதுகளை எட்டும். வகை வகையான வண்ண ஓவியங்கள் கூடப் பேசுவது ஒரு பக்கம் இருக்க, வெறும் கோடுகளும் உயிரோவியங்களை உருவாக்கும் வல்லமை உடையவையாகும். இவ்வோவியங்களைக் கோட்டுச் சித்திரம்(Line Drawing) என்பர்.

இங்கே இந்தியாவின் புகழ் பெற்ற ஓவியராக **ரங்கா** என்பவர் இரண்டொரு கோடுகள் மூலம் மகாத்மா காந்தியின் உருவத்தை வரைந்திருக்கிறார். மகாத்மா காந்தி நடப்பது போலவும் அமர்ந்திருந்து இராட்டை சுற்றுவது போலவும் இரு படங்கள்!



ஒன்றுக்கு மூன்று கோடுகள்! மற்றையதற்கு இரு கோடுகள் மட்டுமே!

India Perespective என்ற இந்திய சஞ்சிகையின் முன் - பின் அட்டைகளை இக் கோட்டுச் சித்திரங்கள் அலங்கரிக்கின்றன. சஞ்சிகை வெளியான காலம் 1988 ஒக்டோபர். இவ்வோவியங்கள் என்றென்றும் செஞ்சத்திரையில் நீங்கா அலைகளாய்...




## பயோ - பப்(Bio - Bab) எனப்படும் பெருக்கு மரம்

### ஆங்கிலேயர் இலங்கைக்கு கொண்டுவந்த மரம்

ஊர் ஊராய் கலை, கலாசார சுற்றுலா நடாத்தித் திரியும் ஒரு பிரபல தொலைக்காட்சி நிறுவனத்தார் புராதனப் பெருமைமிக்க மன்னார் மாதலத்திலும் சில நாள் தரித்து நின்று நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்புச் செய்தார்கள் - பாராட்டுக்கள்!

அப்போது ஒரு பிரபல பெண் அறிவிப்பாளர் மன்னார் பள்ளிமுனை வட்டாரத்தில் காணப்படும் ஆயிரம் வருடப்பழமைமிக்க இராட்சத மரமொன்றின் அருகில் நின்று நேயர்களிடம் இவ்வாறு கூறினார். ''இம்மரம் ஆங்கிலேயர் கொண்டு வந்து நாட்டிய மரம். இதன் இலையை தங்களது குதிரைகளுக்கு உணவாகக் கொடுத்தார்கள்''



தெரிந்தோ தெரியாமலோ வரலாற்றைத் திரிவுபடுத்தி, திசைமாற்றிமுற்றாக மறைத்தொழிக்கும் முயற்சியே அது.

உண்மையில் Bio - Bab என்றழைக்கப்படும் இந்த மரம் ஆராபியர்களே முதன் முதலில் இலங்கைக்குக் கொண்டு வந்ததாகும். ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த அந்த மரத்தை, தமிழில் **பெருக்கு மரம்** என்றழைப்பார். **யானைப்புளி** என்றும் சொல்வர்.

உயரத்தைவிட மரத்தின் சுற்றளவு பெரிதாக இருக்கும். பத்துப்பதினைந்து பேர் ஒன்று சேர்ந்து கட்டிப்பிடிக்கலாம். இம்மரத்தினது இலைகள் அராபியர்களின் ஒட்டகங்களுக்கு உணவாகப்பயன்படுத்தப்பட்டன. மரத்தின் கிளைப்பகுதி, நிலத்தின் கீழிருக்கும் வேர்ப்பகுதி போல் காணப்படும். சாத்தான் கோபத்துடன் தலைகீழாய் பிடுங்கி எறிந்த மரம் என்றும் சொல்வார்கள்.

வேலியடைத்துப் பாதுகாக்கப்படும் மரம் மன்னார் பள்ளிமுனை வட்டாரத்தில் இருக்கிறது. மன்னாடரங்கிலும் நூற்றுக்கணக்கான மரங்கள் நின்று அவை அழிந்துவிட்டன. தற்போது தாராபுரம், பேசாலை , கீரி, தள்ளாடி, வங்காலை போன்ற இடங்களிலும் புத்தளத்தின் சிற்சில இடங்களிலும் இம்மரங்கள் காணப்படுகின்றன.

## போதைக்கெதிரான போர்

வானொலியில் (வசந்தம்) சஹர் சிந்தனை கேட்டுக் கொண்டிருந்தேன். ஓர் உலமாப் பெருமகன் உரையாற்றிக் கொண்டிருந்தார். உணர்ச்சிமயமான உரை அது. சில வேளைகளில் அவரது உரை ஆவேசமாகவும் இருந்தது. நானும் உணர்ச்சிவசப்பட்டுப்போனேன். சில இடங்களில் என் கண்களும் பனித்தன. நேற்றைய சஹர் சிந்தனை அது!

அவர் என்னதான் அப்படிச் சொல்லிவிட்டார். போதைக்கெதிரான உரையே அது. போதைப் பொருட்களைப் பாவிப்பதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளையும் அதிலிருந்து நம்மை நாம் எவ்வாறு மார்க்க ரீதியாக காப்பாற்றிக் கொள்வது என்பதைப் பற்றியுமே அவரது பயான் அமைந்திருந்தது. உண்மையிலே பயன்மிகு உரை!

அது காலத்தின் கட்டாயமும் கூட. இவ்வாறான உரைகள்தான் இன்றைய தேவை. ஜும்ஆப் பிரசங்கங்களிலும் இவற்றின் அவசியம் இருக்கிறது. சிகரட் முதற்கொண்டு பீடா, பாபுல், ஆவா, கேஜி, ஹெரலின் போன்றவையெல்லாம் போதைப் பொருட்களல்ல, வெறும் பொழுதுபோக்குச் சாதனங்களே என்று வாதிடும் அறிவிலிகளுக்கெதிராக மௌலவி கொடுக்கும் நல்ல சாட்டையடி.

இந்த சிறப்பான பயன்மிகு உரையை நிகழ்த்திக் கொண்டிருந்தவர் வேறு யாருமல்லர் அஷ்ஷெய்க் இம்ரான் ஹஸன் (நுலாரி). அன்னாரைப் 'பேசும் பேனா' வாழ்த்துகிறது. 'பேசும் பேனா'வில் இவர் பேசப்படுவது இவருக்கு பெருமை சேர்க்கும்.

பியர், பிராண்டி, விஸ்கி, ஒட்கா, கீழ்நாட்டுக் கள்ளுச் சாராயம், கசிப்பு போன்றவைதான் போதைப் பொருட்கள் என்று நினைக்க வேண்டாம். நாகரீக உலகில் அழகிய பெயர்தாங்கி நிற்கும் சிகரட், பீடா, ஆவா, கேஜி, ஹெரலின், ஹஸாமா போன்றவைகளும் மிகக்கொடிய ஆபத்தான போதைப்பொருட்கள் என்று தக்க சான்றுகளுடன் நிரூபித்தார் மௌலவி. இவையெல்லாம் உடலுக்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் தரக் கூடியவையல்ல. மாறாக, ஹோர்மோன்களை அதிகமதிகம் சுரக்கச் செய்து காம இச்சையைத் தூண்டி சிற்றின்ப வெறியை அதிகரிக்கச் செய்து பாலியல் வன்புணர்வு, படுகொலை வரை கொண்டு நிறுத்துகிறது என்று நிரூபித்தார். போதைக்கு அடிமையானோருக்கு 'ராத்தா - தங்கச்சி விளங்காது; மாமி - சாச்சி விளங்காது.' என்று எடுத்தோதிய உலமாப் பெருமகன், அண்ணன் 16 வயதே நிரம்பிய தங்கையைக் கெடுத்து குழந்தை உண்டாக்கிய சம்பவத்தையும் கூறி, எமையெல்லாம் நாணிக் கூனிக் குறுக வைத்தார். இச்சம்பவங்கள் நமது ஈழமணித் திருநாட்டில்தான் நடைபெற்றன. இன்றும் நடைபெற்றும் வருகின்றன. (இரகசியமாகவும் பரகசியமாகவும்)

இலக்கியச் சோலை கலைவாதி

தந்தையர்களுக்கு கடும் எச்சரிக்கை கொடுத்தார். பாடசாலையில் படிக்கும் தனது மகன் வீட்டில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நாக்கை அடிக்கடி நீட்டி, உதட்டை வருடிக் கொண்டிருப்பானேயானால் உடனடியாக அவன் மீது கவனம் செலுத்தவேண்டும். நிச்சயமாக அவன் போதைக்கடிமையானவன் என்றும் கூறி வைத்தார். போதைப் பொருட்கள் மற்றும் அதன் பாவனைக் கெதிர்ப்பான அரச அமைப்பு இத்தகைய பொருட்களையெல்லாம் சட்டப்படி தடை செய்திருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

இன்றைய கல்லூரி மாணவர்களும் பெரும்பாலும் ஆட்டோ ட்ரைவர்களுமே இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருவதையும் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார்.

அந்த அஞ்சா நெஞ்சனின் உரையில் இவற்றை விற்பது, விநியோகிப்பதன் மூலம் பாடசாலை மாணவர்களும் வருமானம் பெறுவதையும் தக்க சான்றுகளுடன் விளக்கினார். 3 கேஜி பக்கட் எடுத்தால் 2 பக்கட் இனாம் என்றும் மௌலவி சொல்லித்தான் எனக்குத் தெரியும். இதனால்த்தான் மாணவர்கள் இதனைப் பாவிப்பதிலும் விற்பனை செய்வதிலும் உற்சாகத்துடன் ஈடுபடுகிறார்கள் என்றும் கூறி வைத்தார். இவற்றின் பாவனையால் காம ஆசை கூடி கெட்டழிந்து போகிறார்களே ஒழிய, உடல்பலம் பெறுவதில்லை. மாறாக, உடல் நாளுக்கு நாள் பலவீனமடைகிறது. உள்ளமோ பண்பாட்டை இழக்கிறது என்றும் கூறிய அவர், அல்லாஹ்தான் இவர்களைப் பாதுகாக்க வேண்டும். (நல்வழிப்படுத்த வேண்டும்) என்றும் துஆக் கேட்டார்.

மௌலவி பயன்படுத்திய ஒரு வார்த்தை என்னை மிகவும் கவர்ந்தது. (பஞ்ச டயலொக் போல்) 'வீட்டுக்குள் விளைகின்ற நஞ்சு'

இறுதியாக இத்தகைய போதைப் பாவனையிலிருந்து இளைஞர் சமுதாயம் - விசேடமாக மாணவர் சமுதாயம் விடுபட்டுத்தான் ஆக வேண்டுமென்று 'பேசும் பேனா' வினயமாக வேண்டிக் கொள்கிறது.

**- கவிஞை**

## பாடப்புத்தகங்களை தயாரிக்கும் கடதாசி சிறந்தவையே

**கல்வி அமைச்சு அறிவிப்பு**

பாடசாலை பாடப் புத்தகங்களை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் கடதாசி வகைகள் உடல் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கக் கூடியவை அல்ல என கல்வி அமைச்சு தெரிவித்தது.

உரிய தராதரங்களுடன் கூடிய கடதாசியில் புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. இவை வெள்ளம் முதலான இயற்கை அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியவை. ஜப்பான், சீனா முதலான நாடுகளிலும் இவையே பயன்படுத்தப்படுவதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டது.

இந்த கடதாசிகள் பரீட்சார்த்த ரீதியில் தரம் ஏழு வகுப்புக்குரிய புவிச்சரிதவியல் பாடப்புத்தகத்தை அச்சிட பயன்படுத்தப்பட்டன.

இதற்கு முன்னதாக கடதாசியின் தரம் பற்றி சுகாதார அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி நிறுவகம், கடதாசி உற்பத்தி நாடுகள் ஆகியவற்றில் இருந்த தரச்சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளன.

# அம்பாறை மாவட்டத்தில் விரைவில் அதிரடி மாற்றம் ஏற்படும்

**பிரதியமைச்சர் அமீர் அலி**

(பெரியநீலாவணை நிருபர் - ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் இன்று மாற்றத்துக்கான புரட்சியை ஒவ்வொரு ஊர் ரீதியாக செய்துவருகிறோம். விரைவில் அம்பாறை மாவட்டத்தில் அதிரடி அரசியல் மாற்றம் ஏற்படும் என பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

மருதமுனை கோல்ட் மைண்ட் விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது வருட இப்தார் நிகழ்வு கழகத்தின் தலைவர் வை.கே.றஹ்மான் தலைமையில் மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் புதன்கிழமை (14) இடம்பெற்றது.

இங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

முஸ்லிம்களுக்கு எதிராக நடை பெறுகின்ற அநியாயங்களை தடுத்து நிறுத்தி சேவகம் செய்கின்ற அரசியல் நிலமை என்னைப் பொறுத்தளவில் இன்று இந்த நாட்டில் இல்லை என்று நினைக்கின்றேன். ஒவ்வொரு காலகட்டத்திலும் முஸ்லிம்கள், தமிழர்களுக்கு ஏதோ ஒரு தூரத்தில் நின்று கொண்டு அநியாயம் செய்த இரண்டு கட்சிகளையும் ஒன்று சேர்த்து விட்டு இப்போது சங்கடப்படுகின்ற, வேதனைப்படுகின்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இந்த நிலை மாற வேண்டும் என்பதுதான் எமது எல்லோரினதும் பிரார்த்தனையாகும். இதற்கு இங்கிருக்கின்ற கல்விமான்கள் எமக்கு ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

முஸ்லிம்கள் குர்ஆன்-ஹதீசை பேசுகின்றவர்கள் நம்மிடம் இருக்கும் சமாதானம்,சக்காத், மனித உரிமைகள், ஹறாம்-ஹலால், நன்மை-தீமை, ஒற்றுமை பற்றிய பக்குவம் வேறு எவரிடமும் கிடையாது. ஆனால் கடந்த காலங்களில் செயல் வடிவில் அவர்களிடத்தில் கொண்டு செல்லப்படவில்லை, பேசப்படவில்லை. எதிர்காலத்தில் நாம் விட்டுக் கொடுப்பின் மூலம் அவர்களோடு நெருங்கிப்பழகுகின்ற விடயம் அவசர அவசியமாக செயற்பட வேண்டும்.

இது அரசியல் வாதிகளோடு மட்டும் சம்பந்தப்பட்ட விடயமல்ல. எல்லா முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஹலாலாக பேசிக் கொண்டுதான் இருக்கின்றோம். கல்விமான்களாகிய நீங்கள் மக்களை வழிகாட்ட வேண்டும்.அமைச்சரவையை மாத்திரம் ஒரு சில முஸ்லிம் அமைச்சர்கள் பகிஷ்கரிப்பு செய்வதில் எனக்கு உடன்பாடு கிடையாது. பகிஷ்கரிப்பு செய்வது என்றால் பாராளுமன்றத்தை ஒட்டுமொத்தமாக பகிஷ்கரிப்பு செய்ய வேண்டும். இந்த சமூகத்தின் பேச்சாகவும், மூச்சாகவும் நாங்கள் இருக்க வேண்டும்.

இப்தார் விசேட மார்க்கச் சொற்பொழிவை கழகத்தின் கலாசாரப் பணிப்பாளர் எம்.ஐ .ஹுனைஹுத்தின் (றியாழி) நிகழ்த்தினர். கழகத்தின் ஸ்தாபகர் எம்.ஏ.ஜமால் முஹம்மட், கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.பி.எம். றஷீட், பொதுச் செயலாளர் ஏ.எம்.றியாஸ் உட்பட கழகத்தின் உயர்பீட உறுப்பினர்கள், வீரர்கள் ஊரின் கல்வியாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.











குவைத் நாட்டுத் தூதுவராலயத்தின் அனுசரணையுடன் ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதியாவின் ஏற்பாட்டில் கெக்கிராவை பமுனுகம பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த மக்களுக்கு நோன்பு கால உலருணவு வழங்கி வைக்கும் நிகழ்வு பமுனுகம ஜும்ஆப் பள்ளிவாசலில் ஆசிரியர் அர்கம் தலைமையில் (13) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பறகஹதெனிய தாருத் தவ்ஹீத் மகளிர் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம். சீ. அன்சார் (ரியாதி) கலந்து கொண்டு வழங்கி வைப்பதையும் இதில் அஷ்ஷெய்க் ரபீக் பிர்தவ்சி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டதையும் இங்கு காணலாம்.

(குருநாகல் இக்பால் அலி)

# ஞானசார தேரரைப் பாதுகாப்பது மஹிந்தவே

## எனக் கூறுவது முழுப்பூஷணிக்காயை சோற்றில் மறைத்த கதையாகும்

**அஸ்வர் தெரிவிப்பு**



பொதுபல சேனாவையும் அதன் பொதுச் செயலாளர் ஞானசார தேரரையும் பாதுகாப்பது மஹிந்த ராஜபக்ஷவே என அமைச்சர் பாடலி சம்பிக ரணவக கூறியிருப்பது முழுப் பூஷணிக்காயையும் சோற்றில் மறைப்பது போன்ற கதையாகும் என முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

நேற்று (14) கொழும்பில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சி செய்தியாளர் மாநாட்டின் போது, ஞானசார தேரர் தொடர்பாக அமைச்சர் சம்பிக தெரிவித்திருந்த கருத்துக்குப் பதிலளித்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

பொதுபலசேனா அவரது கட்சியோடு இணைந்து வளர்ந்தது என்று அவரே ஒப்புக் கொள்கின்றார். அப்படியென்றால் பெற்ற தாயை பிள்ளை மறந்து விடுமா? எனினும் இன்று ஒரு பெரும் இக்கட்டான நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார்.

பொதுபல சேனாவின் அட்டகாசத்தை முறியடிப்பதற்கு அதனை தடைசெய்ய வேண்டுமென அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் அமைச்சரவையில் முன்மொசனை சமர்ப்பித்தார். துள்ளி எழுந்த சம்பிக எதிர்த்தார். அப்படிச் செய்தால் இந்த நாட்டிலே மகாசங்கம் வீதியில் இறங்கும் என்றும் எச்சரிக்கை விடுத்தார். அவ்வேளையிலே அதற்குச் சார்பாகப் பேசியவர் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன என்பதையும் பெருவளை மக்கள் மறந்து விட மாட்டார்கள்.

அளுத்கமை சம்பவத்துக்கும் தனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று அண்மையில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ பகிரங்கமாகக் கூறியுள்ளார். இது குறித்து அவருடைய இணையத்தளங்களிலும் செய்தியை வெளியிட்டுள்ளார். இப்படியிருக்க இப்பொழுது விடயம் முற்றி, இந்த அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களே தங்களுடைய குமுறலை வெளிப்படுத்த முடியாமல் வெளிநாட்டு தூதுவர்கள் அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இங்கிலாந்து என்று தற்போது காவடி செல்கின்றனர். இறுதியாக முஸ்லிம்களுக்கு விளைகின்ற இன்னல்கள் பற்றி அவர்கள் சொல்ல விரும்புவது இங்கிலாந்து மகாராணி எலிசபெத் மகாராணி மட்டும்தான். எனவே முஸ்லிம் மக்கள் இப்போது உண்மையை உணர்ந்துவிட்டார்கள். ஆயிரக்கணக்கில் இன்று மஹிந்த ராஜபக்ஷவை நாடி வருகின்றனர். முஸ்லிம்களுக்கு நடக்கின்ற அநியாயங்களைவிட்டு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுவதற்கு நான்கு முறை எத்தனித்தும் அது முடியவில்லை என முஸ்லிம் அமைச்சர்களே கூறுகின்றார்கள். அது மட்டுமல்ல பொலிஸாரிடம் செய்யும் முறைப்பாடுகளை அவர்கள் நொண்டிச் சாட்டு சொல்லி தட்டிக் கழிக்கின்றார்கள். அது மின் ஒழுக்கு என்று சொல்கின்றார்கள். ஆனால் நாம் சொல்வது இந்த மின் ஒழுக்கு வெகுசீக்கிரத்தில் இந்த அரசாங்கத்தைத் தாவும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது என்றார்.

முஸ்லிம் முற்போக்கு முன்னணியிடம் இருக்கின்ற தகவலின்படி 106 முஸ்லிம்களுக்கு விரோதமான தாக்குதல் சம்பவங்கள் இந்த அரசாங்கம் வந்த நாளிலிருந்து பதிவாகியுள்ளன என்பதனையும் நாங்கள் நிரூபிக்கத் தயாராக இருக்கின்றோம் - என்றும் தெரிவித்தார்.

## உழவு இயந்திரம் குடைசாய்ந்ததில் 20 பேர் காயம்

(ஹட்டன்க.கிஷாந்தன்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிந்துலை மட்டுக்கலை சந்தியில் உழவு இயந்திரம் ஒன்று குடைசாய்ந்ததில் அதில் பயணஞ் செய்த 20 பேர் காயங்களுக்குள்ளாகி லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லிந்துலை லெமிலியர் தோட்டத்திலிருந்து மட்டுக்கலை டி.ஆர்.ஐ தோட்ட தேயிலை மலைக்கு வேலைக்காக ஏற்றிச் சென்ற தோட்டத் தொழிலாளர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருவதாகவும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை லிந்துலை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருவதாகவும் லிந்துலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





சம்மாந்துறை மனித நேய நற்பணி பேரவையின் ஏற்பாட்டில் பெற்றோர்களை இழந்த வறிய மாணவர்கள் கல்விகற்கும் சம்மாந்துறை மர்கஸ் தாருல் ஈமான் கலாபீடத்தில் இப்தார் நிகழ்வு அண்மையில் பேரவையின் தலைவர் மனித நேயன் இர்ஷாத் ஏ.காதர் தலைமையில் இடம்பெற்றது. இதில் பேரவையின் அங்கத்தவர்கள், உலமாக்கள், கல்விமான்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருப்பதனை படங்களில் காணலாம்.

(படம்- எம்.சி. அன்சார் - சம்மாந்துறை)

## விஞ்ஞான பீடத்தை இழக்கும் 5000 மாணவர்கள்

அரச பல்கலைக்கழகங்களிலுள்ள 11 விஞ்ஞான பீடங்களுக்கு 20 ஆயிரத்து 700 மாணவர்களை சேர்த்துகொள்ள முடியும் என்றும், 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை 6 வருட காலத்திற்கு ஒவ்வொரு வருடமும் சேர்த்து கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்திற்கும் குறைவானவர்களே என்று பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் தெரிவித்தது.

அதனடிப்படையில் ஒவ்வொரு வருடமும் 5000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக விஞ்ஞான பீட வாய்ப்புக்களை இழப்பதாகவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியது.

அந்தவகையில், பாடசாலைகளில் விஞ்ஞானப்பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர் அதிக பற்றாக்குறை இருப்பதாகவும், அதேநேரம் சில பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்தை கற்பிக்க ஆசிரியர்களே இல்லாமல் உள்ளமையால் விஞ்ஞான பிரிவினை மூடக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அச்சங்கத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




சர்வதேச கிராஅத் போட்டி இந்த றமழானில் நான்கு நாட்கள் துபாயில் நடைபெற்றது. இதில் 89 நாடுகள் பங்குபற்றின.இதன் இறுதிச் சுற்றில் கண்டி தஸ்கர ஹக்கானியா அறபிக் கல்லூரி மாணவன் அல் ஹாபிழ் அர்கம் ஹுசைன் 4 ஆம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் கம்பளை மரியாவத்தையைச் சேர்ந்த ஹுசைனின் புதல்வராவார்.

(படம் - எச்.எம்.மன்சூர் கண்டி)

# மலேசிய எழுத்தாளர் மைதீன் சுல்தான் காலமானார்



மலேசியாவின் பிரபல அறிவிப்பாளரும் எழுத்தாளருமான மைதீன் சுல்தான் கடந்த செவ்வாயன்று காலமானார். மலேசிய வானொலியின் தமிழ் அறிவிப்பாளராகப் பணிபுரிந்த இவர் 2002 இல் மலேசியாவில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டின் செயலாளராகப்பணி புரிந்தவராவார்.

இவர் மைதி சுல்தான் கவிதைகள் மைதீன் சுல்தான் சிறு கதைகள், அரங்கக் கவிதைகள், உடைபடுமோ ஒரு சுகாபதம் 50 ரிங்கிட் சிறுகதைகள் என்ற நூல்களை வெளியிட்டுள்ளார்.

மொரிஷியஸில் தமிழ் செம்மல் விருது பெற்ற இவர் 2014 இல் இந்திய கும்பகோணத்தில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய மகாநாட்டில் இலக்கிய ஊடகப் பணிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1941 இல் பிறந்த இவர் தனது 76ஆவது வயதில் காலமானார். இவரது மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியாபோரம் உட்பட இலங்கை இலக்கிய அமைப்புக்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

## மூதூரில் குடும்ப ஒன்றுகூடல்

மூதூர் பாலநகர் மதார் சதுக்கத்தில் இயங்கும் மதார் நம்பிக்கை நிதியத்தின் 11 ஆவது குடும்ப நல ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை அதன் தலைவர் எம்.எம்.முகம்மது றபீக் தலைமையில் மூதூரில் விமர்சையாக நடைபெறவுள்ளது. இதில் குடும்ப உறுப்பினர்களிடையே கவிதை கட்டுரைப்போட்டிகளும் மற்றும் கலைநிகழ்ச்சி, விளையாட்டுப்போட்டிகளும் முழுநாளாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## முஸ்தபா மௌலவி காலமானார்

காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவின் முன்னாள் தலைவரும் ஜாமி அதுல்லரித் தீயாவின் சிரேஷ்ட முன்னாள் விரிவுரையாளரும் ஜாமிஉழ்ழாபிரின் பெரிய ஜும்ஆப்பள்ளிவாசலின் கதீபுமான ஓய்வு பெற்ற ஆசிரியர் மௌலவி ஐ.எல்.எம். முஸ்தபா (75) (பஹ்ஜி ) 15 ஆம் திகதி காலமானார்.

மர்ஹூம் மௌலவி முஸ்தபா சில நாட்கள் நோய்வாய்ப்பட்டு மட்டகளப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மரணமடைந்தார்.

அன்னாரின் ஜனாஸா காத்தான்குடி ஜாமிஉழ்ழாபிரீன் பெரிய மீரா ஜும்ஆப் பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு அப்பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் மறைவையொட்டி காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா, கதீப்கள், இமாம்கள் சம்மேளனம், கவலையை தெரிவித்துக்கொள்கிறது.

# மனநலமும் ஆலோசனையும்

# கட்டிளமையும் பெற்றோரும்

தொடர் 187


சிரேஷ்ட மனநல ஆலோசகர்
துணைத்தலைவர், இலங்கை உளவள ஆலோசக நிபுணர்கள் சங்கம், இலங்கை மன்றம்
பிரதித் தலைவர் போதைப்பழக் கத்துக்குட்பட்டோருக்கான தேசிய மனவள ஆலோசனை சபை



**அஸ்ஹர் அன்ஸார்**
M.S Psych (Ind), A.D.Psycho.C (SL), D.Psy.C (SL), D.Y.T (Ind), FRSPH (UK)


கட்டிளமைப்பருவம் என்பது பிள்ளைப் பருவத்திலிருந்து முதிர்பருவத்திற்கு மாற்றமடையும் காலமாகும். 11-12 வயது முதல் 18 வயது வரையிலான காலத்தையே கட்டிளமைப்பருவம் என அழைக்கிறோம். இப்பருவத்தில் ஒருவன் பிள்ளையாக இருப்பதுமில்லை. முதிர்ந்த வனாகவும் இருப்பதுமில்லை. பிள்ளைத் தனமும் அல்லாத முதிர்ந்ததனமும் அல்லாத நிலையில் கட்டிளமைப்பருவத்தி னரின் செயற்பாடுகள் இருப்பதைக் காண லாம். கட்டிளமைப்பருவத்தில் பலவித மான மாற்றங்கள் ஏற்படுகின்றன.

- ★ உடலில் ஏற்படும் மாற்றங்கள்
- ★ பாலியல் பண்புகள் வளர்ச்சி
- ★ மனஎழுச்சி மாற்றங்கள்
- ★ நண்பர்கள் தொடர்பு
- ★ சுதந்திர உணர்ச்சி
- ★ கவர்ச்சிகள் மீது அவதானம்
- ★ நுண்ணறிவு வளர்ச்சி
- ★ எதிர்பால் தொடர்புகள்

போன்ற மாற்றங்களும் வளர்ச்சிகளும் இப்பருவத்தில் நிகழ்கின்றன.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங் கள் மற்றும் வளர்ச்சிகள் பற்றிய அறிவு கட்டாயமாக பெற்றோர்களுக்கு இருக்க வேண்டும். அவர்களின் வளர்ச்சியின் மாற்றத்திற்கு தக்கவாறு அவர்களை வழிநடத்த விரும்பினால் வழிநடத்தும் முறைபற்றிய அறிவைப் பெறுவது பெற் றோரின் பொறுப்பாகும். இந்த ஆபத்தான நவீன அறிவியல் உலகில் சம்பிரதாயமாக பிள்ளைகளை வளர்த்தெடுக்கலாம் என்று நினைப்பது சரியானதல்ல. கட்டிளமைப்ப ருவம் பற்றிய பெற்றோரின் அறிவு நவீன கால பிள்ளை வளர்ப்பிலும் வளர்ச்சியிலும் முக்கிய செல்வாக்குச் செலுத்தும் ஒரு விடயமாகும்.

இப்பருவத்தில் சுதந்திரஉணர்ச்சி என்பது கட்டிளமைப்பருவத்தினரை சங்கடப்படத்தச்செய்யும் ஓர் உணர்ச்சி மாற்றம் என்று குறிப்பிடலாம். அவர்கள் பெற்றோர்களுக்கு முழுமையாக கட்டுப் பட்டு இருப்பதை விரும்புவதில்லை. அவர்கள் விருப்பம்போல் செயற்படவும் முடிவுகள் எடுக்கவும் முயற்சிப்பதைக் காணமுடியும். இது அவர்கள் வளர்ச்சியி லும் மாற்றத்திலும் இயல்பாக ஏற்படும் ஒரு விடயமாகும். மாற்றங்கள் என்பன பல முறைகளில் பல கட்டங்களில் மனித வாழ்வில் ஏற்படுவதை நாம் கட்டாயம் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். எங்கள் வாழ்விலும் எத்தனை மாற்றங்கள் ஏற்பட் டன, ஏற்பட்டுவருகின்றன என்பதை நாம் சிந்தித்து ஆராய்ந்து பாடம் படிக்கலாம்.

பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்த பிள்ளை தனது வாழ்வின் மாற்றத்தை நோக்கிப்பயணிக்கும் போது அவர்கள் சந் திக்கும் கட்டிளமைப்பருவத்தில் சுதந்திர மாக செயற்பட வேண்டும் என்று எண்ணு வதும் செயற்பட முயற்சிப்பதும் தவிர்க்க முடியாத மனிதமாற்றமாகும். அப்படித் தான் எங்கள் உடலும் உள்ளமும் படைக் கப்பட்டிருக்கின்றன. 'பிள்ளை பிள்ளை மாதிரி இருக்க வேண்டும், நினைப்பது போன்று சுதந்திரம் கொடுக்க முடியாது' என்று எண்ணி அவர்களை முழுமையாக பெற்றோரின் கட்டுப்பாட்டில் வளர்த்து எடுக்க முடியாது. சுதந்திரம் கொடுத்தால் கெட்டுப்போவார்கள் என்று சொல்லி பயந்து பயந்து இப்பருவப் பிள்ளைகளை கைக்குள் அடக்கி வளர்க்கவும் முடியாது.



எமது பிள்ளைகளும் மனிதர்கள். மாறுவதும் வளர்வதும் மனித வாழ்வின் இயல்பு. அதனால் மனிதனின் இயல்பான வளர்ச்சிக்குத் துணையாக இருப்பதும் அந்த வளர்ச்சியும் அதன் மூலம் வரும் மாற்றத்தையும் பயன் நிறைந்ததாக ஆக்கிக் கொள்வதற்கான நெறிப்படுத்தல் முறை களை பெற்றோர் பயன்படுத்தத் தவறக்கூ டாது. தவிர்க்கவோ தடுக்கவோ முடியாத பிள்ளைப்பருவத்தில் நடைபெறும் இந்த மாற்றத்தைப் புரிந்துகொள்வதும் புரியமுடியாது போனால் அது பற்றிக் கேட்டுத்தெரிந்துகொள்வதும் பெற்றோர் களுக்கு ஏற்படும் பலவிதமான மனத்தாக் கங்களைத்தவிர்த்துக்கொள்ள மிகவும் பயனாக இருக்கும்.

கட்டிளமைப்பருவ பிள்ளைகளின் தாயா கவோ தந்தையாகவோ நீங்கள் இருந்தால் அவர்களின் தற்போதைய மனநிலையை அறிந்து அவர்களுடன் சிநேகமாக நட்பு றவை ஏற்படுத்திக்கொள்வது முதலில் செய்ய வேண்டிய மிகமுக்கிய விடய மாகும். சமநிலையற்ற மனஎழுச்சிகள் உருவாகும் இப்பருவத்தில் அவ்வாறே அவசரமாக எதையும் செய்யத்துடிக்கும் இப்பருவத்தில் பெற்றோர் சமநிலையற் றவர்களாக அவசரப்படக்கூடியவர்களாக இருந்துவிடாமல் அமைதியும் நிதானமும் பேணி அவர்களோடு நண்பர்களாகி, சிரித்துப்பேசி தொடர்பாடலில் ஈடுபட ஆரம்பித்தால் அவர்கள் பெற்றோரால் புரியப்பட்டுவிட்டார்கள். பெற்றோர் களால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டார்கள் என்று சந்தோசப்பட்டுவிடுவார்கள்.

இப்பருவத்தில் பெற்றோர்கள் அவர் களோடு நடந்துகொள்ளும் முறையைப் பார்த்து அவர்கள் அவர்களை எப்படி உணர்ந்து கொள்கிறார்கள் என்ற தீர்மானத் திற்கு வருகிறார்கள். அதாவது பெற் றோரின் நடத்தை கள் பிள்ளைகள் அவர்களைப்பற்றி சரியாகவோ பிழையாகவோ அறிந்துகொள்வ தற்கு காரணமாக அமைகின்றன. ஒவ்வொரு கட்டிளமைப்ப ருவத்தினரும் தன்னைப்பற்றி சரியாக உணர்ந்து கொள்ள வேண் டும், பொறுப்புடன் செயற்பட வேண் டும், கட்டளைகளுக்கு அடிபணிய வேண் டும் என்றே நாம் விரும்புவோம். இதன் காரணமாக அவர்கள் அவர்களை நல்லவர் களாக கருதிக்கொண்டு முன்னேறிச்செல்ல பெற்றோர் கட்டாயம் உதவ வேண்டும்.

கட்டிளமைப்பருவத்தினரோடு நண்பர் கள்போல் சிநேகமாக இருப்பது போன்று அவர்களின் எதிர்பார்ப்புகள், செயற்பா டுகள் என்பன ஓர் எல்லையில் இருக்க வேண்டும் என்பதையும் அவர்களுக்கு நினைவூட்டுவது கட்டாயமாகும். நீங்கள் சுதந்திரமாக செயற்பட்டால் அல்லது செயற்பட விரும்பினால் எப்பொழுதும் சுயகட்டுப்பாட்டுடன் செயற்படுவதும் மரியாதையாக நடந்துகொள்வதும் மற்ற வர்களை மதிப்பதும் மிகமுக்கியமானது என்பதையும் அவர்களுக்கு அடிக்கடி நினைவுபடுத்தவும் வேண்டும்.

கட்டிளமைப்பருவத்தினரின் பெற்றோர் கள் தம் பிள்ளைகளில் அதிகம் பிரச்சினை களை தவறுகளைக் காணலாம். அவ்வா றான சந்தர்ப்பங்களின்போது 'நீ செய்வது பிழை. இனிமேல் அப்படிச்செய்யாதே' என்றும் பிழையான கருத்துகளாலும் கடு மையான விமர்சனங்களாலும் அவர்களை வழிநடத்த முற்படாமல் அவர்களோடு அமர்ந்து முகம்பார்த்து அமைதியாகக் கதைத்து அவர்கள் செயற்பாடுகளில் சரி பிழை பற்றி எடுத்துக்கூறி அவர்களுக்கு இப்பருவம்பற்றி சொல்லிக்கொடுக்க வேண்டும். பெற்றோர் தரும் புத்திமதி பிள்ளைகளுக்கு ஊக்கமாகவும் உற்சா கமாகவும் இருந்தால் அவர்கள் எதை செய்தாலும், எதை செய்ய முற்பட்டாலும் பெற்றோரின் ஆலோசனைகளை எதிர் பார்ப்பார்கள்.

கட்டிளமைப் பருவத்தினருடன் பெற் றோர் கடுமையாகவும், ஏசி எரிந்தும், அதட்டி அடித்தும் அவர்களை வழிநடத்த ஆரம்பித்தால் மிகவிரைவில் அவர்கள் பெற்றோர்களின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி அவர்கள் நினைத்தாற்போல் எதை யும் செய்து, எப்படியும் செய்து குடும்பத் திற்கும் சமூகத்திற்கும் பொறுத்தப்பாடு அடைய முடியாமல் வன்முறையான வாழ்க்கைக்கு பழகிக்கொள்வார்கள். சிலசமயம் மன உளைச்சலுக்கு உட்பட்டு அவதிப்படவும் செய்வார்கள். கட்டிள மைப்பருவத்தினருடனான அன்பும் அர வணைப்பும் ஆன்மீகமும் கலந்த உறவும் உரையாடலும் அவர்கள் வாழ்க்கையை வளப்படுத்தி அழகுபடுத்தி மனித சமுதா யம் அங்கீகரிக்கும் சுதந்திரத்தோடு வாழ வழிவகுக்கும்.

கட்டிளமைப்பருவத்தை அடைய ஆரம்பிக்கும் போதே அப்பருவத்திற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கான வழிகாட்டலை வீட்டிலேயே பெற்றோர் மேற்கொள்ள முடியும். அதற்கான சில ஆலோசனைகளை இங்கு முன்வைக்கி றோம்.

- ★ அன்பும் பாதுகாப்பும் மனித உறவும் நிறைந்த இடமாக வீட்டை உருவாக்க வேண்டும்.
- ★ வீட்டில் உள்ளவர்களுக்கிடையில் நம்பிக்கையையும் மரியாதையையும் ஏற்ப டுத்திக்கொள்ளுங்கள்.
- ★ தாய், தந்தை, பாட்டன், பூட்டி, மகன், மகள் என்ற உறவோடு ஒருவர் மற்றவரை நோக்குவதுபோன்று ஒவ் வொருவரும் மேன்மையும் கௌரவமும் உடைய மனிதர்கள் என்ற நோக்கிலும் பார்க்க முற்படுங்கள்.
- ★ வயதிற்குப்பொருத்தமான வேலைகள் செய்யவும் வயதிற்குப்பொ ருத்தமான கட்டுப்பாடுகளை விதிக்கவும் எவ்வளவு சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்பதையும் திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.
- ★ பிள்ளைகளுக்கு எவ்வளவு சுதந் திரம் கொடுக்கவேண்டும் என்பதையும் திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.
- ★ கட்டிளமைப்பருவத்தினர் சோகத்திலும் சங்கடத்திலும் இருப்பதை அடிக்கடி காணலாம். அவ்வாறான சந்தர்ப் பங்களில் அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தி உரையாட அவகாசம் கொடுங்கள்.
- ★ அவ்வாறே அவர்கள் சொல்லும் விடயங்களுக்கு அவசரமாகவோ ஆவேச மாகவோ பதில் கொடுக்காமல் முதலில் நிதானமாக அவர்கள் சொல்லும் விடயங்க ளுக்கு செவிமடுங்கள்.
- ★ அவர்கள் ஏதேனும் கருத்துகள் சொல்ல முயற்சித்தால் அதை தடுத்து நிறுத் தாமல் அல்லது அவர்களின் கருத்துகள் தற் போது தேவையில்லை என்று புறக்கணித்து விடாமல் அவர்கள் கருத்துக்கும் மதிப்பளி யுங்கள்.

கட்டிளமைப்பருவத்தினரின் பொறுப் புகள் செய்ய வேண்டிய விடயங்கள் பெற்றோருக்கு உதவ வேண்டிய முறைகள் சமூகத்தில் மனிதர்களோடு உறவு பேணக் கூடிய முறைகள் என்பன பற்றி அமைதி யாக எடுத்துக் கூறுங்கள்.

கட்டிளமைப்பருவத்தினர் தம்மை அழ குபடுத்தி அலங்கரித்துப்பார்க்க மிகவும் ஆசைப்படுவார்கள். நண்பர்களோடு சேர்ந்து குதூகலமாக மகிழ்ச்சியடைய விரும்புவார்கள். அது அவர்களது சுதந்திர உணர்வின் ஒரு பகுதியாகும். அவர்கள் ஆடையில் புதிய மாற்றங்களை ஏற்ப டுத்தவும் பலவிதங்களில் சிகை அலங் காரம் செய்து பார்க்கவும் முயற்சிப்பதை கட்டிளமைப்பருவத்தினரில் அதிகம் காணமுடியும். இவையும் சாதாரண நடத் தையாகவே கருதப்படுகிறது. இது பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவோ அதிர்ச்சி யடையவோ வேண்டியதில்லை. ஆனால் பொருத்தமற்ற நடத்தைகள், வார்த்தைகள், பொருந்தாத நண்பர் தொடர்புகள், முரண் பாடான செயற்பாடுகள் நடைபெறுவதைக் கண்டால் அல்லது கேள்விப்பட்டால் ஏதோ பிரச்சினை நடைபெறுகிறது என் பதை உணர்ந்து அவசரப்படாமல் உண் மை நிலை என்ன என்பதை தேடிப்பார்த்து சரியான தீர்வுகாண முயற்சிக்க வேண்டும்.

கட்டிளமைப்பருவத்தினரிடம் வேண் டாத, பொருந்தாத நடத்தைகள் பல நடக் கலாம். அதைக்காணும் பல பெற்றோர் அதிர்ச்சியடைந்து சிலசமயம் கவலைப் பட்டு உள்ளத்தால் உடைந்து போகின்ற னர். அதனால் அவ்வாறான நடத்தைகளை இனங்கண்டு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அடுத்த வாரம் நோக்குவோம்.

---

# உணர்வுகளை மதிப்போம்

★ ஆசிரியர் இக்பால், கெகிராவ

தாம் அரசியல் பிரதிநிதிகள் எனும் நிலை யிலிருந்து கருத்துத் தெரிவிப்பதைவிட, தாம் வெளியிடும் ஒவ்வொரு கருத்தும் இலங்கை வாழ் சிறுபான்மை மக்களுக்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை அறிந்து கருத்துத் தெரிவிப்பது முக்கியமாகும். இந்த விடயம் சம்பந்தமாக குறிப்பாக சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த அரசியல் தலைவர்கள், பிரதிநிதிகள், ஆர்வலர்கள் கடுமையாக சிந்திக்க வேண்டும்.

உதாரணமாக எடுத்துக்கொண்டால் சில முஸ் லிம் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதல்கள் சம்பந்தமாக ஆவேசத்துடன் கருத்துக்களை முன்வைக்கத் தூண்டும். இது அர சியல் தலைவர்களுக்கு மாத்திரம் அல்ல. ஒவ் வொரு முஸ்லிமுக்கும் அந்த உணர்வு வரும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அனைவருக்குமே கருத்துத் தெரிவிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கா மல் போகலாம். இந்த சந்தர்ப்பத்தில் அரசியல் தலைவர்கள் முன்வந்து தமது மக்களுக்காக குரல் கொடுக்கலாம். இது நியாயமானதுமாகும். இவ்வாறானவர்களின் கருத்துக்களுக்கே ஊட கங்களும் முக்கியத்துவம் கொடுக்கும். ஊடகங் களும் குறித்த நபரின் பெறுமதியை அறிந்தே அவரது கருத்துக்கு முக்கியத்துவம் வழங்கும். இதுதான் ஊடக நியதி.

தனது கருத்து ஊடகத்தினூடாக வெளிவரும் என்று அறிந்து செயற்படும் ஒவ்வொருவரும் தனது கருத்து வெளிவந்துவிட்டால் சமூகத்தி லும் நாட்டிலும் எவ்வாறான தாக்கத்தை அது ஏற்படுத்தும் என்பதை முதலில் சிந்திக்க வேண் டும்.

குறிப்பிட்ட நபர் சமூக ரீதியிலான ஒரு கருத்தை முன்வைத்துவிட்டால் அது பத்தி ரிகை வாயிலாகவோ அல்லது இலத்திரனியல் ஊடகங்களினூடாகவோ அல்லது சமூக ஊடக வலைத்தளங்களினூடாகவோ வெளிவந்தவுடன் அதைப்பார்த்து ஒரு சாரார் குறிப்பிட்ட கருத்தை தெரிவித்த நபருக்கு தமது மகிழ்ச்சியையோ அல்லது பெருமையையோ தெரிவிக்கலாம். அதைக் கேட்ட குறித்த நபர் உடனே முருங்கை மரத்தில் ஏறலாம். அவருக்கு மேலும் மேலும் ஆவேசம் அதிகரிக்கும். ஆஹா சமூகம் எனது கருத்துக்கு இவ்வளவு ஆதரவு வழங்குகிறதா என தற்பெருமை கொள்ளலாம். அதன் பின் னர் அவர் தாறுமாறாக சமூகத்திற்காகத் தனது கருத்துக்களை முன்வைக்கலாம். இவ்வாறான கருத்துக்களே சமூகத்தை பொறிவில் தள்ளும் மூலப்பொருள் என்பதை யாரும் உணர்வ தில்லை.

அரசியல் தலைவர்கள் தனது அரசியல் அந் தஸ்திலிருந்தே கருத்துத் தெரிவிக்கின்றார்கள் என்பதை பொதுமக்கள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். அரசியல் தலைவர்களின் கருத்துக்கள் யாவும் பிழையென அர்த்தம் கொள்ள வேண்டாம். ஒரு சிலர் பாரதூரம் அறி யாது தெரிவிக்கும் கருத்துக்கள் எவ்வாறான தாக் கத்தை ஏற்படுத்துகின்றன அல்லது ஏற்படுத்தும் என்பதனை தெளிவுபடுத்தவே முயல்கின்றேன் என்பதனைக் கருத்தில் கொள்ளவும்.

உதாரணத்திற்கு ஒரு விடயத்தை முன்வைக்க விரும்புகின்றேன். 'முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலை கண்டித்துப் போராட்டம் நடாத்த வேண்டும்' அதன் மூலம் சர்வதேச கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பது ஒருவரது கருத்தாக இருந்தது. 'போராட்டம்' என்ற பதம் பல அர்த்தங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு சொல்லாகும். இன்று பிரச்சினைகள் வலு வடைவதற்கு முக்கிய காரணம் சொற் பிரயோக மேயாகும். இந்த சொற்பிரயோகத்தை கருத்திற் கொண்டே சில இனவாதக் குழுக்கள் கருத்துத் தெரிவிப்பதுடன் அதனை அவர்களது சமூகத்தி னரிடையே நியாயப்படுத்தவும் முற்படுகின்ற னர். அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கும் வலுப்பெறுகின்றது.

மேற்குறிப்பிட்ட கருத்து கிழக்கு மாகா ணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவர் குறிப்பிட்ட கருத்தாக இருக்கலாம். அவர் அக் கருத்தை சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் குறிப்பிடவில்லை என்பது தெளி வான விடயம். சமூகத்தின் மீது கொண்ட இரக்கம், சமூகப் பற்று அவரை அந்த வார்த்தைப் பிரயோ கத்தைக் கூற வைத்தி ருக்கலாம். அவரது கூற்று கிழக்கைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்கள் மத்தியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்ப டுத்தியுள்ளது அல்லது ஏற்ப டுத்தும் என்பதனையே நாம் சிந்திக்க வேண்டும்.



அரசியல்வாதிகள் தமது பிர தேசத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்து தெரிவிப்பதை விட ஒட்டுமொத்த சமூகத்திற்குமான குரலாகவே அவரது கருத்து அமைய வேண்டும். அத்துடன் தாம் கிழக்கிலிருந்தோ அல்லது வடக்கிலிருந்தோ தெரிவிக்கும் கருத்து அந்தப் பிரதேசத்திற்கு மாத்திரம் பொருந்தக்கூடியது மல்ல. அது அக்குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மாத்திரம் மட்டுப்படுவதுமில்லை. தாம் கூறும் ஒவ்வொரு கருத்தும் அடுத்த கணமே முழு உலகிற்கும் பரந்துவிடும் என்பதனை உணர வேண்டும்.

தாம் வெளிப்படுத்தும் கருத்தின் தன்மையைக் கொண்டு அது அப்பிரதேச மக்களை மகிழ்ச் சிப்படுத்தலாம் அல்லது அப்பிரதேச மக்களின் ஆதரவு தமக்கு அதிகரிக்கலாம். அது சாதாரண விடயம். ஆனால் அக்கருத்து ஏனைய பிரதேச ங்களுக்கு எவ்வாறான தாக்கத்தையும் ஏனைய சமூகத்தினர் மத்தியில் எவ்வாறானதோர் விளை வை ஏற்படுத்தும் என்பதனைச் சிந்திப்பதே சாலச் சிறந்ததாகும்.

இந்த நாட்டில் நாம் சிறுபான்மையினரே. சிறுபான்மையினராகிய எமக்குப் பெரும் பான்மை மக்கள் வசிக்கும் கிராமங்களில் எவ்வாறானதோர் கௌரவமும், மதிப்பும், சுதந் திரமும் காணப்படுகின்றது என்பதனை முதலில் சிந்திக்க வேண்டும்.

ஒரு சில இனவாதிகள் கூறும் கருத்துக ளுக்கும் அவர்களது செயற்பாடுகளுக்கும் பதில ளிக்கச் சென்று ஒட்டுமொத்த பெரும்பான்மை யினரதும் வெறுப்பை நாம் சம்பாதித்து விடக் கூடாது என்பதனையே தெளிவுபடுத்த விரும் புகின்றேன். இதனையே நாம் ஆழமாகவும் ஆணித்தரமாகவும் சிந்திக்க வேண்டும்.

இனவாதிகள் நாம் சிந்திக்கும் அளவிற்கு சிந்தித்து செயற்பட மாட்டார்கள். கருத்துகளை அடிப்படையாக வைத்தே இனவாதத்தைத் தூண்ட முயற்சிக்கின்றனர். முஸ்லிம்களாகிய நாம் எச்சந்தர்ப்பத்திலும், எப் பிரதேசத்திலிருந்தும் பெரும்பான்மை சமூகத் தையோ அல்லது சிறுபான்மையினரையோ சீண்டும் கருத்துகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். பொறுமையுடன் செயற்பட்டு ஒற்றுமையை வளர்க்கும் கருத்துகளையே நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிரயோகிக்க வேண்டும். எமது நாளைய சந்ததியினருக்கு சுதந்திரமும் சுபீட்சம் மிக்க ஒரு நாடாக எமது நாட்டை மாற்ற வேண்டுமானால் இன்றைய தினம் பொறுமையுடன் இனங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் கருத்துகளையே முன்வையுங்கள்.

இன்று இனவாதிகள் கருத்துக்களை அடிப் படையாகக் கொண்டே அடிப்படையற்ற வாதப்பிரதிவாதங்களை முன்வைத்து, அவர் கள் செய்வது சரியென நியாயப்படுத்தி வருகின்றனர். இவ்வாறான கருத்துக்களுக்கு ஒருசில அடிப்படைவாதிகளைத் தவிர அநே கமான பெரும்பான்மையினர் இவர்களின் செயற்பாடுகளை அடியோடு எதிர்க்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது கருத்துக் களையும் முன்வைத்து பெரும்பான்மையின ரின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டிய தேவை இல்லை என்பதே எனது கருத்து. அவனது கருத்துக்குப் பதிலடி கொடுக்கத்தானே வேண் டும். அவன் சொல்வதையெல்லாம் கேட் டுக்கொண்டு வாய் மூடி இருக்க முடியுமா என்றெல்லாம் எங்களை எண்ணத் தூண்டும். ஆனால் இவ்வாறான எண்ணங்களிலிருந்து விடுபட்டு செயற்படுவதே புத்திசாலித்தனமும் சமூகத்திற்காக செய்யும் பெரும் சேவையு மாகும்.

எங்களுக்கும் இந்த நாட்டில் வாழ உரிமை இருக்கின்றது தானே, இனவாதிகளுக்கு மட்டுமா பேச உரிமை இருக்கின்றது என்று கூட சிந்திக் கத் தோன்றும். அது உண்மைதான். ஆனாலும், வேட்டைக் காரனுக்கு காட்டில் அகப்படும் விலங்கினம் அனைத்தையும் வேட்டையா டத்தான் தோன்றும். ஏனென் றால் அவன் வேட்டைக்கா ரன். அந்த நிலைக்கு நாம் சென்று விடக் கூடாது.

இன்று எமது ஊடகப் பிரச ார நடவடிக்கைகளை விட இனவாத குழுக்களின் ஊடகப் பலம் அதிகம் என்பதனையும் கருத்திற்கொள்ள வேண் டும். ஏனெனில் அவர்களி லான் ஒற்றுமை உணர்வுடன் வாழ வேண்டும் என்று சிந்திக்கும் பெரும்பான்மையினரைக்கூட எமக்கு எதிராக பொய்யான வாதப்பிரதிவாதங்களையும், நாம் முன்வைக்கும் சொற்பிரயோகங்களையும் முன்வைத்து திசை திருப்பி விடலாம். அவர்க ளின் வீணான வாதப்பிரதிவாதங்களை உடைத் தெறிந்து பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் உண்மையை வெளிப்படுத்தும் அளவிற்கு எமது ஊடகம் சக்தி பெறவில்லை.

மேலும் இன்று சமூக ஊடகங்களில் எமது சமூகத்தைச் சார்ந்தவர்களும் அநேகமான தவறுகளை செய்து வருகின்றனர். பெரும் பான்மை சமூகத்தினரைச் சீண்டும் வகையில் கருத்துக்களை முன்வைத்து சமூக ஊடகங்கள் வாயிலாக கருத்துக்களை முன்வைக்கின்ற னர். இவ்வாறான செயற்பாடுகளை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளுங்கள். இளம் இரத்தம் துடிப்பாகத்தான் வேலை செய்யும். ஆனால் நாங்கள் முஸ்லிம்கள், நாம் இந்த நாட்டில் வாழ வேண்டும், ஏனைய பகுதிகளிலும் முஸ்லிம் சகோதரர்கள் நிம்மதியாக வாழ வேண்டும், எம் எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த ஒரு சூழலை அமைப்பது எமது தலையாயக் கடமை என்ப தனை ஒவ்வொரு நொடிப்பொழுதும் சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதனை மறந்துவிட வேண்டாம்.

பாகிஸ்தான் - இலங்கை கிரிக்கட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இலங்கை தோல்வி நிலையை எய்திக்கொண் டிருக்கும்போது சிங்கள சகோதரர்கள் ஆக்ரோ சமாக தமது கருத்துக்களை சமூக ஊடகங்கள் வாயிலாக முன்வைத்து வந்தனர். இந்த சந்தர்ப் பத்தில் சில முஸ்லிம் இளைஞர்கள் அவர்களை மென்மேலும் கோபத்திற்கு உட்படுத்தும் வகையில் கமெண்ட் செய்தனர். இதனை செய்த இளைஞர்கள் இதன் பாரதூரம் அறியாமல் செய்திருக்கலாம். நீங்கள் வேறொரு நாட்டிற்கு ஆதரவு வழங்குவதாக இருந்தால் அதனை உங் களுடனேயே வைத்துக்கொள்ளுங்கள். அதனை பகிரங்கமாக வெளிப்படுத்துவதனைத் தவிர்த் துக் கொள்ளுங்கள். அதனை வெளிப்படுத்தி முஸ்லிம்களுக்கு எதிரான குரலாக அதனை அமைத்து விட வேண்டாம். முதலில் நாம் நாட்டுப் பற்றுள்ளவர்களாக வாழ வேண்டும். இதனையே இஸ்லாம் போதிக்கின்றது என்ப தனை நான் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதல்ல. நீங்கள் இதனை நன்கு அறிவீர்கள் என்பது எனது நம்பிக்கை.

தேவையான வார்த்தைகளையும் தேவையற்ற முறையில் பிரயோகித்து பெரும்பான்மை சகோ தரர்களையோ அல்லது சிறுபான்மை சகோதரர்களையோ கோபத் திற்குள்ளாக்கி முஸ்லிம்கள் மீது தீய சிந்தனையையும் வெறுப்பையும் ஏற்படுத்தாத வகையில் தமது நாவையும், செயற்பாடுக ளையும் அமைத்துக்கொள்வது முஸ்லிம் களாகிய எம் அனைவரதும் பொறுப்பாகும். நாம் எந்தப் பிரதேசத்தில் வசித்தாலும் அந்நிய சமூகத்தினருடன் ஒற்றுமையாக வாழ வேண் டும்.

விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில இனவாதிகளைத் தவிர்ந்த அநேகமான பெரும் பான்மை மற்றும் சிறுபான்மை மக்கள் முஸ்லிம் மக்களுடன் ஒற்றுமையாகவும் சகோதர மனப் பான்மையுடனும் இலங்கையர் என்ற அடிப்ப டையிலுமே வாழ விரும்புகின்றனர். இவ்வா றான செயற்பாட்டிற்கே நாம் வலுச் சேர்க்க வேண்டும். எமது செயற்பாடுகளையும் இவ்வாறே அமைத்துக் கொள்வதை விட்டு இன வாதிகளின் செயற்பாடுகளுக்குத் துணைபோய் எமது சமூகத்தை நிம்மதி இழந்த சமூகமாக மாற்றாமல் நாம் ஒழுக்க விழுமியங்களுடன் நடந்து கொள்வோம். விட்டுக்கொடுப்புடன் செயற்படுவோம். பொறுமையுடன் செயற்படு வோம். பெரும்பான்மை மக்களின் மனதை வெற்றிகொள்ளும் செயற்பாடுகளை முன்னெ டுப்போம்.

★★★

# ஸக்காத்: நபியவர்களின் உபதேசம்

நபித் தோழர் முஆத் (ரழி) அவர்களை யமனுக்கு ஆளுனராக நபியவர்கள் அனுப்பிவைக்கும் போது ஸக்காத்தின் கடமையைப் பற்றி அந்த மக்களிடம் பிரச்சாரம் செய்யும்படி உபதேசம் செய்தே அனுப்பினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் முஆத் பின் ஜபல் (ரழி) அவர்களை யமனுக்கு (ஆளுநராக) அனுப்பினார்கள். அப்போது அவரிடம், ''அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. நான் அல்லாஹ்வின் தூதர் என்ற உறுதி மொழியின்பால் அவர்களை அழைப்பீராக! இதற்கு அவர்கள் கட்டுப்பட்டால் தினமும் ஐவேளைத் தொழுகையை இறைவன் கடமையாக்கியிருக்கிறான் என்பதை அவர்களுக்கு அறிவிப்பீராக! இதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களில் செல்வர்களிடம் பெற்று, ஏழைகளுக்கு



வழங்குவதற்காக அவர்களின் செல்வத்தில் இறைவன் ஸகாத்தைக் கடமையாக்கியிருக்கிறான் என்பதை அறிவிப்பீராக!'' என்று கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரழி), நூல்: புகாரி 1395

பொதுவாக தர்மம் என்பது நமக்கு நன்மைகளை பெற்றுக் தரக் கூடிய ஓர் அம்சமாகும். ஆனால் ஸக்காத் என்பது இறைவனின் கட்டளைக்கிணங்க நாம் அதனை நடைமுறைப்படுத்தினால் நன்மையைப் பெற்றுக் தரும் அதே நேரம் ஸக்காத்தை கொடுக்காவிட்டால் கண்டிப்பாக இறைவன் விதியாக்கியதை மீறியதற்காக மறுமையில் தண்டனையும் உண்டு.

நஜ்த் வாசிகளில் ஒருவர் தலைவிரி கோலத்துடன் (பயணம் முடிந்த கையோடு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்தார். (தூரத்திலிருந்து) அவருடைய குரலின் எதிரொலி செவியில் ஒலித்தது. ஆனால் அவர் என்ன சொல்கிறார் என்று எங்களால் விளங்க முடியவில்லை.

அவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு அருகில் வந்ததும் இஸ்லாத்தைப் பற்றிக் கேட்டார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ''பகலிலும் இரவிலும் ஐந்து தொழுகைகள் (தான் இஸ்லாத்தில் கட்டாயக் கடமையான வணக்கம்)'' என்றார்கள். அவர் ''இதைத் தவிர வேறு (தொழுகை) ஏதாவது என் மீது (கடமையாக்கப்பட்டு) உள்ளதா?'' என்று கேட்க, ''இல்லை, நீ தானாக விரும்பிச் செய்யும் (கூடுதலான) தொழுகையைத் தவிர'' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

மேலும் ரமழான் மாதம் நோன்பு நோற்க வேண்டும் என்றும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உடனே அவர், ''இதைத் தவிர வேறு ஏதேனும் (நோன்பு) என் மீது (கடமையாக்கப்பட்டு) உள்ளதா?'' எனக் கேட்க, ''இல்லை, நீ தானாக விரும்பி நோற்கும் (கூடுதலான) நோன்பைத் தவிர'' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஸகாத் பற்றியும் அவருக்கு எடுத்துரைத்தார்கள். அவர், ''இதைத் தவிர வேறு (ஸகாத்) ஏதும் என் மீது (கடமையாக்கப்பட்டு) உள்ளதா?'' என்று கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ''இல்லை, நீ தானாக விரும்பிச் செய்யும் (கூடுதலான) வேறு தர்மத்தை தவிர'' என்றார்கள். அந்த மனிதர், ''அல்லாஹ்வின் மீதாணையாக! நான் இவற்றை விட கூட்டவும் மாட்டேன்; குறைக்கவும் மாட்டேன்'' என்று கூறியவாறு திரும்பிச் சென்றுவிட்டார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ''அவர் உண்மையாகவே (இதைக்) கூறியிருந்தால் அவர் வெற்றியடைந்து விட்டார்'' என்று சொன்னார்கள். அறிவிப்பவர்: தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரழி), நூல்: புகாரி 46

மேற்கண்ட செய்தியில் ஸக்காத்தை கட்டாயம் நிறைவேற்றும் படி நபியவர்கள் குறிப்பிட்ட மனிதனுக்கு வலியுறுத்தும் அதேநேரம், அதுவல்லாத தர்மங்களை நீ விரும்பினால் செய்து கொள்ளலாம் என்றும் அனுமதிக்கிறார்கள்.

வறுமை தாண்டவமாடிய அரேபிய தேசத்தில் பணக்காரன் எப்போதும் பணக்காரனாகவே இருந்தான் அதே போல் ஏழை ஏழையாகவே இருந்து அன்றாடம் கஷ்டத்தில் துவண்டுகொண்டிருந்தான். அந்த சந்தர்ப்பத்தில் தான் ஸக்காத் என்ற ஏழை வரியை இஸ்லாம் அறிமுகப்படுத்தி ஏழைகளின் கண்ணீர் துடைத்து அவர்களின் வறுமைக்கு சரியான தீர்வு சொல்லியது. வருமை ஒழிப்பில் முதலிடம் வகிக்கும் இந்த ஸக்காத் நிதியை செல்வந்தர்கள் கண்டிப்பாக சரியான முறையில் கொடுத்துவிட வேண்டும்.

# உழைப்பின் மகிமை

* கலாபூஷணம் அல்ஹாஜ் ஏ.எச்.மொஹமட்லெப்பே

இன்று உலக நாடுகளில் உழைக்கும் வர்க்கத்தினர் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, பரிக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்டு வருகின்றனர். இதனால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கும் அவர்கள் தம் உரிமைகளை முன்வைத்து பல்வேறு போராட்டங்களை நடத்துகின்றபோதிலும் அவற்றை வெற்றிகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர்.

ஆனால் இவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் இஸ்லாம் சிறந்த பொருளாதார முறையை முன்வைத்துள்ளது. இஸ்லாமிய பொருளாதார கொள்கையின் மூலமே மனிதனின் வாழ்வாதார பிரச்சினைகளை தீர்த்துக்கட்ட முடியும் என்பதை உலகுக்கு உணர்த்திவிட்டது.

இஸ்லாமிய பொருளாதார கொள்கையானது முதலாளித்துவத்தை ஆதரிக்கவும் இல்லை. கையேந்தி வாங்குவதை அனுமதிக்கவும் இல்லை. இதன் காரணமாகவே சோம்பேரித்தனத்தை முற்றாக ஒழிக்கும் உழைப்பை வலியுறுத்துகின்றது. "பூமியில் பல இடங்களுக்கும் சென்று பொருளீட்ட வேண்டும் என்பதை அல்குர்ஆனின் பல்வேறு வசனங்கள் வலியுறுத்துகின்றன."

(ஹஜ் பிரயாணத்தின் போது) நீங்கள் (அதாவது வியாபாரம் செய்து அதன் மூலம் இறைவனுடைய பேருளை தேடிக்கொள்வது) உங்கள் மீது குற்றமாகாது. (02:198)

அதுமட்டுமல்ல, ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றிவிட்டால் பள்ளியில் இருந்து வெளிப்பட்டு ( பூமியில் பரவிச்சென்று அல்லாஹ்வின் பேருளை தேடிக்கொள்ளுங்கள். அன்றியும் நீங்கள் வெற்றிகொள்ளும் பொருட்டு அல்லாஹ்வை அதிகம் அதிகம் தியானம் செய்யுங்கள். (62:10) மேலும் உமது இரட்சகன் எப்படிப்பட்டவன் என்றால் கடலில் நீங்கள் யாத்திரை செய்து அவனுடைய பேருளை தேடிக்கொள்வதற்காக, உங்களுக்காக அவனே கப்பலை கடலில் செலுத்துகின்றான். (17: 66)

இத்தகைய வசனங்கள் மூலம் இஸ்லாம் உழைப்புக்கு கொடுத்துள்ள முக்கியத்துவத்தை உணரமுடிகின்றது.

மேலும் எல்லா இறைத்தூதர்களும் உழைத்திருக்கின்றார்கள்.

எல்லா இறைத்தூதர்களும் ஆடு மேய்த்திருக்கிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வியாபாரம் செய்திருக்கிறார்கள். மூஸா (அலை) இடையராகவும், நூஹ் (அலை) தச்சராகவும், ஆதம் (அலை) விவசாயியாகவும், இத்ரீஸ் (அலை) தையற்காரராகவும், தாவூத் (அலை) கொல்லராகவும் இருந்திருக்கிறார்கள்.

''உங்களில் ஒருவன் ஒரு கயிற்றை எடுத்துக்கொண்டு தன்னுடைய முதுகில் விறகுக் கட்டையை சுமந்து விற்று வாழ்வது, மக்களிடம் யாசகம் கேட்பதைவிட சிறந்ததாகும். இதன் மூலம் அல்லாஹ் அவனுக்கு இழிவு ஏற்படாமல் தடுத்துவிடுவான். மக்கள் அவனுக்கு கொடுக்கவும் செய்யலாம். மறுக்கவும் செய்யலாம் என்று இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) கூறியிருக்கிறார்கள் என அபூஹுரைரா (ரழி) அறிவித்துள்ளார்கள். (புஹாரி:1470,1471)

இவ்வாறு, உழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.

தன் கையால் உழைத்து உண்பதை விட வேறு எந்த சிறந்த உணவையும் எவரும் உண்ணுவதில்லை.( நூல்- புஹாரி). எனவேதான், ஒரு மனிதன் பிறரிடம் கையேந்துவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. சுய மரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழவேண்டும் என்று எதிர்பார்க்கின்றது.



உழைக்காமல் சோம்பேரிகளாக பிறரிடம் கைநீட்டி யாசகம் செய்பவர்கள் மறுமையில் முகத்தில் கருப்புப் புள்ளிகளுடன் வருவார்கள். ஒருமுறை மனிதரொருவர், நபியவர்களிடம் வந்து ஏதாவது தருமாறு கேட்டார். இதைக்கேட்ட நபியவர்கள், உங்களுடைய வீட்டில் ஏதாவது இருக்கின்றதா? என்று கேட்டார்கள். அதற்கு அம்மனிதர்,'' ஒரு போர்வையும் ஒரு பாத்திரமும் இருக்கின்றது எனக்கூறினார். அவ்விரு பொருட்களையும் கொண்டுவருமாறு நபியவர்கள் பணித்தார்கள். அவ்விரு பொருட்களும் கொண்டுவரப்பட்டன. நபி (ஸல்) அவர்கள் அவற்றை ஏலத்தில் விற்றார்கள். 02 திர்ஹம்கள் கிடைத்தன. அதில் ஒரு திர்ஹத்திற்கு, குடும்பத்தினருக்கு உணவு வாங்கிக் கொடுக்குமாறும், ஒரு திர்ஹத்திற்கு கோடாரியொன்றை வாங்கி வருமாறும் கூறி, அம்மனிதரை அனுப்பி வைத்தார்கள். கோடாரி வாங்கிவரப்பட்டது. நபியவர்கள் அதற்கொரு பிடியைப் பொருத்தி, அம்மனிதரிடம் கொடுத்து, நீங்கள் விறகு வெட்டி விற்பனை செய்யுங்கள். 15 நாட்களுக்கு இப்பக்கம் தலைகாட்டக்கூடாது என்று கூறி அனுப்பிவைத்தார்கள்.

நபியவர்கள் கூறியதுபோன்று, அம்மனிதர் விறகுவெட்டி, விற்பனைசெய்து வந்தார். 15 நாட்களுக்கு பின்னர் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து தமது வருமானம் பற்றிக் கூறி, திருப்தியடைந்து நன்றிகூறினார்.

உழைக்காமல் அல்லாஹ் மீது பொறுப்பு சாட்டிவிட்டோம்( தவக்குல்) எனக்கூறிக் கொண்டு, பள்ளிவாசலில் முடங்கிக் கிடைந்தவர்களைக் கண்ட உமர் (ரழி) அவர்கள், உழைக்காமல், வருமானத்தைத் தேடி வெளியில் செல்லாமல் உங்களில் எவரும் இருக்கக்கூடாது. அல்லாஹ்வே எனக்கு வாழ்வாதாரம்(ரிஸ்கை) வழங்கு எனப் பிரார்த்தனை செய்தால் மாத்திரம் போதாது. வானம் தங்கத்தையோ, வெள்ளியையோ மழையாகப் பொழியப் போவதில்லை என்று கூறினார்கள்.

இஸ்லாம் வறுமையொழிப்புத் திட்டத்தை முன்வைக்கின்றது. உழைக்காமல் இருக்கக்கூடாது. உழைத்து உண்ண வேண்டும் என்ற அழகான வழிகாட்டல்களை வழங்கும்போது அவற்றை நாம் பின்பற்றவேண்டும். உலமாக்களும் சமூக தலைவர்களும் நன்கு திட்டமிட்டு செயற்பட்டு, சமூகத்தின் வறுமையை ஒழித்து, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முன்வரவேண்டும். ரமழான் மாதத்தில் முறையாக ஸக்காத் பணத்தை கூட்டாக நிறைவேற்றி, சமூக முன்னேற்றத்துக்கு பயன்படுத்தவேண்டும். ஏழைகளின் சுய கௌரவம் கெடாத வகையில் ஸகாத் போய்ச்சேரவேண்டும். ஸகாத்தின் மூலம் ஒரு கூட்டம் வறுமையிலிருந்து மீட்சி பெறவேண்டும்.




# இறைநேசம் பெற்றவர்கள்

2:222. மாதவிடாய் பற்றியும் உம்மிடம் வினவுகிறார்கள்; நீர் கூறும்: ''அது (ஓர் உபாதையான) தீட்டு ஆகும்; ஆகவே மாதவிடாயின் போது பெண்களை விட்டும் விலகியிருங்கள்; அவர்கள் தூய்மையாகும் வரை அவர்களை அணுகாதீர்கள்; அவர்கள் தூய்மையடைந்த பின் அல்லாஹ் எப்படி கட்டளையிட்டிருக்கின்றானோ அதன்படி அவர்களிடம் செல்லுங்கள்; பாவங்களை விட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான்; இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான்.''

3:31. (நபியே!) நீர் கூறும்: ''நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான்; மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்.''

3:76. அப்படியல்ல! யார் தம் வாக்குறுதியை நிறைவேற்றுகின்றார்களோ, (அல்லாஹ்வுக்கு) அஞ்சியும் நடக்கின்றார்களோ (அவர்கள் தாம் குற்றம் பிடிக்கப்பட மாட்டார்கள்); நிச்சயமாக அல்லாஹ் (தனக்கு) அஞ்சி நடப்போரை நேசிக்கின்றான்.

3:134. (பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள்; தவிர கோபத்தை அடக்கி கொள்வார்கள்; மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள்; (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான்.

3:146. மேலும் எத்தனையோ நபிமார்கள், அவர்களுடன் ரிப்பிய்யூன்கள் (என்னும் இறையடியார்களும்) பெருமளவில் சேர்ந்து (அல்லாஹ்வின் பாதையில்) போர் செய்தனர்; எனினும், அல்லாஹ்வின் பாதையில் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களால் அவர்கள் தைரியம் இழந்து விடவில்லை, பலஹீனம் அடைந்து விடவுமில்லை; (எதிரிகளுக்குப்) பணிந்து விடவுமில்லை - அல்லாஹ் (இத்தகைய) பொறுமையாளர்களையே நேசிக்கின்றான்.



3:148. ஆகவே, அல்லாஹ் அவர்களுக்கு இவ்வுலகத்தில் நன்மையையும், மறுமையின் அழகிய நன்மையையும் கொடுத்தான்; இன்னும், அல்லாஹ் நன்மை செய்யும் இத்தகையோரையே நேசிக்கின்றான்.

3:159. அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர்; (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப்போயிருப்பார்கள்; எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்திவிடுவீராக; அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக; தவிர,சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும்; பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப் பேற்படுத்துவீராக! - நிச்சயமாக அல்லாஹ் தன் மீதுபொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான்.

5:13. அப்பால், அவர்கள் தம் உடன்படிக்கையை முறித்து விட்டதால் நாம் அவர்களைச் சபித்தோம்; அவர்களுடைய இருதயங்களை இறுகச் செய்தோம்; (இறை)வசனங்களை அதற்குரிய (சரியான) இடங்களிலிருந்து அவர்கள் மாற்றுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதனையின் (பெரும்) பகுதியை மறந்து விட்டார்கள்; ஆகவே அவர்களில் சிலரைத் தவிர அவர்களில் பெரும்பாலோரின் மோசடியைப் பற்றி (நபியே!) நீர் தவறாமல் கண்டு கொண்டே இருப்பீர்; எனவே நீர் அவர்களை மன்னித்துப் புறக்கணித்து விடுவீராக. மெய்யாகவே நன்மை செய்வோரை அல்லாஹ் நேசிக்கிறான்.

5:42. அன்றியும், இவர்கள் பொய்யையே அதிகமாகக் கேட்போராகவும், விலக்கப்பட்ட பொருட்களையே விழுங்குவோராகவும் இருக்கின்றனர்; (நபியே!) இவர்கள் உம்மிடம் வந்தால், இவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்கும்; அல்லது இவர்களைப் புறக்கணித்து விடும்; அப்படி இவர்களை விடுவீராயினும், இவர்கள் உமக்கு யாதொரு தீங்கும் செய்ய முடியாது; ஆனால், நீர் (இவர்களிடையே) தீர்ப்பளிப்பீராயின் நியாயமாகவே அவர்களிடையில் தீர்ப்பளிப்பீராக; ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் நீதிவான்களையே நேசிக்கின்றான்.

# இறைநேசம் இழந்தவர்கள்

2:190. உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள்; ஆனால் வரம்பு மீறாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை.

2:205. அவன் (உம்மை விட்டுத்)திரும்பியதும், பூமியில் கலகத்தை உண்டாக்கவே முயல்வான்; விளை நிலங்களையும், கால்நடைகளையும் அழிக்க முயல்வான்; கலகத்தை அல்லாஹ் விரும்புவதில்லை.

2:276. அல்லாஹ் வட்டியை (அதில் எந்த பாக்கியத்தும் இல்லாமல்) அழித்து விடுவான்; இன்னும் தான தர்மங்களை (பாக்கியத்துகளைக் கொண்டு) பெருகச் செய்வான்; (தன் கட்டளையை) நிராகரித்துக் கொண்டிருக்கும் பாவிகள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.

3:32. (நபியே! இன்னும்) நீர் கூறும்: "அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்படிந்துநடங்கள்.'' ஆனால் அவர்கள் புறக்கணித்துத் திரும்பி விடுவார்களானால் - நிச்சயமாக அல்லாஹ் காஃபிர்களை நேசிப்பதில்லை.

3:57. ஆனால், எவர் ஈமான் கொண்டு நற்கருமங்களும் செய்கிறார்களோ, அவர்களுக்குரிய நற்கூலிகளை (அல்லாஹ்) முழுமையாகக் கொடுப்பான்; அல்லாஹ் அக்கிரமம் செய்வோரை நேசிக்கமாட்டான்.

3:140. உங்களுக்கு ஒரு காயம் ஏற்பட்டது என்றால், அதே போன்று மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது; இத்தகைய (சோதனைக்) காலங்களை மனிதர்களிடையே நாமே மாறி மாறி வரச் செய்கின்றோம்; இதற்குக் காரணம், ஈமான் கொண்டோரை அல்லாஹ் அறிவதற்கும், உங்களில் உயிர் தியாகம் செய்வோரை தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குமே ஆகும்; இன்னும், அல்லாஹ் அநியாயம் செய்வோரை நேசிப்பதில்லை.

4:36. மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள்; அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும்,அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை.

4:107. (நபியே!) பிறருக்கு தீமை செய்து அதனால் எவர் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டார்களோ அவர்களுக்காக நீர் வாதாட வேண்டாம்; ஏனென்றால் கொடிய பாவியான சதி செய்து கொண்டிருப்பவரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை.

5:64. "அல்லாஹ்வின் கை கட்டப்பட்டிருக்கிறது'' என்று யூதர்கள் கூறுகிறார்கள்; அவர்களுடைய கைகள்தாம் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கூறியதின் காரணமாக அவர்கள் சபிக்கப்பட்டார்கள்;அல்லாஹ்வின் இரு கைகளோ விரிக்கப்பட்டே இருக்கின்றன; தான் நாடியவாறு (தன் அருட்கொடைகளை) கொடுக்கிறான்; உம் மீது உம் இறைவனால் இறக்கப்பட்ட (இவ்வேதம்) அவர்கள் அநேகரில் வரம்பு மீறுதலையும் குஃப்ரை (நிராகரிப்பை)யும் நிச்சயமாக அதிகப் படுத்துகிறது. ஆகவே அவர்களிடையே பகைமையும், வெறுப் புணர்ச்சியையும் இறுதி நாள்வரை நாம் போட்டுவிட்டோம்; அவர்கள் யுத்த நெருப்பை மூட்டும்போதெல்லாம் அதனை அல்லாஹ் அணைத்து விடுகிறான்; (ஆயினும்) இன்னும் அவர்கள் பூமியில் குழப்பம் செய்து கொண்டே திரிகின்றனர்; அல்லாஹ் குழப்பம் செய்பவர்களை நேசிக்க மாட்டான்.

நவமணி



# தீ விழுங்கிய 'கிரென்பெல் டவர்'



லண்டன் கி.பி.43இல் ரோமானியர்கள் கண்டு எடுத்த நகரம். இந் நகரத்தைத் தலைநகரமாகக் கொண்டே உலகம் முழுவதையும் ஆண்ட ஆங்கிலேயர் - சூரியன் தங்கள் ஆட்சியில் மறையாது என்று பெருமையுடன் கூறிக் கொண்டனர். வரலாற்றுப் புகழ்மிக்க லண்டனின் எல்லைகள் இன்று விரிவடைந்துவிட்டன.

லண்டன் நகரம், ஐரோப்பாக் கண்டத்தின் கலை இலக்கியம், பொருளாதாரம், பாரம்பரியச் சிறப்பு ஆகியவற்றின் அடையாளமாய்த் திகழ்கிறது. பல இனம், பண்பாடு கொண்ட மற்றும் மொழி பேசும் மக்கள் சுமார் ஒன்றரைக் கோடிப்பேர் லண்டனில் வாழ்கிறார்கள்.

அதனால் லண்டன் கிட்டத்தட்ட 300 மொழிகளைப் பேசக் கேட்டுக்கொண்டிருக்கிறது. உலகிலே எந்த நகரத்திலும் இவ்வளவு மொழிகள் கேட்காது என்றே சொல்லவேண்டும். அந்தளவுக்கு பாரம்பரிய சிறப்புகள் கொண்டது லண்டன் பெரு நகரம்.

கடந்த புதன்று கண்விழித்த வேளை, வானலைகளில் ''லண்டன் நகரின் பிரம்மாண்ட கட்டடத்தில் தீ'' என்ற செய்தி காட்டுத்தீயாக பரவியது. வலைத்தளங்களில் ''லண்டனுக்காக பிரார்த்திப்போம்'' என்ற செய்திகள் வைரலாகின. இந்நிலையில் எம்நாட்டு அரசு கூட, தீப்பற்றி யெரிந்த குறித்த கட்டடத்தில் எம்நாட்டவர்கள் சிக்கியுள்ளனரா? என்ற தேடுதல் வேட்டையை ஆரம்பித்திருந்தது. இச்செய்திகள் எம்மை மட்டுமல்ல, உலகளவில் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தது.

மேற்கு லண்டனில் வடக்கு கென்சிங்டன் நகரின் நடுவே 27 மாடிகளை கொண்டு பிரமாண்டமாக அமைந்துள்ளது கிரென்பெல் டவர் அடுக்குமாடி குடியிருப்பு. கடந்த 1974ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக்கட்டடத்தில் சுமார் 120 வீடுகளில் சுமார் 600 பேர் வசித்து வந்துள்ளனர். இந்த 27 மாடிகளில் 20 மாடிகள் குடியிருப்பாகவும் மற்ற 7 மாடிகள் ஏனைய தேவைகளுக்குமாக பயன்படுத்தப்பட்டு வந்தன. அதுமட்டுமன்றி கடந்த 2016ஆம் ஆண்டே கட்டடம் ஒட்டுமொத்தமாக மறுசீரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது இவ்வாறிருக்க நள்ளிரவு உள்ளூர் நேரப்படி புதன்(14) அதிகாலை 1.16 மணியளவில் கட்டடத்தின் 2ஆவது தளத்தில் தீப்பிடித்தது.

தீ மளமளவென அடுத்தடுத்த தளங்களுக்கு பரவியது. இதனால், வீடுகளுக்குள் வெப்பமும், புகையும் பரவத் தொடங்கியது. தீவிபத்து இடம்பெற்றது நடுநிசி என்பதால், அதிர்ச்சியடைந்து விழித்த குடியிருப்பு வாசிகள் நிலைமையை புரிந்து கொண்டு வேகமாக வெளியேறத் தொடங்கினர்.

இதனையடுத்து விபத்து குறித்து தகவலறிந்த, 40 தீயணைப்பு வாகனங்களுடன் சுமார் 250இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் வருகைத்தந்து, தீயை அணைக்கும் பணியிலும், மாடிகளில் சிக்கியிருந்தவர்களை மீட்கும் பணியிலும் ஈடுபட்டனர்.

இதில் 79இற்கும் மேற்பட்டோர் தீக் காயங்களுடன் மீட்கப்பட்டு 20 ஆம்பியுலன்ஸ்களில் நகரின் பல்வேறு வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இதில் 20 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாலை நேரத்தில் தீ விபத்து ஏற்பட்டதால் தூங்கிக் கொண்டிருந்த பலர் கட்டடத்துக்குள் சிக்கிக் கொண்டனர். சிலர் அவர்களின் குழந்தைகளுடன் ''காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்'' என ஜன்னல் வழியாக உதவிகோரி குரல் எழுப்பினர். சிலர் உயிரைக்காப்பற்றி கொள்ளும் பொருட்டு ஜன்னல் வழியாக கீழே குதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு குதித்தவர்கள் பலர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர். சில நிமிடங்களில்... மின்தூக்கிகள் இயங்காததால், படிக்கட்டுகள் வழியாக பலர் கீழே இறங்கி உயிர்பிழைத்தனர். எனினும், பலர் தீ விபத்தை உணர்ந்ததும் கட்டடத்திலிருந்து உடனடியாக வெளியே றிவிட்டனர். அவர்கள் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, அடுக்குமாடி குடியிருப்பின் ஒவ்வொரு மாடியாக தீ பரவத் தொடங்கியது. காற்று வீசியதால் தீ வேகமாகப் பரவியது. வானைத் தொடுமளவுக்கு உயர்ந்து நின்ற அந்த கட்டடம் முழுவதையும் சில நிமிடங்களிலேயே தீ சூழத் தொடங்கியது.

நகரின் நடுவே பிரமாண்டமாக அமைந்திருந்த கட்டடம் தீப்பிடித்து எரிந்தது, அதிகாலையிலேயே லண்டன்வாசிகளை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அப்பகுதியில் விண்ணை முட்டுமளவுக்கு பல மணி நேரத்துக்கு புகை சூழ்ந்திருந்தது.



தீ கொழுந்து விட்டு எரிந்ததால் தீயணைப்பு வீரர்கள் கட்டடத்துக்குள் எளிதில் செல்ல முடியவில்லை. பல மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகே தீ அணைக்கப்பட்டது. குடியிருப்பின் 24 மாடிகளும் முற்றிலும் எரிந்துவிட்டன. வீடுகளில் இருந்த ஒரு பொருள் கூட தீயிலிருந்து தப்பவில்லை.

**உயிரிழப்பு அதிகரிக்கும்:**

தீ விபத்தில் 12 பேர் உயிரிழந்துவிட்டனர். தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட 79பேரில் 20 பேரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மேலும், மீட்புக் குழுவினரால் 20 மாடிகள் வரையே சென்று மீட்புப் பணியில் ஈடுபட முடிந்தது. அதற்கு மேலுள்ள மாடிகளில் வசித்தவர்களில் சிலர் வீடுகளுக்குள்ளேயே கருகியிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. அதுமட்டுமன்றி இத்தீவிபத்தில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருக்கலாம் என அதிகாரியொருவர் அச்சம் தெரிவித்துள்ளார். எனினும், உயிரிழப்புகள் தொடர்பாக அதிகாரபூர்வமாக தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

தீ கொழுந்துவிட்டு எரிந்ததால் பல கிலோ மீற்றர் தொலைவுக்கு புகை மண்டலமாக காட்சி அளித்தது. கட்டடம் அமைந்துள்ள பகுதியிலிருந்து 100 மீற்றர் தூரம் வரை சாம்பல் படிந்து காட்சியளிக்கிறது. இதனால், அப்பகுதி மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். இதனால் இந்த கட்டடத்தைச் சுற்றி உள்ள பகுதியில் வசிப்பவர்கள் உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

இதுகுறித்து லண்டன் ஆளுநர் சாதிக் கான் தெரிவிக்கையில், இக் கட்டடத்தில் பாதுகாப்பு குறைபாடுகள் இருந்ததாகவும் முறையாக பராமரிக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பு விடயத்தில் சமரசம் கிடையாது. எனவே, இதுகுறித்து உரிய விசாரணை நடத்தப்படும் என்றார்.

கென்சிங்டன் என்ட் செல்சி டெனன்ட் மேனேஜ்மென்ட் நிறுவனம் இந்தக் கட்டடத்தை நிர்வகித்து வந்துள்ளது. இந்த தீ விபத்து காரணமாக, இந்த நிறுவனம் நிர்வகித்து வரும் சுமார் 10 ஆயிரம் குடியிருப்புகள் மீது அனைவரது கவனமும் திரும்பியுள்ளது.

**எச்சரிக்கைகள் புறக்கணிப்பு**

இக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்டபோது, இங்கு தீ விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக எச்சரிக்கை விடுத்ததாகவும் அதைக் கண்டுகொள்ளவில்லை என்றும் கிரென்பெல் செயற்பாட்டுக் குழு குற்றம்சாட்டியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் வலைப்பதிவாளர் ஒருவர் கிரென்பெல் டவர் கட்டடம் தொடர்பாக இட்ட பதிவில், கென்சிங்ஸ்டன் அன்ட் செல்சி டெனன்ட் மேனேஜ்மென்ட் நிறுவனம் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்ட விதிகளைச் சரியாக கடைப்பிடிப்பதில்லை. ஒரு பேரழிவுச் சம்பவம் நிகழ்ந்தால் மட்டுமே இந்த நிறுவனத்தின் மடைத்தனமும் திறமையின்மையும் திருபணமாகும் எனக் குறிப்பிட்டிருந்தார். இத் தீவிபத்தில் கட்டடத்தின் 120 வீடுகளும் முற்றிலும் சேதமடைந்தன.

**பள்ளிவாசல்கள் - தேவாலயங்கள் உதவிக்கரம்**

கிரென்பெல் கட்டட தீ விபத்தில் இருந்து உயிர் தப்பியவர்களுக்கு தேவையான உதவிகளை அப்பகுதியிலுள்ள பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் செய்து வருகின்றன.

விபத்துக்குள்ளான கட்டடத்தைச் சுற்றியுள்ள பகுதியில் ஏராளமான முஸ்லிம்கள் வசித்து வருகின்றனர். இவர்களும் விபத்தில் உயிர் தப்பியவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளனர். இதற்காக அப்பகுதியிலுள்ள பள்ளிவாசல்கள் திறந்து வைக்கப்பட்டன.

அதுமட்டுமன்றி நகரிலுள்ள செயின்ட் கிளமெண்ட்ஸ் தேவாலயமும் தீ விபத்தில் உயிர் பிழைத்தவர்களுக்கு உதவும் மையமாக மாறியுள்ளது.

விபத்திலிருந்து குடும்பத்தினருடன் தப்பிய முஹம்மது தெரிவிக்கையில், காலையில் தாமதமாக எழுந்திருப்பது வழக்கம். ஆனால், இது ரமழான் மாதம் என்பதால் முன்கூட்டியே விழித்ததால் உயிர் தப்பினோம் என்றார். மேலும் இதில் நோன்பு நோற்பதற்காக அதிகாலை விழித்திருந்த முஸ்லிம் சகோதரர்கள் தீ பரவிய விடயமறிந்து கட்டடத்தின் அயல்வீட்டு கதவுகளை தட்டி அவர்களை காப்பாற்றியுள்ளனர். இதனால் இன்று பலர் உயிர்பிழைத்துள்ளதாக குறித்த கட்டடவாசியொருவர் தெரிவித்துள்ளார்.

**மிக மோசமான விபத்து:**

இந்த சம்பவம் தொடர்பாக தீயணைப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், ''லண்டனில் கடந்த 30 ஆண்டுகளில் நிகழ்ந்த மோசமான தீ விபத்து இது. தீப்பிடித்த கட்டடம் இடிந்து விழும் அபாயம் இருப்பதால் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அப்பகுதியிலுள்ள வீதிகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன'' என்றார்.

**காரணம் என்ன?**

2 அல்லது 3-ஆவது மாடியில் பழுதான நிலையில் பயன்படுத்தப்பட்டு வந்த குளிர்சாதனப்பெட்டியில் ஏற்பட்ட தீ, குடியிருப்பு முழுவதும் பரவியிருக்கலாம் என்று முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதில் சதிவேலை எதுவும் இருக்குமா? என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.



**குழந்தையை ஜன்னல் வழியா எறிந்த தாய்**

தீப்பிடித்த குடியிருப்பின் 10ஆவது மாடியில் சிக்கியிருந்த பெண் ஒருவர், தனது குழந்தையை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டும் என்ற நோக்கில், கீழிருந்தவர்களை நோக்கி காப்பாற்றுமாறு கத்தியபடி, ஜன்னல் வழியாக குழந்தையை கீழே வீசினார். தரையை நோக்கி வேகமாக விழுந்த குழந்தையை, கீழே இருந்த ஒருவர் வேகமாக ஓடிச் சென்று கையில் பிடித்துக் கொண்டார். இதனால் அந்த குழந்தை உயிர்தப்பியது.

ஆனால், அந்த குழந்தையின் தாய் தீயில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் இருந்தவர்களை நெகிழச் செய்துள்ளது.

(அத்தனை தகவல்களும் பத்திரிகை அச்சுக்கு செல்லும் வரை வெளியான தகவல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது)




**நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி**




| போட்டி - 01 | போட்டி - 02 |
|---|---|
| (திங்கள் – வெள்ளி) | (வெள்ளிக்கிழமை) |
| 1ஆம் பரிசு : உம்ரா யாத்திரை<br>2ஆம் பரிசு : மடிக் கணனி<br>3ஆம் பரிசு : கணனி<br>22 ஆறுதல் பரிசுகள் | கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும் |

## போட்டி நிபந்தனைகள்

- தினமும் 5 கேள்விகள்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜுலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியான அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி - ஜுலை 15, 2017

1. முதன் முதலில் நோன்பு நோற்ற மனிதர் யார்?
2. 03 எழுத்துக்களுடன் ஆரம்பமாகும் சூறாக்கள் எத்தனை?
3. 'அஃராப்' எனும் பதத்தில் அறியப்படுவது எதனை?
4. நபிகளார் கலந்து கொண்ட மொத்த யுத்தங்கள் எத்தனை?
5. 'பிலால் (ரழி)' அடக்கம் செய்யப்பட்ட நகரம் என்ன?

**போட்டி 2**

சமகால முஸ்லிம் உம்மத்தின் நிலைமையும் எதிர்பார்ப்பும், கூட்டுபொறுப்பும்

**போட்டி - 15**
**16.06.2017 - வெள்ளிக்கிழமை**

பெயர் :........................................
முகவரி :........................................
தொலைபேசி :........................................
தே.அ.அ. இல.:........................................
கையொப்பம் :........................................

Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala

மேலதிக விபரங்களுக்கு
எம்.எஸ்.எம். சாஜஹான் - 0778751032,
வாரித் - 0772604964, அஷ்ஷெய்க் ரிஷாத் 077 2415415




# குழந்தையின் முதல் ஆசிரியர் பெற்றோரே...

குழந்தைகளின் முதல் ஆசிரியர் பெற்றோர்தான். பெற்றோரைப் பார்த்துதான் அவர்கள் உறவுகளை மதிக்க கற்றுக் கொள்வார்கள். அதனால் அவர்கள் மனதில் உறவுகள் பற்றி நல்ல எண்ணம் தோன்றும் வகையில் நல்ல விஷயங்களை மட்டும் அவர்கள் முன் பேசுங்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே உறவுகளை அனுசரித்துச் செல்ல அவர்களை பழக்கப் படுத்துங்கள்.

கோபத்தை கட்டுப்படுத்த கற்றுக்கொடுங்கள். கோபத்தை அடக்குவதால் சுற்றி இருப்பவர்கள் அவர்களை மதிப்பார்கள். அவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை வளரும்.

பெரும்பாலான இளம் சமுதாயத்தினர் தற்கொலை முயற்சிக்கு முதல் காரணம் மன அழுத்தம். அவர்களின் பிரச்சினைகளை தெரிவிக்க யாரும் இல்லாமல் மற்றும் பெற்றோர் நல்ல நண்பர்களாக இல்லாமையே இதற்கு காரணம். எனவே பெற்றோர்கள் குழந்தைகளு



உறவினர்களை வீட்டிற்கு அழைத்து வந்து குழந்தைகளுக்கு அறிமுகப் படுத்தவேண்டும். உறவினர்களுடன் இலகுவாக பழக அனுமதிக்க வேண்டும். உறவினர்களுடன் பழகுவது மனோரீதியான ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

டன் சகஜமாக பழகுவது நல்லது.

அம்மா-அப்பாவே உலகம் என்று குழந்தைகள் வாழவேண்டும் என்று பெரும்பாலான பெற்றோர் நினைக்கிறார்கள். அது தவறு. உறவினர்களிடமும் நல்ல அந்நியோன்யத்தை ஏற்படுத்த வேண்டும். தேவைப்படும்போது தங்களோடு உறவாட உறவுகள் இல்லாமல் போனால், எதிர்காலத்தில் தங்கள் பெற்றோர் மீதே குழந்தைகளுக்கு ஒருவித வெறுப்பு தோன்றிவிடும்.



# இலங்கை ஹஜ் பயண ஏற்பாடுகளும்
# ஹஜ் கட்டணமும் ஓர் ஆய்வு

**அபூ அய்தா**

(வியாழன் தொடர்ச்சி)

இறுதி நேரம் என்பதாலும் கைவிடுப்பில் எஞ்சியிருக்கும் சிறுதொகை rooms களைப் பெரியதொகை யாத்திரிகர்கள் எண்ணிக்கை கொண்ட பிறநாட்டு முகவர்களுக்கு வழங்கமுடியாது என்பதாலும் bargain விலைகளுக்கே கொடுத்தும் விடுகின்றனர்.

Muallim சவூதி அரசாங்கம் ஹஜ்ஜின் போது முஅல்லிம்கள் வழங்கும் சேவைகளைப் பொறுத்து 7வகையான பிரிவுகளாக பிரித்துள்ளதை arab news பத்திரிகையில் காணக் கூடியதாயிருந்தது. http://life&in&saudiarabia.blogspot.com/2016/06/prices-& for& 7& categories & of & hajj & fixed.html?m=a அதற்கமைய முஅல்லிம்கள் தங்களின் 3000- 8000 sr வரைக்குமான கட்டணங்களை 1000& 3500 sr வரை குறைத்து அவர்களின் எஞ்சிய இடங்களை நிரப்பிக் கொள்கின்றனர்.

ஒருவாறாக பேரம்பேசி குறைந்த விலையில் தமது booking I பூர்த்தி செய்த முகவர்களை, தங்களின் கொள்வனவு விலையையே ஹாஜிகளிடம் அறவிட வேண்டும் என்று கோருவது அபத்தம் என்பதை business minded என்ற பெயர் எடுத்த முஸ்லிம் மக்களாகிய நாம் அறிவோம்.ஆனால் இதனை புரியாதவர்களாக படித்தவர்களும் நிர்வாகத் துறையில் இருப்பவர்களும் எம் சமூகத்தில் உள்ளனர் என்பது கவலையே.

உதாரணமாக 1kg anchor பெட்டியின் விலையை அந்த anchor company 600 ஆக நிர்ணயித்து பெட்டியில் அச்சிடுகின்றது. அந்த anchor பெட்டியை தமக்கு தெரிந்த sales rep ஊடகவோ அல்லது அந்த company இல் வேலை செய்யும் ஊழியருடாகவோ அவர்களுக்கு மட்டும் என்றமைந்த விலைக் கழிவில் 400 lkr வுக்கு நாம் வாங்குகிறோம் என வைத்துக் கொள்வோம். அதை இன்னொருவருக்கு 580 lkr இற்கு விற்றால் அது குற்றமாகும் அல்லது அது அநியாயம் என்று கூறுவது முறையற்றது போன்றதுதான் அவ்வகையான argumentகள்.

இனி 2016ஆம் ஆண்டின் படி அமைந்த ஹஜ் கட்டணத்தை கூறுகளாக பிரித்து அதன் செலவீனங்களை அறிந்து கொள்வோம்-

கீழ்வரும் கட்டணங்கள் இன்றைய சூழலுக்கும் அதனோடு ஒத்த வாழ்க்கை தரத்திற்கும் ஏற்றாற் போல் minimum and maximum கட்டணத் தொகைகள் கணக்கிடப்பட்டுள்ளன;

அதற்கமைய minimum கட்டணங்களை விடவும் குறைவான ஹோட்டல் எனின் பெரும்பாலும் மோசமான தரத்தையும் ஹறத்திலிருந்து வெகு தூரமாகவும் அமைந்திருக்கும்; maximum கட்டணத்திற்கு அதிகமான ஹோட்டல்கள் பெரும்பாலும் அதி கூடிய சௌகரியத்தையும் ஹறத்திற்கு மிக அருகாமையிலும் அமைந்திருக்கும் என்பவற்றையும் கருத்திற் கொள்வோம்.

minimum (ஆக குறைந்தது 5,6,7,8 கட்டில்களுடைய அறைகள். ஹறத்திற்கு 1500ட் க்குள் அமையப் பெற்ற ஹோட்டல்கள்)

maximum (ஆக கூடியது 4,5, கட்டில்களுடைய அறைகள்.ஹறத்திற்கு 500 க்குள் அமைய பெற்ற ஹோட்டல்கள்.

மக்கா தங்குமிடம்...
min900 & ma-x2500

மதீனா தங்குமிடம்...
min900 & ma-x2500

அஸீஸியா தங்குமிடம்...
min700 & max2000

முஅல்லிம்...
mi-n900& ma-x3500

ஹஜ் வரி... 1050

சாப்பாடு... 40* 30. 1200

TOTAL 5650 SR & 12,750 SR

(with the EXCHANGE RATE of 39/&LKR)

(direct Air tickets 1,25,000-/& LKR )/-/-// (transist air tickets 1,05,000-/& LKR)

Air ticket I பொறுத்தமட்டில், சாதாரண நாட்களில் 45-55 ஆயிரம் ரூபா வரையில் நிலவும் கட்டணம் ஹஜ் seaseon இன் போது அதிகரிக்கப்படுவது வழமையான விடயம். அதற்கமைய கடந்த வருட டிக்கட் விலை 1 இலட்சம் தொடக்கம் 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவாக காணப்பட்டது.

இக் கட்டணங்களுக்கான சேவைகள் categorized and limited ஆக எக்காலத்திலும் இருப்பதால் availability மற்றும் முகவர்களின் பூர்த்திக் கொள்ளும் ஆற்றல்களுக்கு ஏற்றவாறு கொள்வனவு செய்வார்கள். இருப்பினும் எல்லா சேவைகளையும் தனியே ஒரு முகவர் மாத்திரம் அவற்றின் ஆகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்வது என்பது இயலாது, மாறாக ஒரு முகவர் மக்கா தங்குமிடத்தை ஆகக்குறைந்த விலையில் பெற்றால் மதீனா ஹோட்டல் எப்படியும் அதிகரித்த விலைக்கே பெறுவர். ஆகவே எல்லா முகவர்களாலும் ஆகக்குறைந்த கட்டணத்தைக் கொண்ட எல்லா சேவைகளையும் பெறுவது என்பது நடக்காத காரியம் என்பதால், மேற்கூறப்பட்ட சவூதி செலவீனங்களின் மத்திம தொகைக்கு ( middle amount ) அமைவாக கணக்காய்வு செய்வது ஒரு நிகர ஹஜ் கட்டணத்தை அறிந்து கொள்ள இலகுவாக இருக்கும்.

இவற்றுக்கமைய ஆகக்குறைந்தது 5650 SR தொடக்கம் அதி கூடிய தொகையான 12,750 SR வரையான சவூதி செலவீனங்கள் இலங்கை ரூபா படி 2,20,350 /- தொடக்கம் 4,97,250/- LKR வரை காணப்பட்டது. அதனோடு விமான டிக்கட்களின் விலையான 1,25,000/& LKR ஐ கூட்டினால் ஆக குறைந்த basic ஹஜ் கட்டணமாக 3,45,350 LKR உம் ஆக கூடிய basic ஹஜ் கட்டணமாக 6,22,250 LKR ஆகவும் அமைந்தன.

மேற்குறிப்பிடப்பட்ட கட்டணங்கள் பற்றிய ஆய்வுகளையும் அதனோடு அமைந்த குற்றச்சாட்டுகளையும் அலசும் போது இலங்கை ஹஜ் முகவர்கள் சம்பந்தமாகவும் ஹஜ் கமிட்டி பற்றியதுமான பரஸ்பரக் குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மையை விளங்கிக்கொள்ள முடியும்.

முகவர்கள் தெரிவின் போது திணைக்களத்தால் முகவர்கள் மீது நிர்ப்பந்திக்கப்படும் போது கீழ்வரும் licenses களுக்கான அரசாங்க கட்டணங்கள் அவற்றை புதிப்பிக்க தேவைப்படும் documentation charges மற்றும் இவற்றுக்கான deposits செலவுகள் மேலும் அவற்றின் மூலம் இயல்பாகவே நிர்ப்பந்திக்கப்படும் requirements களான 4000 sq ft office room கள் , epf etf செலுத்தப்பட வேண்டிய குறைந்தது 2 office staff போன்ற விடயங்களுக்கான ஆகக் குறைந்த ஆண்டு செலவுகளை பின்வருமாறு பட்டியலிடலாம்.

1) tourist board license & 35,000/ & with the deposit of 120,000/& LKR

2) aviation license & 35,000/ & with the deposit of 2,50,000/ & LKR

3) minimum 15,000/ & LKr of office rental *12 months & 1,80,000-/& LKR

4) minimum 10,000 LKR bill of electricity ,water and communications for an office maintainance *12 months & 1,20,00-/-&-LKR

5) minimum salary of 10,000/ & 15,000/ & paid office staffs * 12 months & 300,000/ & LKR

6) other office maintaining documental expenses 3000*12 months & 30,000/ &

7) registration fee paid to MRCA &25,000/ &

8) fee for allocated pilgrim per head &2000/

(திங்கள் தொடரும்)

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் அண்மைக்காலமாக முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட 40 தாக்குதல்கள் தொடர்பாக விரிவாக முஸ்லிம் பிரதிநிதிகள் முன்னாள் ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கினர்.

முஸ்லிம்கள் எதிர்ப்பார்ப்பது இந்த நாட்டின் சட்டமும் நீதியும் நிலைநாட்டப்படவேண்டி என்பதையாகும். யார் தவறு செய்தாலும் அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல் நடத்துவது உறுதி செய்யவேண்டும் என்று கேட்டுகொண்டனர். முஸ்லிம்கள் தொடர்பான முறைப்பாடுகளை செவிமடுத்த முன்னாள் ஜனாதிபதி சட்டத்தை பாரபட்சமின்றி அமுல்நடத்துவதன் அவசியத்தை அரசுக்கு வலியுறுத்துவதாக தெரிவித்தார். நடந்துள்ள சம்பவங்கள் குறித்து தனது வருத்தத்தை தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சட்டத்தை மீறுவோர் யாராக இருந்தாலும் அவர்களை கைது செய்வதற்கு தயங்கக்கூடாது என்றும் தனது தந்தையைக் கொன்ற இரு பௌத்த பிக்குகளையும் கைது செய்த போது மக்கள் எவ்வித எதிர்ப்பினையும் தெரிவிக்கவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, சூறா கவுன்சில், வை.எம்.எம்.ஏ.பேரவை, அல்.முஸ்லிமாத் உட்பட பல முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகளும் தேசிய ஐக்கிய முன்னணி தலைவர் அசாத் சாலி, தம்பர அமில தேரர் உட்கட புறவசி பல பிரதிநிதிகளும் குறித்த கலந்துரையாடலில் பங்குப்பற்றினர்.

## விக்னேஸ்வரனுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையிலான அமைச்சர்கள் குருகுலராஜா, டெனீஸ்வரன், சத்தியலிங்கம் உள்ளிட்ட 16 மாகாணசபை உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அப்பிரேரணையில், வடக்கு முதல்வர் மீது நம்பிக்கை இழந்து விட்டதாகவும் அவரை மாற்ற வேண்டும் என்றும் தெரிவித்து வடக்கு மாகாணசபையின் 22 உறுப்பினர்கள் கையெழுத்திட்டுமிருந்தனர்.

ஆனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியின் 6 உறுப்பினர்களும் கையெழுத்திட்டிருந்த இந்த கடிதத்தைப் பெற்றுக்கொண்ட ஆளுநர், அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

வடமாகாணச சபையில் எழுந்த ஊழல் சர்ச்சையை அடுத்து ஊழல் குற்றம் சுமத்தப்பட்டுள்ள வடமாகாணத்தின் விவசாய அமைச்சரான ஐங்கரநேசன் மற்றும் கல்வியமைச்சர் குருகுலராஜா பதவி விலக வேண்டும் என்று முதல்வர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை ஊழல் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஏனைய இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக புதிய விசாரணை நடைபெறும் என்றும் அவ்விசாரணை முடிவடையும் வரை குறித்த இரு அமைச்சர்களும் விடுமுறையில் விலகி இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் மதியம் தெரிவித்துள்ளதை யடுத்தே அவருக்கு எதிராக மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையானது நேற்று முன்தினம் இரவு கையளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுபலசேனாவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

குருநாகல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருநாகல் கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள மல்லவப்பிட்டிய ஜும்ஆப் பள்ளிவாசல் மீது கடந்த மே மாதம் 21ஆம் திகதி அதிகாலை 3.30 மணி அளவில் இனந்தெரியாத சிலரால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. மூன்று மோட்டார் சைக்கிள்களில் வருகை தந்த ஆறு நபர்களே இந்த தாக்குதலை நடத்தி விட்டுச் சென்றமை சி.சி.ரி.வி. கெமராவில் பதிவாகியிருந்தது.இந்த தாக்குதல் காரணமாக பள்ளிவாசல் மேல் மாடியில் உள்ள கண்ணாடியில் சிறு சேதங்களுடன் மாபல்கள் சுவரும் கருகிப்போனது.

மேலும், பள்ளிவாசலுக்கு அருகாமையில் செல்லுகின்ற தொரட்டியாவ வீதியில் நின்று பள்ளிவாசலின் பின்பகுதிக்கே இந்த தாக்குதலை நடத்திச் சென்றுள்ளனர். ஆறு பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியிருந்ததுடன், இதில் இரண்டு குண்டுகள் வெடிக்கவில்லை.

கடந்த மே மாதம் 21 ஆம் திகதி, குருநாகல், கொஸ்கெலே பிரதேசத்தில் வைத்து, ஞானசார தேரரை கைது செய்ய, கொழும்பு திட்டமிட்ட குற்றப் பிரிவு அதிகாரிகள் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியை அடுத்து, குருநாகல், மல்லவபிட்டிய பள்ளிவாசல் மீது பெற்றோல் குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், இந்த பெற்றோல் குண்டு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக குருநாகல் மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கிரகரி குரே உத்தரவின் பேரில் இடம்பெற்ற மிக நீண்ட பொலிஸ் விசாரணைகளின்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் 2 பேர் நேற்றுமுன்தினம்(14) கைதுசெய்யப்பட்டதுடன், மேலும் 4 பேரைக் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், அவர்கள் தற்பொழுது குறித்த பிரதேசத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்துடன், ரக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தும் நோக்கில் செயற்பட்டதாகக் குற்றம் 'மத்தப்பட்டு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் அசேனாமா ஜயவர்தன உத்தரவிட்டார்.இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் குருநாகல் - முத்தெட்டிபொலவைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் குற்றமற்றவர்கள் என அவர்களுடைய உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.பொலிஸ் தலைமையக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் குருநாகல் பகுதிக்கு விஜயம் செய்துள்ள நிலையில், அவரை திருப்திப்படுத்துவதற்கான அப்பாவி இளைஞர்கள் இருவரை குருநாகல் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## உள்ளூராட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நாம் தயாராகிவிட்டோம். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் பட்டியலும் தற்போது தயாராகவிட்டது. எனவே தேர்தலை பிற்போடும் நோக்கம் எமக்கில்லை.

அத்தோடு, அடுத்த பாராளுமன்ற அமர்வில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பிலான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பவும் அரசு தீர்மானித்துள்ளது.

மேலும், உள்ளூராட்சித் தேர்தலின் போது சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களும் எம்முடன் தான் இருப்பார்கள். மாறாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றியை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் செயற்படுபவர்கள் மட்டுமே ஜி.எல். பீரிஸின் கட்சியுடன் இணைந்து செயற்படுவார்கள். இவ்வாறானவர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் கட்சியின் மத்தியக் குழுவினால் பாரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றுக் குறிப்பிட்டார்.

## குழப்பத்திற்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வேண்டாமென்று பொலிஸாரையும் நீதிமன்றத்தையும் எந்தவொரு பிரஜையும் பலவந்தப்படுத்த முடியாது. சட்டம் தனது கடமையை உரிய முறையில் மேற்கொள்வதற்கு எந்தவொரு பிரஜையும் இடைஞ்சலாக, அதற்கு குறுக்கீடாக செயற்பட்டாலும் அவருக்கெதிராக முதலில் நடவடிக்கை எடுப்பதன் மூலமே சட்ட ஆட்சியை வலுப்படுத்த முடியும். மாறாக குற்றவாளிகளை பாதுகாக்கும் வகையில் கருத்துச் சொல்வது, கோரிக்கை விடுப்பது, பலவந்தப்படுத்துவது சட்டத்துக்கு முரணான செயலாகும்.

ஒரு நாட்டிலே சட்டம் ஒழுங்கு இல்லையென்றால் அது காட்டரசாங்கமாகவே மாறவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படும்.

ஞானசாரதேரர் ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறையில் இருந்தவர். அளுத்கம இனக் கலவரம் தொடர்பில் அவருக்கு எதிராக 50க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் இருக்கின்றன. சிறையில் இருந்த ஒருவரை மீண்டும் இன்னுமொரு குற்றச் செயலுக்காக கைது செய்தால் நாட்டிலே எவ்வாறு இரத்த ஆறு ஓட முடியும்? ஞானசாரரை பாதுகாப்பதற்காக ஒரு கூட்டம் வெறுமனே ஒரு மாயையை ஏற்படுத்தி பீதி ஒன்றை உருவாக்க நினைக்கின்றனர். சட்டத்தின் முன் எல்லோரும் சமனே. வேண்டுமெனில் ஞானசாரர் தவறு இழைக்காமல் தண்டிக்கப்பட்டால் அல்லது கைதுசெய்யப்பட்டால் உச்ச நீதிமன்றத்திற்கு சென்று அடிப்படை மனித உரிமை வழக்கு தாக்கல் செய்து, நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும். இதனை விடுத்து வீதிகளில் தமது சண்டித்தனத்தை காட்டிக்கொண்டிருக்க கூடாது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஆஜராகாமல் ஒளிந்து இருக்கும் அவரை கைதுசெய்தால் இரத்த ஆறு ஓடுமென கூறிவரும் விதானகே, ஏதோ ஒரு உள் நோக்கத்திலேயே இவ்வாறு கதைக்கின்றார். இரத்தக் களரி ஒன்றை உருவாக்கி நாட்டில் ஏதோ ஒரு குழப்பத்தை ஏற்படுத்த இந்த இயக்கம் முஸ்தீபுகளை செய்து வருவதன் பிரதிபலிப்பாகவே இதனைக் கருத வேண்டியிருக்கின்றது. எனவே தயவுதாட்சண்யமின்றி டிலந்த விதானகேயும், அவருடன் சார்ந்தவர்களும் கைதுசெய்யப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றோம். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## ஞானசாரதேருக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முகமாக ஞானசார தேரினால் உயர்நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட முன்பிணை மனு குறித்த விசாரணையும் எதிர்வரும் 22 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நீதிபதிகளான பிரியசாத் டெப், அனில் குணரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் குறித்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த அறிவிப்பும் விடுக்கப்பட்டது.

மேற்படி இந்த மனுவை ஞானசார தேருக்கான ஜனாதிபதி சட்டத்தரணி டிறந்த வரலியத்த சமர்ப்பித்தார் என்பதும் இந்நிலையிலேயே தேருக்கு எதிராக கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கட்டார்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட அரபு நாடுகளில் சுமார் 700.000 (ஏழு இலட்சம்) இலங்கைத் தொழிலாளர்கள் தொழில்புரிந்து வருகின்றனர். இவர்கள் மூலமாக இலங்கைக்கு வருடாந்தம் 70.000 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட அந்நிய செலாவணி கிடைத்து வருகின்றது. தற்போது இந்த அந்நிய செலாவணி வருகையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஊடாக அறிய முடிகின்றது.

அதேநேரம் மத்திய கிழக்கில் கட்டார் பிரச்சனையை மையமாக வைத்து மீண்டும் ஒரு ஆயுத முரண்பாடு ஏற்படுமானால் அதன் விளைவாக பெற்றோலிய ஏற்றுமதிகளில் ஏற்படுகின்ற தடைகளால் இலங்கை போன்ற சிறிய நாடுகள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். பெற்றோலிய விலை ஏற்றம் ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் இருந்து வருகின்றது. அதே நேரம் இலங்கை அரசாங்கம் கட்டாருக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஒருசில நாடுகள் சவுதி அரேபியாவைப் பின்பற்றி கட்டாருடனான உறவுகளைத் துண்டிப்பதை ஆலோசித்து வந்தாலும் இலங்கை அதன் நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று அறிவித்திருக்கின்றது.

சவுதி அரேபியாவின் கட்டார் மீதான இத்தகைய நடவடிக்கை அளமான புலனாய்வின் அடிப்படையில் மேற்கொளளப்பட்டதாக இல்லை என்ற தகவல்களும் வெளியாகியிருக்கின்றன. குறிப்பாக கட்டார் அயல் நாடான ஈரானுடனான நெருக்கமான உறவை கடைபிடித்து வருவதை சவுதி அரேபியா நீண்டகாலமாக விரும்பவில்லை. ஏனெனில் ஈரான் இஸ்லாத்திற்கு முரண்பாடமான ஷியாக் கொள்கையை பரப்பும் ஒரு நாடாக இருந்து வருகின்றது. இதில் ஒருவகையில் உண்மை இருக்கின்றது. கடந்த வருடம் துருக்கியில் ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடியின் பின்னணியிலும் இந்த ஷியாக்களின் செயற்பாடுகள் இருந்திருக்கின்றது. எனினும் எர்துகான் அந்த நெருக்கடியை சமாளித்தாலும் இன்னும் திரைமறையில் துருக்கியின் ஆட்சிக்கு எதிரான செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றது. அதற்கான சர்வதேச வலைப்பின்னல் உலகம் முழுவதிலும் இருந்துகொண்டு செயற்படுத்தப்படுகின்றது.

இந்த தகவல்களின் அடிப்படையில் என்றோ ஒருநாள் சவுதி அரேபியாவுக்குள்ளும் அதன் நேச நாடுகளின் ஊடாக ஊடுருவல் நடைபெறவும் ஆட்சி நிர்வாக கொந்தளிப்புக்களை ஏற்படுத்தவும் முடியும் என்ற எதிர்பார்ப்பு சவுதி அரேபியாவுக்கு இருந்து வருகின்றது. ஆதனால் ஈரானுடனான உறவைப் பேணும் நாடுகளை முடக்க சந்தர்ப்பம் பார்த்திருந்த சவுதி அரேபியாவுக்கு கட்டார் வாய்ப்பாக அமைந்தது. இந்நிலையில் இந்த மத்திய கிழக்கு முரண்பாட்டை சுமுகமான முறையில் முடிவுக்கு கொண்டு வருவதற்காக துரக்கியும் குவைத்தும் மும்முரமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. துருக்கி ஜனாதிபதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ரம் உடனும் துரக்கியின் மன்னர் ஷபா அல் அஹமத் அல் ஷபா ஏனைய அரபு நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளார். சுஅரபு நாடுகள் பிணக்குகளை பெச்சுவார்த்தைகளின் மூலம் பேசித் தீர்த்துக்கொள்ளாவிட்டால் முரண்பாடுகள் ஆயுத மோதலுக்கு வழிவகுக்கும். அதனால் அரபு நாடுகள் ஒற்றுமைப்பட வேண்டும். ஒற்றுமைப்படாவிட்டால் பாரிய பின்விளைவுகளையும் அழிவுகளையும் சந்திக்க நேரிடும் என்று குவைத் மன்னர் ஷபா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும் தற்போதைய நிலையில் கட்டாரில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் ஒரு ஆயுத மோதலுக்கான வாய்ப்பாக இல்லை. அத்தகைய அறிகுறிகளும் தென்படவில்லை. இருந்தாலும் கட்டார் ஒருபோதும் சவுதி அரேபியாவின் நிபந்தனைகளை ஏற்று அடிபணியும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஏதோ ஒருவகையில் சவுதி அரேபியா இவ்வாறு தமது நேச நாடுகளுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து நிபந்தனைகளை விதித்து அடிபணியச் செய்து ஒரு மத்திய கிழக்கில் வல்லரசாக நினைக்குமானால் அது எதிர்காலத்தில் புதிய ஒரு ஆயுத மோதலுக்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.




# ஐ போன்களை பரிசாக வென்ற கொமர்ஷல் வங்கியின் இணையத்தள வாடிக்கையாளர்கள்




கடந்த மூன்று மாதங்களாக கொமர்ஷல் வங்கியின் இணையத்தள வங்கிச் சேவையைப் பாவித்த வாடிக்கையாளர்களில் ஆறு அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் வங்கி மேற்கொண்ட ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஐ போன்களை பரிசாக வென்றுள்ளனர். இந்த ஊக்குவிப்புக் காலப்பகுதியில் தமது கணக்கு மீதிகளை சரிபார்க்கவோ அல்லது கட்டணங்களை செலுத்தவோ வங்கியின் இணைய மேடைக்குள் பிரவேசித்தவர்கள் மத்தியில் இருந்தே இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.




# இலங்கையில் நான்காவது முறையாக மொபிடெல் வழங்கிய Google I/O 2017 விரிவாக்கல் நிகழ்வு



Sri Lanka Telecom Mobitel We Care. Always.

இலங்கையின் தேசிய கையடக்கத்தொலைபேசிச் சேவை வழங்குநரான மொபிடெல், அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட Google I/O 2017 நிகழ்வினை, மே மாதம் 17ஆம் திகதி இரத்மலானையில் உள்ள Stein கலையரங்கத்தில் நடத்தியது. சர்வதேச நிகழ்வான Google I/O 2017 நிகழ்வினை எமக்காக வருடாவருடம் ஒழுங்கு செய்கிறது மொபிடெல். மொபிடெல் சேவையானது, இந்த நிகழ்வு நடைபெறும் அதே தருணத்தில் உள்நாட்டைச்சேர்ந்தவர்கள் இங்கிருந்தபடியே அந்த நிகழ்வின் முழுப்பயனை பெறுவதற்கு சர்வதேச இணைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் சந்தர்ப்பம் வழங்குகிறது.

இந்தநிகழ்வில் கணனி தொழில்நுட்ப வழங்குனர்கள், கணனி தொழில்நுட்பவியலாளர்கள், தொழில்நுட்ப ஆர்வலர்கள், தொழில் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளம் கண்டுபிடிப்பாளர்கள் உட்பட பலரும் பங்குபற்றினார்கள்.

இந்த நிகழ்வானது, சன்பிரான்சிஸ்கோவில் நடத்தப்படும் சிறப்பான கலந்துரையாடல்கள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றில் நேரடியாக இங்கிருந்து நாம் பங்கேற்பதன் மூலம் அடுத்த தலைமுறைக்கான புதிய மொபைல் தொழில்நுட்பம் தொடர்பான விடயங்களை அறியவும் உள்ளூர் வழங்குநர்களின் தொழில்நுட்பங்கள் தொடர்பாக பலரை சந்திக்கவும் வாய்ப்பளித்தது. அத்தோடு இந்நிகழ்வில் பல பொழுதுபோக்கு அம்சங்கள்,சிறப்பான உணவு உபசரிப்பு நடவடிக்கைகள் மற்றும் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள CommunicAsia 2017 நிகழ்வில் பங்கேற்க குலுக்கல் முறை மூலமான வாய்ப்பு என்பன ஒழுங்குசெய்யப்பட்டன. மொபிடெல் சேவையானது "Inspire Sri Lanka" என்ற பெயரில், எமது எதிர்காலத்தை எண்ணி புதிய தொழில்நுட்பத்தினை கண்டுபிடிக்கும் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு களம் அமைத்து கொடுப்பதன் மூலம் புதிய தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு வழிவகுக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் ஒரு போட்டி நிகழ்ச்சியை முன்னெடுத்தது. ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளில் (SDG) ஒன்றான அனைவரையும் ஒன்றிணைத்து இந்த உலகத்தை பாதுகாக்கவும் வறுமையை ஒழிப்பதற்கும் உறுதியளிக்கும் தன்மை தொழில்நுட்பத்துக்கே உண்டு என்று சொல்லப்பட்டமைக்கு ஏற்ப இந்த போட்டியானது இளம் தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் தொழில் முனைவோர் மத்தியில் படைப்பாற்றலை ஊக்கப்படுத்துகிற அதேவேளை வன்பொருள் மற்றும் மென்பொருள் சார்ந்த புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் புதிய கலவை முறைகளை உருவாக்குவதில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முன்னெடுக்கப்பட்டது.

இந்த போட்டியில் வெற்றிபெற்ற அணியினருக்கு சிங்கப்பூரில் நடைபெறும் CommunicAsia 2017 நிகழ்வுக்கு செல்வதற்கான டிக்கட்டுக்கள் வழங்கப்பட்டன. Google நிறுவனமானது அமெரிக்காவின் சன்பிரான்சிஸ்கோவில் வருடாந்த கூகுள் உருவாக்குநர் மாநாட்டை நடத்தி வருகிறது.




# Salary Smart திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள HNB




ஹட்டன் நஷனல் வங்கி அண்மையில் நன்மைகள் பலவற்றை தன்னகத்தே கொண்ட சம்பள சேமிப்புத்திட்டமான 'Salary Smart' இனை அறிமுகப்படுத்துகிறது.

சம்பள சேமிப்புக்கணக்கினை வைத்திருப்பவர் மட்டுமன்றி அவரது குடும்பத்தினரும் இதன்மூலம் சலுகைகளைப் பெறமுடியும். குறிப்பாக இந்த 'Salary Smart' இன் சிறப்பு சலுகைகளை சம்பளக்கணக்கு வைப்பாளர் மட்டுமன்றி, அவரது வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் பெற்றோர் ஆகியோரும் பெற்றுக்கொள்ள முடிவதுடன் ஒரு வாடிக்கையாளரின் ஒட்டுமொத்த வங்கித் தேவைகளையும் பூர்த்தி செய்வதன் வாயிலாக அவரது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவி புரிகின்றது.

திட்டத்தின் மிகச் சிறந்த அம்சங்களான வருடாந்தம் புதுப்பிக்கத்தக்க 3 மாத சம்பளத்தைப் பெறக்கூடிய நிரந்தர மிகைப்பற்று வசதி அல்லது சம்பளத்தின் 50% உடனடி முற்பணம், பிளாட்டினம் கடன்அட்டை மற்றும் அட்டையுடன் வாழ்க்கைத்துணைக்கான இலவச மேலதிக கடன் அட்டை காசோலைப்புத்தகம் மற்றும் சாதாரணமாக 50,000 ரூபாவை வைப்பிட்டு ஆரம்பிக்கக் கூடிய அதியுயர் வட்டியுடனான முதலீட்டு சேமிப்புக்கணக்கை வெறும் 5,000 ரூபாவுடன் ஆரம்பித்தல், கணக்குகளுக்கிடையே இலகுவான பணப் பரிமாற்றம் போன்றவை உள்ளடங்குகின்றன. கவர்ச்சிகரமான வட்டிவீதத் திட்டங்கள், சிறப்பு சிறுவர் சேமிப்புத்திட்டங்கள் குறிப்பாக வங்கியின் பங்களிப்புடன் கூடிய சிங்கித்தி கிரி கட்டியோ போன்றன இந்தத்திட்டத்திற்கான சிறப்பு சேவைகளாக வாடிக்கையாளரின் கருத்துக்களையும் தேவைகளையும் கருத்திற்கொண்டு ஹட்டன் நஷனல் வங்கியால் மிகக் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் கிடைக்கும் சலுகைகள் எண்ணிலடங்காதவை - மிகக் குறைந்த வட்டியுடன் கூடிய தனிநபர் தவணைக்கடன் வசதிகள், பாதுகாப்புப் பெட்டக வாடகைத் திட்டங்கள் மற்றும் கடன் ஒருங்கிணைப்பு பக்கேஜ் எனப் பல சலுகைகளை வழங்கும் அதேவேளை, வேறு எந்த ஒரு வங்கியுடனும் மேற்கொண்ட பொறுப்புக்களை ஒரு வாடிக்கையாளர் சிறப்புச் சலுகைகள் சகிதமாக ஹட்டன் நஷனல் வங்கிக்கு மாற்றிக்கொள்ள முடியும்.

எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு அவர்களது சம்பளத்தை மையப்படுத்தி அந்த மிகச் சிறப்பான திட்டத்தை வழங்குவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். மேலும் இந்தத் திட்டத்தின் வாயிலாக வாடிக்கையாளர் மட்டுமன்றி, அவரது குடும்பமும் பயனடைய முடியும் என ஹட்டன் நஷனல் வங்கியின் வைப்புக்கள் மற்றும் ரெமிட்டன்ஸ் பிரிவின் உதவி முகாமையாளர் மற்றும் ஊழியர் அனுபவ மேலதிகாரி கெலும் விஜேசூரிய தெரிவித்தார்.

# செலிங்கோ லைஃப் வாடிக்கையாளர்களுக்கு துபாயில் காலத்தை கழிக்கும் வாய்ப்பு

அண்மையில் தெரிவு செய்யப்பட்ட செலிங்கோ லைஃப் வாடிக்கையாளர் குழுவொன்றுக்கு தமது குடும்பத்தவர்கள் சகிதம் துபாயில் நான்கு தினங்களை உல்லாசமாகக் கழிக்கும் வாய்ப்பு கிட்டியது. செலிங்கோ லைஃப்பின் குடும்ப சவாரி பாரிய ஊக்குவிப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் இந்த வாய்ப்பு வழங்கப்பட்டது.

பத்து வாடிக்கையாளர்கள் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் 40 பேரை உள்ளடக்கிய குழுவுக்கே இந்த வாய்ப்பு கிட்டியது. துபாயின் மிகவும் முக்கிய கண்கவர் பிரதேசங்களை மையப்படுத்தி பாலைவன சவாரி, கப்பல் பயணம், பாம் ஜுமேரா, பேர்ஜ் அல் அராப், சபீல் மாளிகை, தங்க சந்தை, அல்பாஹிதி கோட்டை, துபாய் நூதனசாலை ஆகிய இடங்களுக்கான விஜயத்தோடு ஒரு முழு நாள் பொருள் கொள்வனவு (ஷொப்பிங்) ஐயும் உள்ளடக்கியதாக இந்த சுற்றுலா அமைந்திருந்தது. இந்தக் குழுவினருக்கு துபாயின் முன்னணி நட்சத்திர ஹோட்டலில் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டது. பிரபல நடிகர் ரொஷான் ரணவன அவரின் மனைவி குஷலானி ஆகியோரும் இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் வர்த்தக முத்திரை தூதுவர்களாக இந்தக் குழுவோடு இணைந்து கொண்டனர்.

செலிங்கோ லைஃப் குடும்ப சவாரி திட்டத்தின் பத்தாவது இணைப்பில் இரண்டாவது கட்டமே இந்தக் குழுவின் துபாய் விஜயமாகும். மே மாத முற்பகுதியில் வாடிக்கையாளர் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2000 பேர் லெஷர் வேர்ல்ட் பூங்காவில் ஒரு தினத்தை உல்லாசமாகக் கழித்தனர். மேலும் 50 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் சிங்கப்பூர் செல்லும் வாய்ப்பை பெற்றுள்ளனர். அதே போல் இன்னும் ஐந்து வாடிக்கையாளர்களின் குடும்பங்களுக்கு இந்த திட்டத்தின் பாரிய வெகுமதியான இங்கிலாந்து செல்லும் வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

ஆயுள் காப்புறுதி பிரிவின் மீதான ஊடுருவலை அதிகரிக்கும் நோக்கிலும் காப்புறுதி கொள்கைகளை செயற்படு நிலையில் வைத்திருக்கின்றமைக்கான ஒரு வெகுமதியாகவும் வழங்கப்படும் இந்த குடும்ப சவாரி வெகுமதியே இலங்கையில் காப்புறுதித் துறையில் வழங்கப்படும் மிகப் பெரிய ஊக்குவிப்பு வெகுமதியாகும்.







# புத்தாண்டு கருத்தாக்க விளையாட்டு நிகழ்வில் DFCC வங்கி




DFCC வங்கியின் விளையாட்டு நிகழ்வானது அண்மையில் ஹவ்லொக் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதியன்று கோலாகலமாக இடம்பெற்றது. புத்தாண்டில் DFCC உடன் நாம் ('Aluth Avuruddai DFCC Api') என்ற கருத்தாக்கத்துடன் இடம்பெற்ற இந்த நிகழ்வானது, நாள் முழுவதும் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது. வங்கியின் கிளைகளை சேர்ந்த ஏழு குழுக்கள் இந்த போட்டியில் பங்கேற்றன. குறித்த கருத்தாக்கத்துடன் இணையும் வகையில், குறித்த இந்த குழுக்களுக்கு ஜோடிட நட்சத்திரங்களின் பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன.

விளையாட்டு உணர்வினை ஊக்குவித்தல் மற்றும் குழு அங்கத்தவர்களை, மேர்க்கன்டைல் மற்றும் தேசிய மட்டங்களில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்பதற்கான ஊக்கத்தினை அளிப்பதான வரலாற்றினை நிறுவனம் கொண்டுள்ளது.

சைக்கிளோட்டப்போட்டி முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து 30ற்கும் மேற்பட்ட பாரம்பரிய புதுவருட விளையாட்டு போட்டிகளான போர்த்தேங்காய், கொடியும் கம்பும், எலுமிச்சை கரண்டி ஓட்டம் போன்றவை இடம்பெற்றன.

# CAKE LABS விஸ்தரிக்கப்பட்டு Sysco Labs ஆக அங்குரார்ப்பணம்



Syscoன் உரிமையாண்மையின் கீழ் இயங்கும்,உணவகங்களுக்கான தொழில்நுட்பங்களை வழங்குவதில் முன்னோடியாக திகழும் CAKE LABS தனது புதிய அலுவலகத்தை அங்குரார்ப்பணம் செய்துள்ளதுடன்,தனது நிறுவனத்தின் பெயரை Sysco Labs என மாற்றம் செய்துள்ளதாகவும் அறிவித்துள்ளது. Sysco வின் அங்கமாக, உயர் தரம் வாய்ந்த தொழில்நுட்ப தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கும் வகையில் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

உணவுத்தயாரிப்புகளை விநியோகித்தல்,சந்தைப்படுத்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றில் சர்வதேச ரீதியில் முன்னணியில் திகழும் Sysco, அமெரிக்காவை தளமாகக் கொண்டு தனது செயற்பாடுகளை முன்னெடுக்கிறது. ஃபோர்ச்சூன் 60 நிறுவனமாக Sysco திகழ்வதுடன், 65,000க்கும் அதிகமான ஊழியர்களையும் கொண்டுள்ளது. 90க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த 425,000க்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு தனது சேவைகளை வழங்கி வருகிறது. Sysco வின் செயற்பாடுகள் நான்கு கண்டங்களில் வியாபித்துள்ளன. இதன் வருடாந்த வருமானம் 55 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடந்து பதிவாகியிருந்தது. Sysco Labs மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தின் சிரேஷ்ட உப தலைவரான பிரையன் பீச் கருத்துத் தெரிவிக்கையில்,புதிய Sysco Labs அலுவலகத்தின் அங்குரார்ப்பணம் என்பது, கடந்த 6 வருடங்களில் இலங்கையில் CAKE LABS ஊழியர்களால் பூர்த்தி செய்திருந்த சிறந்த வேலைகளின் இயற்கையான புரட்சியாக அமைந்துள்ளது. புத்தாக்கம் மற்றும் முன்நோக்கிய சிந்தனை ஆகியவற்றுக்கு இது ஒரு நீடிப்பாக அமைந்துள்ளதுடன்,உணவு சேவைத்துறைக்கு எம்மால் தொடர்ந்தும் முன்னணி தொழில்நுட்பங்களை வடிவமைப்பதற்கு இது உதவியாக அமைந்திருக்கும். சிறந்த திறமைசாலிகளை இனங்கண்டு அவர்களை பணிக்கு அமர்த்துவது தொடர்பில் நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதுடன்,சந்தையில் சிறந்த ஒன்றிணைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு நாம் தொடர்ந்து பங்காற்றுவோம். என்றார்.

# Hameedia காட்சியறையை மறுசீரமைத்து மீண்டும் திறப்பு




கொழும்பு ஹமீடியாவின் ஸ்டைலான வரலாற்றில் புதிய மைல்கல்லாக Crescat Boulevard காட்சியறையை மீண்டும் திறக்கின்றது. Hameedia இலங்கையில் பெரிதும் விரும்பப்படுகின்ற மற்றும் நம்பப்படுகின்ற ஆண்கள் ஆடையலங்கார துறையில் விஷேட நிபுணர்களாவர் ஆகும். புதிதாக மறுசீரமைக்கப்பட்ட இக்காட்சியறையானது நவீனத்துவம் மிக்கதாக காணப்படுவதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக நாமங்களினை வெளிநாட்டு தரங்களில் கொண்டுள்ளது.

இம்மீள் திறப்பு விழாவை கொண்டாடும் முகமாக ரீ Hameedia Crescat தமது வாடிக்கையாளர்களுக்கு சலுகையாக பரிசுக் கூப்பன்களை வழங்குகிறது. Hameedia காட்சியறையில் ரூ. 7500க்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ரூ. 1000 பெறுமதியான பரிசுக் கூப்பன் ஒன்றை பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக கொள்வனவு செய்யும் ஒவ்வொரு ரூ.2500 க்கும் ரூ.500 பெறுமதியான பரிசுக் கூப்பன் ஒன்றை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். எனவே இந்த ரமழான் பண்டிகைக்கு

அழகிய ஆடைகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளரின் இறுதிப் பட்டியல் தொகை ரூ.10,000 ஐ தொடும் பட்சத்தில் ரூ. 1000 மற்றும் ரூ.500 பெறுமதியான இரண்டு பரிசுக் கூப்பன்கள் வழங்கப்படும். அத்துடன் Crescat இல் அமைந்துள்ள மீள்திறக்கப்பட்ட நவீன காட்சியறைக்கு விஜயம் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மேலும் பல விஷேட சலுகைகளை

பரிசுக் கூப்பன்கள் மூலம் வழங்க Hameedia திட்டமிட்டுள்ளது. ஆண்களுக்கான தனிநபர் விருப்பத்திற்கமைய தைக்கப்பட்ட ஆடைகள் மற்றும் ஆயத்த நிலையில் உள்ள ஆடைகளுடன் பல வர்த்தக நாமங்களைக் கொண்ட விற்பனை நிலையமாக திகழ்வதுடன் Le Bond, Envoy, Signature, Raymond, Lee மற்றும் Adidas ஆகிய தரமான ஆண்கள் ஆடையணிகலன்களின் வர்த்தக நாமங்களையும் தன்னகத்தே

கொண்டுள்ளது. தற்திற்கும் ஸ்டைலுக்கும் ஓரே பெயரான Hameedia கடந்த 68 ஆண்டு காலமாக இலங்கையில் ஃபெஷன் ஐ கருத்தில் கொள்ளும் ஆண்களின் தேவையை பூர்த்திசெய்கிறது. ஃபெஷன் சார்ந்த முன்னோக்கு பார்வையும் அர்ப்பணிப்பும் நாட்டிலுள்ள ஆண்கள் ஆடையலங்கார துறையில் தனித்துவமாக திகழ்ந்திடச் செய்கிறது.

# வெள்ள அனர்த்தங்களில் பாதிப்படைந்த மக்கள் வங்கியின் பங்களிப்பு




நாடளாவிய 15 மாவட்டங்களில் நிலவிய சீரற்றகால நிலையால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்கள் மற்றும் மண்சரிவுகளில் பாதிக்கப்பட்ட சகோதர மக்களுக்கான நிவாரண உதவிகளை மக்கள் வங்கியின் சேவையாளர்கள் வழங்கினர். மக்கள் வங்கியின் இந்தநிவாரணஉதவிச்சேவையில் உணவுப்பொருட்கள் மற்றும் திரவாகாரம் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்தநிவாரணப் பொருட்களுடன் வரும் லொறியானது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட காலி,மாத்தறை, இரத்தினபுரி,மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 018th JUNE 2017